விலை ரூபா 2-00 16 பக்கங்கள்

ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 மாசி 4 ஐ. ஆகி 6 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (16—2—86) இதழ் 6

RECEIVED 17-2-1986 PERIODICALS DIVISION LIBRARY SRI LANKA

பொலீஸார் சுட்டே பிதா. பஸ்தியான் உயிரிழந்தார்!

அமெரிக்க ராஜாங்க இலாகா அறிக்கை

ர யட்டர்)

வண பிதா மேரி பஸ்தியான் பொலீஸாரின் துப்பாக்கிவேட்டுக்குப் பலியானதை இலங்கை அரசாங்கம் ஆதாரங்காட்டத் தவறியபொழுதிலும், 1985 ஜனவரி 6ம்திகதியன்று பொலிஸார் 'பயங்கரவாதிகள்' எனக்கருதப்பட்டோர்மீதுமேற்கொண்ட துப்பாக்கித்தாக்குதலின் போதே வண. பிதா மேரி பஸ்தியான் மரணமானுர் எனஅமெரிக்க ராஜாங்க இலாகா வெளியிட்டுள்ள [13ம் பக்கம் பார்க்க]

கோட்டைக்கருகில் அதிகாலை பயங்கரம்!



ஓய்வூதியம் பெறச் சென்று 'நிரந்தர ஓய்வு' பெற்ற அந்த மூவரையும் படத்தில் காணுகிறீர்கள்

பென்ஷன் பெறப்போன மூவர்பலி!

பலர் படுகாயம்!!

(கா. யோகநாதன்)

யாழ். கோட்டை இராணுவ முகாமிற்கு சமீபத்திலுள்ள ஓய்வூதிய கொடுப்பனவு காரியாலயத்திற்கு நேற்றுக் காலை ஓய்வூதியம்பெறச்சென்ற வயோதிபர்களில் மூவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர்கள்; பலர் காயமடைந்தனர்.

யாழ். டேவிட் வீதியைச் சேர்ந்த எம் இளையதம்பி [55 வயது], இளவாலை பரிய புலாணை சேர்ந்த வி. எஸ். அருளப்பா (77 வயது), யாழ். கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த எம். செல்லத்துரை (77 வயது) ஆகியோரே பலியானவர்களாவர்.

காலையில் கோட்டைப் பகுதியில் இருதடவை பலத்த குண்டு வெடிச்சத்தத்தை தொடர்ந்து தொடர்ச்சியாக துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும், அச்சமயம் ஓய்வூதியம் பெறநின்ற வயோதிபர்கள் துடிதுடித்து விழுந்ததாகவும் கூறப்படுகிறது

இச்சம்பவத்தில் காயமடைந்த முன்னாள் யாழ். ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவரும் மற்றும் காயமடைந்த இருவரும் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருவதாக கூறப்படுகிறது.

நேற்றுக் காலை 5-30 மணியளவில் பலியான மூவர் உட்பட 6 பேர் நேரகாலத்துடன் 'பென்சன்' எடுத்துக்கொண்டு வீடு திரும்புவதற்காக, முதல் நம்பர்கள் பெறும் பொருட்டு, ஓய்வூதிய கொடுப்பனவு காரியாலயம் நோக்கி வரிசையாக நின்றபோது இச்சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.

துவக்கு சூட்டுச் சத்தம் கேட்டு அவ்வீதியால் சைக்கிளில் வந்த சிலர் வாகனமொன்றின் மூலம், படுகாயமடைந்த மூவரையும் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து சேர்த்ததாகவும் வழியில் அவர்கள் மரணமானதாகவும் கூறப்படுகிறது.

(13ம் ங்க்கம் பார்க்க)

"6 பேர் துடிதுடித்து விழுந்தார்கள்"

[யாழ்ப்பாணம்]

''ஓய்வூதியம் பெறுவதற்கு காலை 5மணிக்கு, முதலாம் குறுக்குத்தெரு, கடற்கரை வீதி சந்திக்கு வந்தேன். அப்போது ஓய்வூதியக் கொடுப்பனவுக்காரியாலயத்திற்கு சமீபத்தில் ஓய்வூதியம்பெறசுமார் 10 பேர்வரை நின்றனர் காலை 5 மணிக்கு கோட்டை பகுதியில் பலத்த வெடிச் சத்தம் கேட்டது. அரைமணித்தியாலத்தின் பின் மற்றொரு வெடிச்சத்தமும் அதைத் தொடர்ந்துதுப்பாக்கி வெடிச் சத்தங்களும் கேட்டன. ஓய்வூதியம்பெற நின்றவர்களில்

[13ம் பக்கம் பார்க்க]

படையினர் போட்ட 'பாம்பு மாலை'!

[மட்டக்களப்பு]

செங்கலடி - பதுளை வீதியில் தேடுதல் நடாத்திய ஆயுதப் படையினர், ஒரு வீட்டிலிருந்த இளம்பெண்களைக் கடுமையாகத் தாக்கிவிட்டு, அப்பெண்ணின் 16 வயது சகோதரனையும், ஒரு இளம் பெண்ணையும் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இடம் பெற்றது.

கைது செய்யப்பட்ட இளம் பெண் நிச்சயதார்த்தம் செய்

[13ம் பக்கம் பார்க்க]

இந்து – முஸ்லிம் ஐக்கியத்துக்காக

இளைஞர் சந்திப்பு

(கொழும்பு)

மூதூரிலுள்ள தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகள் பற்றி ஆராய திருமலை இந்து இளைஞர் மன்றத்தினர், கொழும்பு முஸ்லிம். இளைஞர் மன்றத்தினரை அண்மையில் சந்தித்தனர்.

கொழும்பில் இம்மாதம் 12ம் திகதி நடைபெற்ற இச்சந்திப்பில், மூதூரிலுள்ள தமிழ்-முஸ்லிம் அகதிகளின் நிலை பற்றியும். இப்பிரதேசத்திலுள்ள தமிழ்-முஸ்லிம் மக்

(13-ம் பக்கம் பார்க்க)

INTRODUCING
A MODERN MEDICAL
LABORATORY IN J FFNA
நவீன மருத்துவ ஆய்வுகூடம்
யாழ். நகரில் ஆரம்பம்
Diagnolabs
டயக்னேலப்ஸ்
மருத்துவ ஆய்வுகூட சேவை
மருத்துவ நிபுணர்கள், வைத்தியர்கள்,
நோயாளர்கள் கவனத்திற்குரியது.
இரத்தம், சிறுநீர், மலம் மற்றும் சரீர நீர்களின் பரிசோதனைகள் தேர்ச்சிபெற்ற மருத்துவ ஆய்வுகூட இயலாளர்களினுல் மருத்துவ ஆய்வுகூட நிபுணரின் ஆலோசக அனுசரணையுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
உங்கள் வசதிக்காக இச்சேவை
யாழ். பெரிய ஆஸ்பத்திரியின் முன்
அமைந்துள்ளது.
இங்கு நீங்கள் துரிதமான, தரமான
சேவையைப் பெறுவீர்கள்.
574/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஆகாயத்திலிருந்து

மீண்டும் தாக்குதல்; தொடர்ந்தும் பதற்றம்!

(ஏ. வி. மாணிக்கம்)

குரும்பசிட்டிப்பகுதியில் மூன்ருவது நாளாக நேற்றும் ஹெலிக்கொப்டரிலிருந்து மோட்டர் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது. இத்தாக்குதலினுல் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான வீடும் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான காரும் பலத்த சேதம் அடைந்தது. வீட்டிலிருந்த இரு பெண்கள் படுகாயமடைந்தனர். அங்கிருந்த சிறுபிள்ளைகளும், கைக் குழந்தையும் வீட்டின் 'பிளாட்' ஓரத்தில் பதுக்கிக்கொண்டதால் உயிராபத்தின்றித் தப்பிக்கொண்டனர்.

இவ்வீட்டுக்கருகாமையில் உள்ள ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் கோவிலும் அச்சுற்று

(13ம் பக்கம் பார்க்க)

அரி விளம்பரம்

தேவை

பெண்பிள்ளைகள் படிக்கும் அக்கடமிக்கு O/L இற்கும், A/L இற்கும் கற்பிக்கக்கூடிய ஆசிரியைகள்தேவை. தகைமையுடன் விண்ணப்பிக்கவும்: 252, ரூபன் ஸ்ரோர்ஸ், நாவலர் ரோட், யாழ்ப்பாணம். (C 801)

ரியூட்டரி ஒன்றிற்கு தாங்கள் விரும்பிய பாடங்களை O/L, A/L வகுப்பிற்கு கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை: 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (C 802)

நெல்லை க. பேரனின் முதற் பரிசு பெற்ற ''விமானங்கள் மீண்டும் வரும்'' குறுநாவல் இப்போது யாழ்ப்பாணத்தில் சகல புத்தகக் கடைகளிலும் விற்பனையாகிறது. பிரதி ரூபா. 9-50 சதம் மட்டும். [C 459)

வெள்ளைநிற உமிச்சாம்பல் தொகையாகத் தேவை. தொடர்பு கொள்க: அண்ணா இன்டஸ்றீஸ், இணுவில். போன்: 23412. A 245]

அனுபவமுள்ள பிளேட்டின் மெஷின்மைன்டர் தேவை. திறமைக்கேற்ற சம்பளம்வழங்கப்படும். நேரில் சமுகந்தரவும். தேவி அச்சகம், 114/19. நாவலர் வீதி-யாழ்ப்பாணம். (C 696)

வடமராட்சியில் ஓர் தையல் நிலையமும், ஓர் கைத்தறி நெசவு நிலையமும் பொறுப்பேற்று நடத்துவதற்கு 10 வருட அனுபவமுள்ள இரு பெண் இயக்குநர்கள் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: C731, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 731]

எழுதுவினைஞர் தேவை. அழகான எழுத்து, கணக்கு வைக்கும் அனுபவம் மேலதிக தகைமை. உடன் நேரில் வரவும்: பே. சோமசுந்தரம், 411/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். C 753

சேவிஸ் ஸ்ரேசன் வேலையில் அனுபவம் உள்ளவர்கள்(கழுவுபவர்கள்) உடன் தேவை. நேரில் வரவும். ''லக்கி சேவிஸ்'' ஸ்ரேசன், மல்லாகம். [C-707]

காசாளர் தேவை. கணக்குப்பதிவு அறிவு அவசியம் யாழ். நகர் எல்லைக்குட்பட்டவருக்கு முன்னுரிமை. தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும்: TAXMAN, கன்னுதிட்டி, யாழ்ப்பாணம். [C 772]

சேவை

மலிவாகவும் குறித்த நேரத்தில் வீட்டுத் தளபாடங்கள், நிலை, ஜன்னல், கதவுகள் வீட்டு தச்சுவேலை அனைத்துக்கும் UNITED ENGINEER CARPENTRY WORKSHOP, சாயி மர அரிவு ஆலை, 91, ராமநாதர் வீதி, கலட்டி யாழ்ப்பாணம், [C 791]

திருமணம் நிறைவேற்ற காணி வீடு வாங்க விற்க எம்மிடம் தொடர்பு கொள்ளவும்: ஸ்ரீ மாவை விநாயகர் மங்கள ஏஜன்சி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. கிளை: 52/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்: [C 775]

வைத்தியம்

நாட்பட்ட வியாதிகளுக்கு விசேஷ சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் எம் வி. தில்லைசந்திரன், Registered Homoeopath, 218/5, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (C 671)

விற்பனைக்கு

6 வார பொமரேனியன் பெண் குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. மனோன் மாஸ்ரர், நவாலி தெற்கு, மானிப்பாய், C 796

---

300 அடி நீளமான 2'' அலுகத்தீன் பைப் விற்பனைக்குள்ளது. சிறிதளவு மட்டுமே பாவித்தது. அத்துடன் வயரிங் செய்ய உகந்த புதிய ½'' P. V. C. குழாய்கள் 23 விற்பனைக்குண்டு. C. T. அன்ரனி ராஜா, அமலிவனம், சில்வா வீதி, வட்டக்கச்சி. [A 242]

வெளிநாடு செல்பவரின் வீட்டுத் தளபாடங்கள், தேக்கு அலுமாரிகள், Show case, எழுது மேசைகள், சாய்வுநாற்காலிகள்TeaTrolley Spray Gun, வெளியூர் கிளாஸ் வகைகள், Pyrex, கோப்பைகள், எவர் சில்வர் பித்தளைப் பாத்திரங்கள், Gas cooker. மின் ஸ்திரிகைகள், மின்விசிறிகள். எலக்றிக் அவன், Hot plate, மற்றும் துணிவகைகள் உடன் விற்பனைக்குண்டு. பத்மநாதன், ஆடியபாதம் ரோட், திருநெல்வேலி வடக்கு. மருத்துவக் கல்லூரிக்கும் திருநெல்வேலிச் சந்திக்குமிடையில். [C749]

நல்ல இன அல்சேஷன், கிறேட்டேன் பெண் நாய்களும், டசோன் ஆண் கறுப்புக் குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு; S. தியாகராசா, கேணியடிலேன், திருநெல்வேலி. [C 788]

NEL FARM பிறவுண் சேவற்குஞ்சுகள் 18-ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [C 769]

காங்கேசன்துறையில் மேல்மாடி வீட்டுடன் தொழிற்சாலை நடத்தக்கூடிய கட்டிடமும், கொழும்புத்துறையில் 10 பரப்பு காணியும், உடுவிலில் 4 பரப்பு காணியும், மாவிட்டபுரம் புகையிரத நிலைய வீதியில் 4 துண்டுக் காணியும், நல்லூர் வீரமகாகாளி கோவில் மேற்கு வீதியில் 1 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீ மாவை விநாயகர் மங்கள ஏஜென்சி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. கிளை: 52/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் [C 776]

---

2 மாதம் நிரம்பிய தூய இன அல்சேஷன் பெண் குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. 107, கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காடு. [C 778]

நல்ல நிலையிலுள்ள Crown 2 in 1 றேடியோ கசெட் ரெக்கோடரும், பாட்டுடன் கூடிய பதிவுசெய்த நாடாக்களும், Office Table விற்பனைக்கு உண்டு. ஞாயிற்றுக்கிழமையில் பார்வையிடலாம். தொடர்பு: 79, புங்கங்குளம் வீதி, கொழும்புத்துறை. [C 780]

மலிவு விலையில் தரமான டியூடரி வாங்குமேசை, கட்டில்கள், சாப்பாட்டு மேசை, குசினி மேசை, Dressing Table. UNITED ENGINEERS, சாயிமர அரிவு ஆலை, 91, ராமநாதர் வீதி, யாழ்ப்பாணம். [illegible]

மணப்பந்தல்

இந்து வேளாள அரசாங்க பட்டதாரி மணப்பெண்ணுக்கு 36 — 42 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. சீதனம் தரப்படும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். C 803

யாழ். இந்து உயர்குல வேளாள அரசாங்க உத்தியோகத்தருக்கு, நன்கு படித்த அழகான மணப்பெண் தேவை. வயது 30-33 இருக்கலாம். பெற்றோர் படத்துடன் தாடர்பு கொள்ளவும் விளம்பர இல:C 743, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 743]

யாழ். வடமாராட்சி இந்து உயர்குல வேளாள பெற்றோர் தங்கள் 33 வயது அழகான பயிற்றப்பட்ட கணித ஆசிரிய மகளுக்கு தகுந்த மணமகன் தேடுகிறார்கள். அரசாங்க கூட்டுத்தாபன அல்லது வங்கி சேவையிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது. வீடு வளவு உட்பட தகுந்த சீதனம் கொடுக்கப்படும். முழு விபரங்களுடன் சாதகக் குறிப்பையும் அனுப்பவும். விளம்பர இல. C 638, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் [C 638]

யாழ்ப்பாணத்தில் அரசாங்கத் தொழில் புரியும் 34 வயதுடைய இந்துவேளாள குல பெண்ணுக்கு மணமகன் தேவை. எட்டில் செவ்வாய் உண்டு. பட்டதாரி ஆசிரியர் வங்கித்தொழில் அல்லது தொழில் நுட்பத்துறையில் உள்ளவர் விரும்பத்தக்கது. ரொக்கமும் காணியும் கொடுக்கப்படும். சாதகக் குறிப்புடனும், விபரங்களுடனும் தொடர்பு கொள்க: விளம்பர இல. C 80', C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். C 804

வகுப்புகள்

O/L 8-ம், 9-ம் வகுப்புக்களுக்கு விசேட சித்தி. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் பட்டதாரி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. [C 735]

B.A, G.A.Q. - புவியியல் ஆசிரியர் குணராசாவின் புவியியல் விரிவுரைகள் 15-02-86 ஆரம்பமாகின்றன: 82, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். [C748]

வயறிங், வெல்டிங், ரேடியோ அன் ரீ. வி. மோட்டார் மெக்கானிசம், மோட்டர் வைண்டிங் - புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. மிகக் குறைந்த சட்டணம். சான்றிதழ் பெறுமதியானது. தொடர்பு; VISPA ENGINEERING 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 740

காணவில்லை

கேப்பை இனத்தைச் சேர்ந்த சிவப்புநிறமுடைய SS குறியுள்ள பசுமாடு ஒன்றைக் காணவில்லை. கண்டவர்கள் கீழ்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். S. சின்னத்துரை, இல. 11, பிறவுண் வீதி, 5 th Lane, யாழ்ப்பாணம். [illegible]

CLASSES

Special English classes, two streams; one for ''O': Level and the other for Beginners by a teacher experienced in teaching for foreign embassy staff. Limited accommodation - Apply before 1st March. Vairavar Kadadcham, Palaly Road, Thirunelvely, Jaffna. C 730

கல்வி

நோர்வேயில் பல்கலைக்கழகம்; உயர் பாடசாலைகளில் மேற்படிப்பு; புலமைப் பரிசில்; கடனுதவி ஆகிய விபரங்கள் பெற 20/- பெறுமதி முத்திரைகளுடன் சுயவிலாமிட்ட முத்திரை ஒட்டிய கவருடன்விண்ணப்பிக்கஅபிவிருத்தி தகவல் சேவை,விளம்பர இல: C 766, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். (C-766)

விற்பனைக்கு

நல்ல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு உண்டு. ''இரத்தின வாசா'' கருவேலடி லேன், [பழைய ஸ்ரேசன் ரோட்] கொக்குவில் கிழக்கு. [C 784]

English non-sticks new Saucepans, Pyrex wares, Pyrex Tea Set, Tea Trolley, குக்கர்கள், பெற்றோமார்க்ஸ், Burma Teak Almirah, Show-case, Bed-side Carpets, கட்டில்கள், அல்சேஷன் நாய்க்குட்டிகள், Dinner Plates Dressing Table மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு பத்மநாதன், ஆடியபாதம் ரோட், திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்குமிடையில். [C 793]

31வது நாள் நினைவஞ்சலி

வேலுப்பிள்ளை தங்கராஜா

அன்னை மடியில்:
04-07-1943
ஆள்பவன் பிடியில்:
17-01-1986

கதிகெட்ட வஞ்சகர்
வாழபாண்கொடுத்தாய்
மதிகெட்டஇராணுவத்
தார் உம் உயிர்பறித்
தார்
விதிகெட்ட நாங்கள்
வெதும்புகின்றோம்
ஒளிகெடா உங்கள்
எழில் முகம்காணுமல்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

மனைவி தமிழரசி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரங்கள், மாமா, மாமி, மைத்துனர்மார்.

வடலித்தோட்டம்,
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

C 728

அந்தியேட்டி அழைப்பு

மீனாட்சிசுந்தரம் சின்னத்தம்பி

தோற்றம்: 12-4-1903
மறைவு: 18-1-1986

18-1-86ல் காலமான எமதுஅன்னையின் அந்தியேட்டி கிரியைகள் 17-2-86 திங்கட்கிழமை நடைபெறும். இவ் வைபவத்தில் உற்றார், உறவினர் அனைவரும் கலந்து, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து, மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். ஈமச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

மகன்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

C 750

ஓர் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 24-4-1959
மறைவு : 16-2-1985



செலவன்

இ. சந்திரலிங்கம்

(நாகப்பா)

அன்புடனும் பாசத்துடனும் இன்சொல்லுடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் பெருமைகொள்ளச் செய்து ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு ஆழ்கடலில் மீளாது மறைந்து விட்டாயே எங்கள் அன்பு செல்வமே!

உங்கள் நினைவால் வாடுப் தந்தை, தாய், அண்ணன்மார்கள், தம்பிமார்கள், அக்காமார்கள், தங்கைமார்கள், மச்சான்மார்கள், மச்சாள்மார்கள், மருமக்கள், பெறுமக்கள், உற்றார், உறவினர்கள், உனது அன்புமுகத்தைக் காணுமல் வேதனையுடன் உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வடிவேலு இராமலிங்கம் குடும்பத்தினர்.

ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.

C 781

ஆயிரமாயிரம் இலங்கையர்கள்

வேலைகளை இழக்கும் அபாயம்!

மூன்று அரச தூதுக்குழுக்கள் மத்திய கிழக்கு விரைவு!

[கொழும்பு]

உலகச் சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் தமது வேலைகளை இழக்கும் அபாயம் உருவாகியுள்ளது

மத்திய கிழக்கிலிருந்து இறுதியாகக் கிடைத்த செய்திகளின் பிரகாரம் எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் வெளிநாட்டவர்களை வேலைக்கு அமர்த்துவதைக் கணிசமான அளவு குறைக்கத் தீர்மானித்துள்ளன.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத் தலைவர் திரு டேவிட் சொய்ஸா, இலங்கையர் வேலை வாய்ப்பிழக்கும் பிரச்னை பற்றிக் கூறிய இலங்கை அரசாங்கம் மூன்று தூதுக் குழுக்களை மத்திய கிழக்குக்கு உடனடியாக அனுப்பி வைக்கும் எனத் தெரிவித்தார்.

சவூதி அரேபியா, ஈராக், ஓமான், கடார், டுபாய் முதலான மத்திய கிழக்கு நாடுகள் தவிர இலங்கையர்கள் அதிகமாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ள சிங்கப்பூர், மலேஷியா ஆகிய நாடுகளுக்கும் மேற்படி தூதுக் குழுக்கள் செல்லும் எனவும், பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ள லிபியாவிலேயே இலங்கையருக்கு அதிகளவில் வேலை வாய்ப்புகள் கிடைக்குமென இலங்கை அரசு எதிர்பார்க்கின்றது எனவும் திரு. சொய்ஸா மேலும் தெரிவித்தார்.

பாரதத்தின் 'பார்க்காத சாரதிகள்'

[ராய்ட்டர்]

இந்தியத் தலைநகரிலுள்ள கனரக வாகனச் சாரதிகளில் பெரும்பாலானோர்க்கு கண் பார்வை வெகு மந்தம் என்று இந்திய போக்குவரத்து பொலிஸ் துறையின் துணைக் கமிஷனர் திரு நிராஜ் குமார் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியிலுள்ள லாரிச் சாரதிகள் மத்தியில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட கண் பரிசோதனைகளின் போது 74 சத வீதமானோர் கண் பார்வைக் கோளாறினால் பீடிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது,

உலகில் போக்குவரத்து விபத்துக்களைப் பொறுத்தளவில் முதலிடம் வகிக்கும் இந்தியாவில் நடைபெறும் அபாயகரமான விபத்துக்களில் 68 சதவீதமானவை பஸ், லொறிச் சாரதிகளின் கவலையீனங்களாலேயே ஏற்படுகின்றனவாம்.

உலகச் செய்திகள்

ஊரடங்கு உத்தரவு அமுல்

[புதுடில்லி

பழைய டில்லிப்பகுதியில் நடந்த சில வன்முறைகளையடுத்து அந்தப் பகுதி முழுவதும் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

லக்னோவில் பொலிசாருக்கும் ஒருசமூகத்தினருக்குமிடையில் நடந்த சண்டையில் பலர் காயமடைந்தனர். 3 பொலிஸ் வாகனங்கள் சேதமடைந்தன. இன்னொரு பகுதியில் இருகுழுக்களிடை ய நடந்த மோதலில் சில கடைகள் சேதமடைந்தன.

இதேவேளை அமைதி மற்றும் சுமுக நிலைமையைப் ஏற்படுத்த ஒத்துழைக்குமாறு பழைய டில்லிப்பகுதி மக்களை டில்லியின் லெப்டினன்ட் கவர்னர் கேட்டுள்ளார். வன்முறை நடந்த பகுதிகளைச் சுற்றிப் பார்த்த பின்னரே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார். [து]

★ ரொமேஷ்--திலகரத்ன பேச்சின் எதிரொலி:

அகதிகள் அடுத்தமாதம் குடியமர்த்தப்படுவார்கள்

[ராய்ட்டர்]

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பிரதேசங்களிலிருந்து அகதிகளாக 110 முகாமகளில் தஞ்சம் புகுந்திருக்கும் 46,000 பேரை மீண்டும் மாவட்டரீதியில் குடியமர்த்தும் வேலைகளை அடுத்த மாதம ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது,

கடந்த செவ்வாயன்று புதுடில்லியில் இலங்கைத் தூதுவர் திரு. பெர்னாட் திலகரத்னவுக்கும், இந்திய வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரிக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து மேற்படி அவசரத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

திருகோணமலையில் மட்டும் 18,000 அகதிகள் ஐம்பது முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அகதிகளுக்கு உணவளிப்பதற்கு அரசாங்கம் நாளந்தம் 50 லட்சம் ரூபாய்களைச் செலவிட்டு வருகிறதாம்.

முகாம்களிலிருந்து சில அகதிகள் மீண்டும் தமது வீடுகளுக்குச் சென்றுள்ள அதேவேளையில் வேறு பலரை அரசாங்கம் கிளிநொச்சி, மிகிந்தலைப் பகுதிகளில் குடியமர்த்தியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

பதிவுப் புத்தகம் தட்டுப்பாடு

[சுண்டுக்குளி)

யாழ். பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகத்தினால் யாழ் மாவட்டத்தில் உள்ள அரசினர் பிரசவ வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வந்த பிள்ளை பிறப்பு பதிவு செய்யும் பதிவுப் புத்தகம் முடிவடைந்து விட்டதனால் சில வைத்தியசாலைகளில் தற்போது பிள்ளைகள் பிறந்தவுடன் சாதாரண வெள்ளைத் தாளில் பதிவு செய்யப்படுகின்றன.

இப் பதிவுப் புத்தகங்கள் யாழ பதிவாளர் அலுவலகத்தில் முடிவடைந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் கொழும்பில் இருந்து இன்னும் வந்து சேரவில்லையென தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலில் மார்க்கோஸ் வெற்றி

[ராய்ட்டர்]

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி பேர்டினன் மார்க்கோஸ் வெற்றிபெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உத்தியோகபூர்வ . முடிவுகளின்படி ஜனாதிபதி மார்க்கோஸ் பதினான்கு லட்சத்து ஐம்பதினாயிரம் வாக்குகளால் முன்னணியில் நிற்கின்றார். இவருக்கு மேலும் பதினான்கு லட்சம் வாக்குகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கிடைக்கப்பெற்ற 140பெரிய தேர்தல் பெட்டிகளில் இதுவரை 136வாக்குப் பெட்டிகளை பிலிப்பைன்ஸ் பாராளுமன்றம் எண்ணி முடித்த பின்னர் நேற்று முன்தினம் வாக்குகளை எண்ணுவதை நிறுத்தியுள்ளது.

இது இவ்வாறிருக்க, இத்தேர்தலில் மோசடி நடந்துள்ளதாகப் பிலிப்பைன்ஸிலுள்ள றோமன் கத்தோலிக்க பிஷப்புகள் கூறியிருக்கின்றார்கள். இந்தத் தேர்தல் ஒருமோசடி என்றும், அதிகாரம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். [து]

மோசடி செய்தாராம்!

சிங்கள திரைப்பட நடிகர் கைது!

[கொழும்பு]

வெளி நாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாக பத்துப் பேரிடமிருந்து பெற்ற 18 00,000 ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் பிரபல சிங்கள திரைப்பட நடிகர் பொனிஃபாஸ் பெர்னாண்டோ கட்டுநாயக்க பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலை பெறும் பொருட்டு பணம் கொடுத்தவர்களில் ஒருவர் செய்த முறைப்பாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நடிகர் பெர்னாண்டோ நீர்கொழும்பு மஜிஸ்திரேட் முன்னர் ஆஜர் செய்யப்பட்ட போது நீதவான் திரு. சாத் அம்பேபிட்டியா அவரை மேல் விசாரணை நடக்கும் வரை றிமாண்ட் செய்யுமாறு உத்தரவிட்டார்.

நன்கொடைப்பணம் ரூ 71,000 நிதி ஒதுக்கீடு

[சித்தங்கேணி].

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு வீடமைப்புக்கு அறவிடாத நன்கொடைப் பணம் 'செவன' நிதி திட்டத்தின் கீழ் ரூ 71,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் வறியவர்கள், கால்-கை இழந்தவர்கள், குடும்பத் தலைவனை இழந்த குடும்பத்தோர் ஆகியோருக்கே இந்நிதி புதிய வீடுகளை அமைக்க, வீட்டைத் திருத்தியமைக்க வழங்கப்படவுள்ளது

இந்நிதி தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு நேரடியாக வழங்கப்படாமல் கிராம முன்னேற்றச் சங்கம் ஏதாவது ஒரு நிறுவனத்தின் மூலமே வழங்கப்படவுள்ளது.

இந்நிதியை வழங்குவதற்கு விண்ணப்பதாரிகளை தெரிவு செய்யும் பொறுப்பு அவ்வப் பகுதி விசேட சேவை அலுவலர், கிராமசேவை அலுவலர் ஆகியோரிடம் உதவிஅரசாங்க அதிபர் திரு து. வைத்தியலிங்கத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இடமாற்றம்

(சுண்டுக்குளி)

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் காணி லிகிதராக கடமையாற்றிய திரு. நா. தியாகராஜாவும், மதவாச்சி பெருந்தெருக்கள் திணைக்களத்தில் லிகிதராக கடமையாற்றிய திரு. எம். மகேசனும் யாழ். அரசாங்க செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளனர்.

திருடர் தொல்லை

[புங்குடுதீவு)

புங்குடுதீவின் பல பகுதிகளில் மீண்டும் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் மணியாம் தோட்டம், தோம்பச்சிவளவு, ஆலடிச்சந்தி போன்ற பகுதிகளில் உள்ள சில வீடுகளுக்குள் புகுந்த இவர்கள் வீட்டாரின் புத்தி சாதுரியத்தினால் தங்களை இனங்காட்டிக்கொள்ளாது தப்பித்துக் கொண்டனர்.

BRITE SOAP
WASHES BRIGHT

Net Weight 130 Grams

BRITE
SOAP
பிறைற்

Rs. 2-25

பிரகாசமான
சலவைக்கு
பிறைற் சோப்

★ ★ ★ ★

கைதேர்ந்த தொழிலாளர்களால்
விஞ்ஞான முறைப்படி
தயாரிப்பவர்கள்

Turbow Commercial
Alaveddy.

(C 2392)

யாழ். மக்களுக்கு
ஓர் நற்செய்தி
வெளிநாட்டுப் பயணத்திற்கான
விமான டிக்கட்டுகள், பாஸ்போட்,
விசா, பிரயாணிகள் காசோலைகள்
மற்றும் பிரயாணங்களுக்குத் தேவையான
சகல ஒழுங்குகளும் செய்துதரப்படும்.
தொடர்பு கொள்ளுங்கள்:
விஜயமாலா ரவல்ஸ்,
213, 215, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி: 547205
நேரில் தொடர்புகொள்ள முடியாதவர்கள்
யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்:
திருமதி சி. கஜமுகலிங்கம்,
ரஜனி நிலையம், ஊரியாட்டி. சுன்னாகம்.
9315

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் இந்திய விஜயத்தை மேற்கொண்டு புதுடில்லி பாலம் விமான நிலையத்தில் வந்திறங்கியபோது ஜனதிபதி ஸெயில்சிங்கும் பிரதமர் ராஜீவ் காந்தியும் அவரை வரவேற்கின்றனர்.

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின்கீழ் கிளிநொச்சி இளைஞருக்கு 6 வாரச் சிறை!

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்ட நவரத்தினம், ஞானசேகரம், டிரக்டர் ஸ்ரீ ஆகியோர் குறித்து பொலிசாருக்கு அறிவிக்கத்தவறியதாகக் குற்றம் சாட்டப்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு 6 வார காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

இரணமடுவைச்சேர்ந்த விவசாயியான 34 வயதான இராஜநாயகம் ஞானராசா என்பவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிபதி திரு. ரி. சுந்தரலிங்கம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கிலேயே மேற்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டது.

எதிரி தரப்பில் சட்டத்தரணி திரு. கே. வி. மகேந்திரன் ஆஜரானர்.

முன் மாதிரி நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கம் தனது உறுப்பினர்களுக்கு 'அகற்றிய கள்ளுக்'கான பணத்தை வழங்குவதென்று தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் திரு. சு. நடேசு தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய தெ. ப. உ. வி. கூ. சங்கங்களுக்கு முன்மாதிரியான செயல் இது என்றும், இது வரை வெளியில் ஊற்றப்பட்ட கள்ளுக்கான பணம் கொடுக்கப்படாதிருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

28 பேர் பலி

[சென்னை]

யாழ்ப்பாணம், வவனியா ஆகிய பகுதிகளில் கடந்த மூன்று நாட்களுக்குள் குறைந்தது 16 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று சென்னையிலுள்ள தமிழீழ அமைப்புகள் தெரிவித்துள்ளன.

கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 1? அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

யாருடையது?

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த திரு. பரமு சோதிநாதன் என்பவருடைய கடவுச்சீட்டினை கொக்குவிலைச் சேர்ந்த திரு ச. சுரேஸ்குமார் என்பவர் கண்டுஎடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் நேரில்வந்து பெற்றுக்கொள்ளவும்.

ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவம்

ந. து. ஜெயதீஸ்வரன்

ஊரெழு மடத்துவாசல் என்னும் திவ்யக்ஷேத்திரத்தில் கோயில் கொண்டருளியிருக்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் திருவிழா நடைபெற்று பதின்மூன்றாம் நாள் பூங்காவனத்துடன் மகோற்சவம் நிறைவுபெறும்.

விசேட திருவிழாக்களான சப்பரம், தேர், தீர்த்தம் முறையே இம்மாதம் 22, 23, 24ம் திகதிகளில் நடைபெறும். 25ம் திகதி பூங்காவனத் திருவிழா. நாட்டு நிலைமை கருதி இவ்வாண்டு திருவிழாக்கள் யாவும் நேரகாலத்துடன் முடிவடையும். திருவிழா கிரியைகள்யாவும்ஆலயபிரதம குரு சிவஸ்ரீ பா. வைத்தியநாதக் குருக்கள் தலைமையில் இடம்பெறும் பஞ்சமுக விநாயகருக்கான மூலஸ்தான கட்டிட வேலைகள் முடிவடையும் தறுவாயிலுள்ளது. திருப்பணி வேலைகளைத் திரு. த தம்பிராசா கவனித்து வருகிறார்.

திருவிழாக் காலம் தொடக்கம் தொடர்ந்து ஆலயத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளை ஒலிபெருக்குவதற்கென ஆலயத்திற்குச் சொந்தமாக ஒலிபெருக்கிக் கருவிகளை வாங்குவதற்கு ஆலய வழிபடுவோர் சங்கம் தீர்மானித்துள்ளது உற்சவ காலங்களில் சரியை தொண்டாற்றுவதற்கும். சுகாதார சேவைகளைக் கவனிப்பதற்கும் தனிப்பட்ட ரீதியில் இயங்கும் ஊரெழு சைவாலய முன்னேற்றக் கழகத்து இளைஞர்கள் சேவையில் ஈடுபடவுள்ளனர்.

கடந்த மூன்றுண்டுகளாக இவ்வாலயம் பாலஸ்தானம் செய்யப்பட்டு ஆலய மூலஸ்தான தூபி உட்பட பல ஆலயத் திருப்பணி வேலைகள் நடைபெற்றமையினுல்மகோற்சவம் நடைபெருதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை முதற் பரிசு

[புங்குடுதீவு]

புங்குடுதீவு இரண்டாம்வட்டாரத்தைச் சேர்ந்த வைரமுத்து - கணேசமூர்த்தி என்பவர் அண்மையில் அகில இலங்கைரீதியில் வர்த்தகப் போட்டியொன்றில் பங்குபற்றி முதற்பரிசான 14 அங்குல கலர் ரி. வி ஒன்றைப் பெற்றுள்ளார்.

இவர் ஒருவரே சகல பரிசில்களைப் பெற்றவர்களுள் அடங்கிய ஒரேயொரு தமிழர் எனத் தெரியவருகின்றது.

"குடும்ப நலத்திட்டங்கள் குடும்ப நலன் பேணவே"

(மாவிட்டபுரம்)

"குடும்பத்தை திட்டமிடுதல், திடகாத்திரமான சமுதாயத்தை உருவாக்குதல் என்ற ரீதியில் குடும்ப நலனைப் பேணுவதற்காவே குடும்ப நல திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. இது குறித்து மக்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை."

இவ்வாறு தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெற்ற கிராமிய அடிப்படையிலான குடும்பத்திட்ட செயற்பாடுகள் குறித்த பூர்வாங்க கூட்டத்தில் கலந்துரையாற்றிய குடும்பத்திட்ட உதவிப் பணிப்பாளர் திரு. ஏ. ஜே. பெனடிக்ற் கூறினர்.

யாழ். மாவட்ட குடும்பத் திட்டச் சங்கத் தலைவர். பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: "குடும்ப திட்டத்தின் மூலம் நாம் எவரையும் சட்டுப்படுத்தவில்லை, குடும்ப நிலைமை, வருவாய், குழந்தைகளைப் பெறுவதற்கு இடைப்பட்ட காலம் என்பவற்றை கருத்தில் கொண்டு குடும்பத்தின் நலனையும், பிறக்கும் குழந்தையின் நலனையும் பேணுவதுதான் எமது நோக்கமாகும்.

'இன்றைய குழந்தைகள் தான் நாளைய சமுதாயமாகும். ஆகவே அவர்களை ஆரோக்கியமுள்ளவர்களாக வளர்தெடுப்பதற்கு பெற்ருேர் பல்வேறு வழி முறைகளை பின்பற்ற வேண்டும். சுகாதாரம், போஷாக்கு, தடுப்பு மருந்துகள் போன்ற சகல விடயங்களிலும் பெற்ருேர் அறிவைப் பெறவேண்டும்" என்ருர்.

மற்றும் யாழ். மாவட்ட திட்டமிடல் அதிகாரி திரு. அ. ச பூவேந்திரன், காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன் ஆகியோரும் அறிவுரை வழங்கினர்.

யானை மார்க்
ஒவ்வொரு போத்தலிலும் மேலதிகமாகக்
கிடைக்கிறது

ELEPHANT BRAND
ORANGE BARLEY
ELEPHANT BRAND
ORANGE CRUSH
ELEPHANT BRAND
LEMONADE
ELEPHANT BRAND
CREAM SODA
ELEPHANT BRAND
GINGER BEER
ELEPHANT BRAND
SODA
CEYLON COLD STORES LIMITED
Ribbs N&L

CCS சிலோன் கோல்ட் ஸ்ரோஸ் லிமிட்டெட் ரூ:2/10 முதல்

ஈழநாடு வாரமலர்
EELANADU VARA MALAR

பிரிட்டிஷ் - பிரெஞ்சு நட்புக்கு

நீரின்கீழ் ஒரு பாதை!

புராதன உலக அதிசயங்கள் நமக்குப் புதிய செய்திகளல்ல. சீனாவின் பெருமதில், எகிப்தின் பிரமிட்டுகள், இந்தியாவின் தாஜ்மஹால் ஆகியவை பண்டைய சமுதாயத்தின் கட்டிட பொறியியற் கலையின் சிகரத்தை இன்றும் நமக்கு எடுத்துக்காட்டி நிற்கின்றன.

அவ்வாறே நவீன தொழினுட்ப யுகத்தின் சிகரமாக நீரின் கீழ்ப்பாலம் ஒன்று அமையப் போகிறது. பிரான்ஸையும், இங்கிலாந்தையும் பிரிக்கும் ஆங்கிலக் கால்வாயின் ஊடாக அமைக்கப்படப் போகும் இப்பாதையைப் பற்றிய வரலாற்றை அதன் அமைப்பை இங்கு காண்போம்.

கடந்த மாதத்தில் பிரான்சுக்கு விஜயமொன்றை மேற்கொண்ருந்த பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிறட் தட்சரும், பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரோனும் வட பிரெஞ்சு நகரமான 'லில்லி'யில் கூட்டாக ஒரு தகவலை வெளியிட்டனர். அதாவது இரு நாடுகளையும் பிரிக்கும் ஆங்கிலக் கால்வாயின் ஊடாகப் பாதை ஒன்று அமைப்பது என்பதே அத்தகவல்

வரலாற்றுப் பின்னணி

இங்கிலாந்தையும், பிரான்ஸையும் ஆங்கிலக் கால்வாயின் கீழ் அமைந்த சுரங்கம் மூலம் தொடுக்கும் எண்ணம் இன்று நேற்று முளைவிட்டதல்ல. நெப்போலியன் இவ்வாறான ஒருபாதை அமைக்கப் பேரவாக் கொண்டிருந்தான். கடற் கீழ் பாதை மூலம் இங்கிலாந்தைக் கைப்பற்றுவதே அதன் உள்நோக்கம். ஆனால் பிரான்ஸில் மட்டுமல்ல இங்கிலாந்திலும் இத்தகைய ஒரு பாதை அமைக்கப்படவேண்டுமென்ற கருத்து பலர் மத்தியில் நிலைகொண்டிருந்தது. இங்கிலாந்து ஐரோப்பாக்கண்டத்திலிருந்து ஆங்கிலக் கால்வாயினால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதை அவர்கள் விரும்பாததே இதற்குக் காரணம். இங்கிலாந்தின் விக்ரோறியா மகாராணியார்இத்தகைய ஒரு பாதை அமைக்கப்படவேண்டுமென விரும்பியிருந்தபோதிலும் பிரிட்டிஷ் ராணுவ நிபுணர்கள் இதனை விரும்பவில்லை. ஏனெனில் அப்போது பிரிட்டிஷ் கடற்படை மிகவும் வலிமை பொருந்தி விளங்கியது. அத்துடன் இங்கிலாந்தைக் கைப்பற்ற விரும்பும் எவரும் கடல் மூலமே படையெடுக்க வேண்டும். [இங்கிலாந்து தனது கடற்படையை மிகவும் வலிமையுள்ளதாக வைத்திருக்க இதுவும் ஒரு காரணம்] இத்தகையஒருகடற்கீழ்ப் பாதை அமைக்கப்படுமானால் அதன் மூலமும் இங்கிலாந்தை ஆபத்து எதிர்நோக்க வேண்டியேற்படலாம். இவை போன்ற காரணங்களினால் 1875 இல் ஆரம்பிக்கப்பட்ட அகழ்வு வேலைகள் நிறுத்தப்பட்டன.

27 வது தடவையாக

இவ்வாறு இங்கிலாந்தையும் பிரான்ஸையும் இணைக்க 26 தடவைகள் முயர்சிகள் எடுக்கப்பட்டன, 1975 -ம் ஆண்டிலும் ஒருமுறை அகழ்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் நிறுத்தப்பட்டன. 27 வது தடவையாக இப்போது மீண்டும் இந்தக் கடற்கீழ்ப்பாதை அமைக்க ஆலோசிக்கப்பட்டு இறுதி முடிவும் எடுக்கப்பட்டிருக்கிறது.

பாதையின் அமைப்பு

இந்தக் கடல்கீழ் பாதையின் அமைப்பு எப்படியிருக்கும்?

ஆங்கிலக் கால்வாயின் கீழாக அமையப்போகும் இப்பாதை இரு பிரதான ரயில் பாதைகளையும். ஒரு சிறிய பாதையையும் கொண்டிருக்கும்.

இங்கிலாந்து கென்ட் நகரின் 'செரிட்டன்' கரைப்பிரதேசத்தில் ஆரம்பமாகும் இந்தப் பாதை ஆங்கிலக் கால்வாயின் கீழாகச் சென்று பிரெஞ்சுக் கரையான 'கலய்ஸை' [Calais] அடையும்.

குழாய் போன்ற வட்டவடிவில் அமையப்படும் இந்த பாதைகளினது விட்டம் 24 அடியாகும். இப் பாதைகள் ஒவ்வொன்றும் ஆங்கிலக்கால்வாயின் மேற்பரப்பிலிருந்து சராசரியாக 130 அடி ஆழத்தில் செல்லும். இப்பாதைகளினூடு ரயில்கள் மணிக்கு 100 மைல் வேகத்தில் செல்லும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இப்பாதைகளில் செல்லவிருக்கும் ரயில்களும் விசேடமானவை யாயிருக்கும் இவை இரு மாடிகளைக் கொண்டிருக்கும். கீழ் மாடியில் கார், லொறி போன்ற வாகனங்களும், மேல்மாடியில் பயணிகளும் செல்லலாம்.

3-வதுசிறிய பாதைஇருரயில் பாதைகளுக்கும் நடுவே செல்லும். இது மற்ற இரு பாதைகளையும் மேற்பார்வை செய்பவர்களுக்காகவும். அவற்றில் ஏதேனும் அபாயநிலை ஏற்படின் பயணிகளை வெளியேற்றவுமே பயன்படுமாம். ஒவ்வொரு ரயில் பாதையிலும் 1230 அடிக்கொன்றாக அவசரக்கதவுகள் (EmergencyDoors] சிறிய பாதையுடன் இணைக்கப்படவுள்ளது.

சுமார் ஆறரைக் கோடி டாலர் [கிட்டத்தட்ட 172 5 கோடி ரூபாய்] செலவில் அமைக்கப்படபோகும் இந்தப் பாதையைக் கட்டி முடிக்க ஏழு ஆண்டுகள் பிடிக்குமாம். அதாவது 1993ம் ஆண்டில் தான் இது கட்டி முடிக்கப் படும்.

இந்தப் பாதை ஐரோப்பாவிலேயே பெரிய சிவில் பொறியியற்துறைத் திட்டமாகும்.

இப்பாதை கட்டப்பட்டு முடிந்தவுடனே தற்போது லண்டனிலிருந்து பாரிஸ் நகருக்குச் செல்ல எடுக்கும் நேரமான 5 மணித்தியாலயம் 3 மணித்தியாலமாகக் குறைந்து விடும்.

இப்பாதை அமைப்பதற்காக அண்மையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்த போது, கால்வாயின் கீழ் ரயில் பாதை மட்டுமன்றி கார்பாதையொன்றும் அமைக்கப்பட வேண்டுமென இங்கிலாந்து வற்புறுத்தியது. ரயில் சேவையாளர்கள் திடீரென வேலை நிறுத்தம் மேற்கொண்டால் லட்சக் கணக்கான மக்கள் பரிதவிக்க வேண்டிய ஒரு நிலைமையைத் தவிர்ப்பதற்காகவே

(12ம் பக்கம் பார்க்க)

இ. செந்தில்

தமிழர் சுந்தர்

இந்தியாவின் புதிய இராணுவத் தளபதியாக சென்னையைச் சேர்ந்த கிருஷ்ணசாமி சுந்தர் நியமிக்கப்பட்டுள்ளார். சிறந்த மதிநுட்பம் நிறைந்தவரான சுந்தர், பன்னிரண்டு லட்சம் இராணுவத்தினருக்குத் தலைமை தாங்குகிறார். 1928ம் ஆண்டு ஏப்ரல் 30ந் திகதி பிறந்த இவர், ஐ. நாவின் சமாதானப்படையில் பணிபுரிந்தவர். பொற்கோயில் முற்றுகையில் ஒரு குடிமகனையும் கொல்லாதவகையில் சீக்கிய தீவிரவாதிகளைச் சரணடைய வைத்த பெருமைக்குரியவர். 'ஜி' என்ற இராணுவப் பிரிவில் சிறந்த சேவையாளராக இருந்தமையால் சுந்தர்ஜி எனக் கௌரவிக்கப்பட்டவர். உலகின் நாலாவது வல்லரசாக இந்தியா கணிக்கப்படுவதற்கு இந்திய இராணுவத்தின் செயல்திறனே காரணமாகும்.

— ஸச்சி

பரந்த தமிழகம்

பிரிவினை வாதிகள் என்று இங்கு வாழும் தமிழ் மக்களைக் குறிசுடுவதில் இன்றைய ஆட்சி இன்பம் காண்கின்றது. தமிழரின் இயல்பான பண்புக்கு முற்றிலும் மாறான கருத்து இது.

தனிநாடு என்ற கோரிக்கை எழுந்த வரலாற்றை நன்கு புரிய முடியுமானால் அது தமிழுக்கும் அம்மொழியைத் தாய்மொழியாகப் பேசிவரும் மக்களுக்கும் புறம்பான கொள்கை என்பது புலப்படும்.

தமிழினம் பல்வேறு நாடுகளிற் பரவியுள்ளது. இவ்வுண்மையை அறிந்து பாடினார், பாரதியார்.

''சிங்களம் புட்பகம் சாவகம் ஆதிய தீவு பலவினும்
சென்றேறி — அங்குத்
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று
சால்புறக்கண்டவர் தாய்நாடு''

என்றபாட்டிலே விரிந்து பரந்த தமிழகம் குறிக்கப்படுகின்றது.

இன்று ஆண்டவன் கிருபையாலும், சிறிலங்கா ஆட்சியின் கொடுமையாலும், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சுவிற்ஸலண்ட், இத்தாலி, ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளிலும், மேற்காசிய நாடுகளிலும், மலேசியா, அவுஸ்திரேலியா ஆபிரிக்க நாடுகளிலும் இலங்கைத் தமிழர் உத்தியோகம், தொழில், வாணிகம் புரிந்து வளம் பெருக்கி வாழ்ந்து வருகின்றார்கள்.

இதனைவிட மத்திய காலத்தின் [Medieval Period] இன்னொரு பாட்டு ஒன்று பதினேழு நாடுகளில் தமிழும் தமிழ் இலக்கியமும் நன்கு வளர்ந்திருப்பதைக் குறிக்கிறது.

சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனத் துளுக்குடகங்
கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கம் வங்கங்
கங்கமதங் கடாரங் கவடங் கடுங்குசலந்
தங்கும் புகழ் தமிழ் சூழ்பதினேழ் புவிதாமிவையே.

விருச்சிகம்



பூமியானது மேற்கிலிருந்து கிழக்கில் இருபத்து நான்கு மணித்தியாலத்துக்கொருமுறை தன்னைத்தானே சுற்றுவதால் பூமியிலுள்ளோருக்குச் சூரியனும் ஏனைய நட்சத்திரங்களும் கிழக்கிலே உதித்துப் படிப்படியாக மேலே சென்று, பின் மேற்கிலே மறைவது போலத் தோற்றுகின்றன. இப்படிச் சூரியன் பூமியைச் சுற்றுவதாகக் காட்சியளிக்கும் பாதையில் உள்ள நட்சத்திரங்கள் பன்னிரண்டு உடுக்கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன இவ்வுடுக்கூட்டங்களே மேடம் முதல் மீனம் வரையுமுள்ள பன்னிரண்டு இராசிகளாகும். இக்கூட்டங்களுக்கு ஆதிகால மக்கள் அவற்றின் உருவங்களைக் கொண்டு இப்பெயர்களைச் சூட்டினாராயினும் அவற்றுள் சில உடுக்கூட்டங்களே அவற்றின் பெயர்களுக்கேற்ப உருவங்களைக் கொண்டிருக்கின்றன. இவற்றுள விருச்சிகராசி நாம் பார்த்தவுடனேயே இலகுவில் கண்டுபிடிக்கக் கூடியதாக உள்ளது இருகொடுக்குகளையும் வளைந்தவாலையும் கொண்டுஒரு தேளைப்போலவுள்ள இவ்வுருவத்தை இக்காலத்தில் நமது பிரதேசத்தில் விடியற்காலையில் நாம் காணலாம். இப்போது ஏறக்குறைய நடுச்சாமத்தில் கிழக்கு வானில் உதயமாகும் விருச்சிகமானது காலை ஐந்து மணியளவில் அடிவானிலிருந்து 30 பாகை முதல் 70 பாகைவரை காட்சியளிக்கும். அதாவது உச்சியிலிருந்து அடிவானம் வரையுள்ள தூரத்தில் மூன்றிலொரு பகுதிக்கு மேலான இடத்தை இது எடுக்கிறது இவ்வுடுத் தொகுதியில் மிகவும் பிரகாசமான நட்ஷத்திரம் அன்ராறஸ் (படத்தில் A) என்னும் செந்நிறமான விண்மீனாகும்.

விருச்சிகத்தைப் பற்றி மட்டும் அறிவதுடன் இப்போது இவ்வுடுத் தொகுதியைக் கண்டுகொள்ளுவதில் இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன முதலாவதாக, இவ்வுடுத்தொகுயில் இப்போது இரண்டு கிரகங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. செவ்வாய் (படத்தில் M) பெயருக்கேற்பச் செந்நிறமுடையது. அன்ராறசுக்கு மிகவும் அண்மையாகச் கிழக்கு நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. அதற்கு வடக்கில் சனியானது (படத்தில்S மார்ச் மாதம் 19ம் திகதிவரை கிழக்கு நோக்கிச் சென்று பின்ஆகஸ்ட் 7-ம் திகதிவரை மேற்கு நோக்கிச்சென்று அதன்பின் மறுபடியும் கிழக்குநோக்கிச்செல்லும். பெப்ருவரி மாத நடுப்பகுதியில், அதாவது இக்காலங்களில் இவ்விரு கிரகங்களும் மிகவும் அண்மையிலிருக்கும். இப்படி உடுத்தொகுதிகளுக் கூடாகக் கிரகங்கள் அசைந்து செல்வதிலிருந்து கிரகங்களையும் நட்

(12-ம் பக்கம் பார்க்க)

**டபிள்யூ. எஸ்.
செந்தில்நாதன்,**
(தலைவர்,
யாழ். வானியற் கழகம்)

தென்னகத் திரையுலகில்

டைரக்டர் யாழ். விஜயசிங்கம்

தென்னகத்திரையுலகில் நுழைந்து தமது கலைநுட்பத்திறனுல் திரைக்கலைத் துறையில் புதுமைகளை நிலைநாட்டி அத்துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திப் புகழீட்டியவர்களில் ஈழத் தமிழர்கள் மூவர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் குகநாதன். பாலு மகேந்திரா ஆகிய இருவரைத் திரை ரசிகர்கள் மிகநன்ருகத் தெரிந்து வைத்திருக்கின்றபோதிலும் படாதிபதி கனவான் ஓ, ஏ, கே. தேவரால் பெரிதும் நேசிக்கப்பட்டவரும் மதிக்கப்பட்டவருமான டைரக்டர் விஜயசிங்கம் அவர்களை அறிந்திருப்பது குறைவென்றே கூறலாம். தெல்லிப்பழை, பன்னுலையைச் சேர்ந்த இந்த விஜயசிங்கம் அவர்கள் பற்றி 'பொம்மை' சஞ்சிகையில் 'நம்பிக்கை நட்சத்திரம்' வரிசையில் முதலாவதாக இடம்பெற்ற கட்டுரை இது. டைரக்டர் 'விஜே'க்கு நமது வாழ்த்துக்கள். (ஆ-ர்)

சினிமா உலகம் என்ற மாபெரும் சமுத்திரத்தில்நான் காலடி எடுத்து வைத்தது **1961**-ம் வருடம்டிசம்பர்மாதம் தான.

தியாகராய நகர் சாதுல்லா தெருவில் உள்ள ஒரு சினிமா கம்பெனியின் அலுவலகத்தினுள் நான் பயத்துடன் நுழைந்தேன். சினிமா கம்பெனிக்குள் நுழைந்த எண்ணமே ஏற்படவில்லை. ஒரு கோயிலுக்குள் நுழைந்ததைப் போன்ற உணர்வே எனக்கு ஏற்பட்டது. சுற்றிலும் முருகனின் தெய்வீகப் படங்கள். சாம்பிராணியின்மணம்என்னை மறந்து அங்கே நான் நின்று கொண்டிருக்கிறேன்.

என்னை அழைத்துச் சென்ற தேனப்பச்செட்டியார், அங்குள்ள ஒருவரிடம் என்னை அறிமுகப்படுத்தினர். ''பையன் எனக்கு மிகவும் வேண்டியவன். நல்லபையன். ஒழுக்கமுள்ளவன். டைரக்ஷன் துறையில்பணிபுரியஆசைப்படுகிறுன் உங்கள் கம்பெனியில் இவனைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்'' என்றுர் இதைக்கேட்டுக் கொண்டிருந்தவர், என்னை தன் கூரிய விழிகளால் பார்த்தார். நான் அவரைப் பார்த்தேன். அமைதிதவழும் முகம் ஏறிய நெற்றி. அந்த நெற்றி நிறைய விபூதி, நடுவே தீச்சுடர் போன்ற குங்குமம். வாய் நிறைய தாம்பூலம்... கருணை ததும்பும் பார்வை. மொத்தத்தில் ஒரு உயர்ந்த மனிதர்முன் நிற்கிறேம் என்ற உணர்வே எனக்கு ஏற்பட்டது. அவர்தான் என் தந்தையைப் போல் விளங்கிய சாண்டோ எம்.எம்.ஏ.சின்னப்பாதேவர்.

''உன் பெயர் என்ன?''

''விஜயசிங்கம்...''

''நாளைக்கு வா..''

அவர் கேட்ட கேள்வியும், நான் அளித்த பதிலும் இவ்வளவுதான்...

அடுத்த நாள்காலை மீண்டும் நான்அங்கு சென்றேன். தனது ஜீப்பில் என்னை அழைத்துக் கொண்டு, வாஹினி படப்பிடிப்பு நிலையத்துக்குச் சென்றுர்.

படப்பிடிப்பில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவரிடம், ''இவனை உன்னிடம் வைத்துக் கொள்'' என்றுர்.

வேறுஎந்த விளக்கமும் கேட்காமல் 'சரி' என்று தலையாட்டினுர் அந்த மனிதர். ராமனுக்கு அடங்கிய லட்சுமணனுக என்னைப்பார்த்து ஒரு புன்சிரிப்பு. 'வரவேண்டிய இடத்திற்கு வந்துவிட்டாய்' என்ற முகபாவனை, ஒருநொடியில் என் குருநாதரை நான் அடையாளம் கண்டு கொண்டேன். அவர்தான் இயக்குநர் எம். ஏ. திருமுகம்.

'தாய் சொல்லைத் தட்டாதே' என்ற படத்தின்படப்பிடிப்பு அன்று நடந்துகொண்டிருந்தது. இன்றையமுதல்வர் எம். ஜி. ஆர். அன்று அங்கு நடித்துக் கொண்டிருந்தார். ஒதுங்கி நின்று நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தேன் என்பதை விட, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன் என்பதே சரியாகும். சில நாட்கள் சென்றன. என்னை அறியாமல் என்னைக் கவனித்துக் கொண்டிருந்த என் குருநாதர் இயக்குநர் திருமுகம், ''வேடிக்கை பார்க்கவா வந்தாய்? வேலையைக் கற்றுக் கொள்'' என்று கூறி, ஒதுங்கி நின்று கொண்டிருந்த என்னை சினிமா என்ற கடலுக்குள் இழுத்துவிட்டார்.

எனக்கு எப்பொழுதுமே தொழிலில் மிகுந்த அக்கறை உண்டு. நான் எப்பொழுதும் புத்தகமும் கையுமாக இருப்பேன். இதை மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள் கவனித்திருக்கவேண்டும். ஒரு நாள் என்னைத் தன்னருகே அழைத்தார்.

''எப்பொழுதுமே 'நோட்புக்'கை கையில்வைத்துச் கொண்டு எழுதுவதிலேயே அக்கறையாக இருக்காதே... உன்னைச்சுற்றி என்ன நடக்கிறதுஎன்பதை உற்றுக்கவனி. உதாரணமாக இருவர் சீட்டாடினுல், அவர்கள் எப்படி ஆடுகிறுர்கள். தோற்றவன், ஜெயித்தவன் மனநிலைகள் எப்படி இருக்கின்றன என்று கூர்ந்து கவனி. அதை ஒரு பேப்பரில் அப்படியே எழுத முயற்சி செய். அதில் நீவெற்றி கண்டால், உன்னுல் ஒருகதையைச் சிறப்பாகப் படமாக்க முடியும்'' என்றுர். அன்று மக்கள் திலகம் கூறிய அறிவுரையை,இன்றும் என் மனதில் வைத்துச்செயல்படுகிறேன்.

தேவர் அவர்கள் என்றுமே தன்னை நம்பி இருக்கும் குடும்பங்களைத் தன் குடும்பமாகப் பாவித்து உதவி செய்வார். ஒருமுறை நான் வெளியூர் சென்றிருந்த சமயம் என் குழந்தைக்குஉடம்பு சரியில்லை. என் மனைவிதவித்துக்கொண்டிருந்தாள். இதை எப்படியோ தெரிந்துகொண்ட தேவர் அவர்கள் காரும், பணமும் தந்து என்குழந்தை சுகமடையும்வரை ஒரு தந்தையைப் போல் உடனிருந்து கவனித்துக் கொண்டார்.

'மா' என்ற ஹிந்திப்படத்தின் படப்பிடிப்பு ஊட்டிக்கு அடுத்துள்ள முதுமலைக்காட்டில் நடந்தது. தர்மேந்திராவும் ஹேமமாலினியும் நடித்துக்கொண்டிருந்தனர்.

ஒரு காட்சியில் ஆறு புலிகள் காட்டினூடே ஓடுவதாகவும், அதைத் தர்மேந்திரா ஜீப்பில் துரத்துவதாகவும்எடுக்கவேண்டும்.

ஆறு கேமராக்கள், ஆறு கோணத்தில் வைக்கப்பட்டன ஒளிப்பதிவாளர் ராமமூர்த்தி ஒரு கேமராவுடன், புலியைத் துரத்துகின்ற ஜீப்பில் தயாராக இருந்தார். அந்த ஜீப்பை நான் ஓட்டவேண்டும் என்று கட்டளையிட்டார் தேவர்.

சிறு தவறு நடந்தாலும், அந்தக்காட்சியை மறுபடியும் எடுக்க முடியாது. என்மேல் நம்பிக்கைவைத்து, அந்த வேலையை எனக்குத்தந்தார். அதே ஜீப்பில் தேவரும் ஏறிக் கொண்டார் காட்சி ஆரம்பமானது. கேமராக்கள் ஓடத் தொடங்கின. புலிகள் அவிழ்த்துவிடப்பட்டன கூண்டிலிருந்துவிடுபட்டபுலிகள், நடுக்காட்டில் கண்டபடி ஓடத்தொடங்கின. புலிகளைத் தொடர்ந்து நான் ஜீப்பை ஓட்டிச்சென்றேன். ஒரு விநாடி யாரும் எதிர்பார்க்காத நிலையில், ஒரு புலி எங்கள்மேல் பாயத்தயாராகிவிட்டது. இதை அறிந்து கொண்ட தேவர், ஜீப்பை நிறுத்தச் சொல்லிப்பலமுறை எனக்குக் கட்டளையிட்டார்.

நான் தைரியமாக ஜீப்பைச் செலுத்திக்கொண்டிருந்தேன். தான் எதிர்த்தும், தன்னைத் தொடர்ந்து ஜீப் வருவதை கண்ட புலி அடங்கி, மீண்டும் ஓடத்தொடங்கியது. காட்சியும் நாங்கள் எதிர்பாராத அளவு சிறப்பாக அமைந்துவிட்டது. அன்றுதேவர் அவர்கள் என்னைவெகுவாக பாராட்டியது, எனக்கே சற்றுக் கூச்ச உணர்வை ஏற்படுத்தியது என்றுல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இப்படி தேவர்அவர்களிடம் பலமுறை பாராட்டுக்களைப் பெற்று, அவரின் நம்பிக்கைக் குரியவனுக வளர்ந்து வந்தேன்.

தேவர் பிலிம்ஸில் அறுபத்தெட்டுப் படங்களுக்கு உதவி டைரக்டராகப் பணிபுரிந்திருக்கிறேன்.

தேவரின் மாப்பிள்ளை இயக்குநர் தியாகராஜன் டைரக்ட் செய்து வெற்றிகரமாக ஓடிய 'வெள்ளிக்கிழமை விரதம்' என்ற படத்திலிருந்து அசோசியேட் டைரக்டராக நான் உயர்வு பெற்றேன்.

ஒருநாள் ஊட்டிக்குப் படப்பிடிப்பு விஷயமாகச் சென்றேம். நானும் தேவர் அவர்களும்பல இடங்களுக்குச்சென்று படப்பிடிப்புக்கான வேலைகளைச் செய்து முடித்தோம். திடீரென தேவர் அவர்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் போயிற்று.

மாப்பிள்ளை தியாகராஜனும் நானும் கோயம்புத்தூர் ஆஸ்பத்திரி ஒன்றில் தேவரைச் கிகிச்சைக்காகச் சேர்த்தோம் கலங்கிய மனதுடன் இரவு பதினொரு மணிக்குத் தேவர் அருகே நின்று கொண்டிருந்தோம்.

எங்களைப் பார்த்து 'இங்கிருந்து போங்கள்... முதலில் வேலையைப் பாருங்கள். கடமைக்குப் பின்னுல்தான் மற்றவை எல்லாம். உடனே ஊட்டிக்குப் புறப்படுங்கள்'' என்றுர். 'கடமையைச்செய். கர்மாவைப் பற்றிக் கவலைப்படாதே. நடப்பது நடந்தே தீரும்' என்று கண்ணன் கீதையில் கூறியதுதான் எனக்குஅப்பொழுது நினைவுக்கு வந்தது.

ஊட்டிக்குச் சென்றேம். அடுத்தநாள் எங்களுக்கு நல்ல நாளாக அமையவில்லை என்னை வாழவைத்ததெய்வம்மறைந்த செய்திகேட்டு, என் தந்தை மறைந்ததைவிட அதிகமாக வருந்தினேன்.

தேவர் ஐயா,என்னையும்என் குடும்பத்தையும் தனியே விட்டுச் செல்லவில்லை. துணையாக அவரின் தம்பியையும், தனயனையும், மருமகனையும் விட்டுச் சென்றுள்ளார் என்பதை எண்ணிச் சற்று மனம் தேறினேன்.

என் முன்னேற்றத்தில் என்றுமே அதிக அக்கறை காட்டுபவர்கள் எம். ஏ மாரியப்பன்,இயக்குநர் தியாகராஜன், தயாரிப்பாளர் சி. தண்டாயுதபாணி. மூவரும் ஒருநாள் என்னை அழைத்து, 'பணம் பத்தும் செய்யும்' என்ற படத்தின் டைரக்ஷன் பொறுப்பை எனக்குத் தந்தார்கள்.

இந்த மூவரின் ஆதரவோடும், தேவர் ஐயா, என் குருநாதர் எம். ஏ. திருமுகம் ஆசியோடும், அந்தப் படத்தை இயக்கினேன். அதுவும் 100 நாட்கள் ஓடி வெற்றி பெற்றது.

உங்களுடைய (ரசிகர்கள்) ஆதரவும் இருந்தால், நான் மேலும் பல வெற்றிப் படங்களைத் தொடர்ந்து தரமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இவ்வாரம் எப்படி?

இன்று

மாதம் — மாசி
திகதி- 4 [1986 -02-16]
கிழமை - ஞாயிறு
திதி - ஸப்தமி பிற்பகல் வரை
நக்ஷத்திரம் - பரணி முற்பகல் வரை.

மேடம்

நம்பிக்கையின் மூலம் பணம் விரயமாகும். எதிர்பார்த்த விடயத்தில் சோர்வு தென்படும். சொந்தத் தொழில் புரிவோர் அதிக விழிப்புடன் இருக்கவும். சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

இடபம்

இதயப் படுதாவில் இன்பக் கூத்து. வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளமாகும். தொழில்துறையில் புதிய வெற்றி கிடைக்கும். ஆரம்பத்தில் எதிர்த்தவர்கள் ஆதரவு கொடுப்பதற்கு முன்வருவார்கள்.

மிதுனம்

உடலநலம் சிறிது பாதிக்கப்படும். வைத்திய வழிகளில் பணம் செலவாகும். சகோதர வழிகளில் பணம் செலவாகும். சகோதர வழியால் சஞ்சலம் தோன்றும். எண்ணிய கருமத்தில் தடையேற்படும். ஓய்வு விரும்பத்தக்கது இவ்வாரம் அமைதி வேண்டும்.

கடகம்

மாதுருவழிப் பெருமை கிட்டும். மனம்போல் யாவும்நடக்கும். கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமுமுண்டு. இதயத்தை தொடும் சம்பவங்கள் இடம்பெறும். சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பமும் ஏற்படும்.

சிங்கம்

சூழ்நிலையில் நல்ல மாறுதல்கள் தென்படும். அமைதியான வாழ்வுடன் தெய்வததின் அருளும் கிடைக்கும். தொழில் துறையிலும் பாராட்டுச்சேரும் புத்திரர்களால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

கன்னி

எதிர்பார்த்த விஷயத்தில் ஏமாற்றம் தென்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். சிலருக்கு ஆயுதபீடைக்கு இடமேற்படும். குடும்பத்திலும் குறைகேட்க நேரிடும்.

துலாம்

வாழ்க்கையில் தென்றல் வீசும். காதல் சிட்டுக்களுக்கு சிறப்பான வாரம். கணவன் மனைவி உறவு இறுக்கமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் தென்படும். உறவினர்களின் ஆதரவும் கிட்டும்.

விருச்சிகம்

எண்ணிய விடயத்தில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலைவாரிவிடக் கூடும். நிதானம் வேண்டும். பணமுடைவேதனை தரும் மனத்தளர்ச்சிக்கு இடங்கொடாதீர்.

தனுசு

உங்கள் நடவடிக்கைகளில் தனிச் சிறப்புத் தென்படும். பெரியவர் ஒருவர் உங்களுக்குக் கைகொடுத்து உதவுவார். குடும்பம் வளம் நிறைந்ததாகக் காணப்படும். பயன்தரும் பயணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம்.

மகரம்

தொழில் துறையில் தொல்லைகள் தோன்றும். முயற்சியால் முன்னேற்றம் உண்டு. பாராட்டுகளும் கிடைக்கும். கடமையில் புதிய ஆர்வம்ஏற்படும். சிலருக்கு இடமாற்றத்திற்கும் இடமுண்டு. வியாபாரிகளும் சிறப்படைவர்.

கும்பம்

மனைவாழ்வில் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும். குழந்தைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும். வருமானத்திலும் உயர்ச்சியுண்டு. புதுமனை கட்டுவதிலும் சிலர் கவனம் செலுத்துவர். புதுத் தொழில்முறைகளிலும் மனம் நாடும்.

மீனம்

அவசரம் வேண்டாம். ஆயுத பீடைக்கும் இடமுண்டு. நில், நிதானி, அமைதி உன் காலடியில்.ஆத்திரத்தை அடக்கவும். நண்பர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம். முன்னேற்றமும் தடைப்படும்.

திருமலை
க.வே.ரவீந்திரன்

★ ''மனிதத் தன்மையை மனிதர் பெற உறுதுணையாய் விளங்குவது கல்வியே''

—வில்லியம் வேட்ஸ்வர்த்.

★

ஒரு சிறந்த மனிதனை உருவாக்குவதே கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும்.

— சுவாமி விவேகானந்தர்

கோப்பி தேநீர் வேண்டாம்

சாப்பாட்டுக்குப் பிறகு தேநீர், கோப்பி அருந்தினுல் உடம்புக்குக் கேடுவிளைவிக்கும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள். சாப்பாட்டின் பின் தேநீர்,கோப்பி பருகுவதால் சாப்பாட்டிலுள்ள இரும்புச்சத்து உடம்பில் சேராதபடி தடுக்கப்படுகிறது. இதனுல் இரத்தச் சோகை நோய் ஏற்படுகிறது.

— சச்சி

குறுநாவல்



ஒரு திட்டம் மூடப்படுகிறது

து.வைத்திலிங்கம்

[7]

இந்தச் சம்பவங்கள் நடந்து ஆறு மாதங்களுக்கு மேல் சென்றுவிட்டன. பூஞ்சோலை பூஞ்சோலையாகவே இருந்தது.

அரசகேசரி ஒவ்வொருவார இறுதியிலும் கொழும்புக்குச் சென்றுவந்தான். அவன் இப்பொழுது பெரிய 'பிசி'யாகத் திரிந்தான்.

பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டு வேறு ஒருவர் புதிதாக வந்து பதவியேற்றுவிட்டார். அவர் பல்கலைக்கழகத்தில் அரசகேசரியோடு கூடப்படித்தவர். அவனுக்குத் தூரத்து உறவு கூட! அது அவனுக்கு மிகவும் வசதியாக அமைந்தது. புதியவரின் பெயரை மந்திரியிடம் அரசகேசரியே சிபார்சு செய்து- 'அவரை இங்கு எடுப்பித்தால் எங்களுக்கு நல்லது'-எனச் சொல்லிச் செய்த ஏற்பாடு அது.

இப்பொழுதெல்லாம் அரசகேசரி முழங்கேணித்திட்டத்துக்கு இரண்டு வாரத்திற்கு ஒருமுறைதான் போவான். திட்டத்துக்குச் செல்லும் போதெல்லாம், பகல்சாப்பாடு கனகலட்சுமி கடையில்தான், அவன் சாப்பிடும்போது கடையை இழுத்து மூடிவிட்டு, கதிராசி கோயில் வாசலில் போய் அமர்ந்துவிடுவான்.

''என்ன கதிராசி கடை பூட்டியிருக்கு?''- யாரும் கேட்பார்கள்.

''தலைவர் சாப்பிடுறாரு, குழப்பக்கூடாதுங்க'' - இப்படிப் பதில் கூறுவான் கதிராசி. நடக்கும் விஷயங்களைப் பார்த்துச் சிரித்தது முழங்கேணி.

பூமணியின் மனம் பெரிதும் கலக்கமடைந்தது. அவள் படித்துவிட்டு உத்தியோகம் பார்க்கவே விரும்பினாள். ஆனால் ஆரம்பத்தில் அரசகேசரியின் தூண்டுதலால்தானே உத்தியோக எண்ணத்தைக் கைவிட்டாள்!

அவள் விவசாயத்தையும் ஒரு பாடமாக எடுத்துச்சித்தியடைந்தபடியால்தான் முழங்கேணித் திட்டத்தில் குடியேறச் சம்மதித்தாள். திட்டத்தில் தனக்களித்த காணித்துண்டை மிகப்பரந்த அளவில் அபிவிருத்தி செய்யவேண்டும்; தான் ஒரு மாதிரி விவசாயியாகத் திகழ வேண்டும் எனக் கனவுகள் பல கண்டாள். ஆனால் அவளின் கனவுகள் யாவும்; ஒவ்வொன்றாகச் சிதையத் தொடங்கியதை அவளால் தாங்கமுடியவில்லை.

பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு எத்தனையோ தடவைகள் சென்றாள். முறைப்பாட்டுக்கு மேல் முறைப்பாடாய் எழுதிக்குவித்தாள். ஆனால் அவை ஒன்றும் எடுபடவில்லை.

''ஏ. ஜீ. ஏ. அரசகேசரியின்ரை ஆள்! அவர் நீ என்ன தான் எழுதிக் கொடுத்தாலும் கவனிக்கமாட்டார்!''-இப்படி அவளுக்குப் பலர்கூறினார்கள்.

ஆனால் அவள் சலிப்படையவில்லை. அலுவலகத்திற்கு இரண்டு வாரத்திற்கு ஒரு முறை போகத்தான் செய்தாள்.

ஏ. ஜீ. ஏ. தன் மூக்குக் கண்ணாடிக்குள்ளால் இவளைப் பார்த்தார். தான் மனதில் நினைத்திருந்த எல்லாவற்றையும் மூச்சுவிடாமல் சொல்லி முடித்தாள் அரசகேசரியின் 'தர்பார்' கதைகளைக் கூறும் பொழுது அவள் விம்மி வெடித்தாள். ஆனால் ஏ.ஜீ.ஏ, அசையவில்லை.

''இஞ்சை பார் சும்மா அழுது மனுசனுக்குத் தலையிடியை உண்டாக்காதை. உங்களுக்குள் ஒற்றுமை இல்லை... சின்ன விஷயங்களுக்கும் சண்டை பிடிக்கிறியளாம். இப்ப நீ சொன்னவிஷயத்தை நான் கவனிக்கிறன். இனி அடிக்கடி இஞ்சை வரவேண்டாம். சும்மா நினைச்ச பாட்டுக்கு முறைப்பாடு எழுதிக் கடுதாசியை வீணாக்காதே, ஒருக்கா எழுதினால் எனக்கு விளங்கும்தானே.

''சரிநீபோகலாம்''— முகத்தில் எவ்விதச் சலனமுமில்லாலாமல் அவர் கூறிவிட்டார்.

''அநியாயம் பிடிச்சவங்கள்..'' - தனக்குள் திட்டிக் கொண்டே அலுவலகத்தை விட்டுவெளியேறினாள் பூமணி.

மந்திரி தான் அளித்தவாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றத்தான் செய்தார் அரசகேசரி கொடுத்த லிஸ்டின்படி படித்த இளைஞர்கள், யுவதிகள் சகலருக்கும் அவரவர் தகுதிக்கேற்றமாதிரி உத்தியோகம் கிடைத்தது. தபால் இலாகாவில் மட்டும் முப்பது இளைஞர்களுக்கு வேலைகிடைத்ததும், பூஞ்சோலைமக்கள் வியந்தனர். சகலரது சிந்தனையும் அரசகேசரியின் பால் திரும்பியது! அவனை மதியாதவர்கள் கூட இப்பொழுது புதுக் கௌரவம் கொடுக்கத் தலைப்பட்டனர். வீதியில் அவனைக்கண்டால் போதும், ''தம்பிவாருங்கோ'' என உள்ளத்தில் இருந்ததோ இல்லையோ அன்பொழுக அழைத்தனர்.

அரசகேசரிபுன்முறுவலுடன் தலையாட்டிவிட்டுச் சென்றுவிடுவான். அவனுக்குத் தேவையானதெல்லாம், மற்றவர்கள் தன்னை முழுமையாகக் கௌரவிக்கவேண்டும், பூஞ்சோலைப்பகுதியில் தான் ஒரு முதன்மையானவனாய்த் திகழ வேண்டும் என்பதே ஆகும்!

சகல குறிச்சிகளிலும் அவனின் அந்தஸ்து அதிகரித்தது. அங்கெல்லாம் அவனது தயவால் அரசாங்க வேலைபெற்றவர்களின் தாய்தந்தையர் அவனைத்தம் இஷ்ட தெய்வமாகப் போற்றத்தொடங்கினர்.

மந்திரி, தான் பூஞ்சோலைக்கு வரும் நிகழ்ச்சி இருந்தால் ஒரு வாரத்துக்கு முன்னரே அரசகேசரிக்குத்தன் செயலாளர் மூலம் அறிவித்துவிடுவார்.

இப்பொழுதெல்லாம் அரசகேசரி தான் ஓடித்திரிவதில்லை, இருந்த இடத்தில் வைத்துக்கட்டளை பிறப்பித்தால் அவன் நினைத்ததிலும் பார்க்கக்கனகச்சிதமாக ஒழுங்குகளைச் செய்து முடித்துவிடுவார்கள்.

அதில் அவனுக்குப் பெரிய பெருமை!

பூஞ்சோலைப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஏதோ ஒரு பெரியமோசடி நடந்துவிட்டது! அங்கு பணிபுரியும் ஊழியர் இருவர் அரசகேசரியின் ஆட்கள். அவர்கள் அவனிடம் வந்து உள்ரகசியங்களை அவிழ்த்து விட்டார்கள். அரசகேசரியும் இப்படி ஒரு நல்லசந்தர்ப்பத்துக்காகத் தானே காத்திருந்தான். அவன் துரித கதியில் செய[illegible] கணக்குப் பரிசோதனை நடந்தது. பின்னர் கொழும்பிலிருந்து வந்த அதிகாரிகள்குழு [illegible]சாரணையை மேற்கொண்டது, பலன், பரமலிங்கங்கத்தை தலைவராகக்கொண்ட நெறியாளர் சபை உடனடியாகக் கலைக்கப்பட்டது. பரமலிங்கம் பதறினான். தன்கௌரவம் அந்தஸ்துஎல்லாம்குலைந்துவிட்டன எனத்தன்னுள்ளே அழுது புலம்பியவன்; எம்பியிடம் ஓடினான். எம். பியும் அது தனக்குக்கிடைத்த அவமானம் எனக்கருதி எல்லா இடமும் தொடர்புகொண்டார். ஒரு பலனும் கிட்டவில்லை!

ஒரு வாரத்துக்குப் பின்னர், அரசகேசரியைத் தலைவராகக் கொண்ட மூன்று அதிகாரிகள் சங்க நிர்வாகப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டனர்.

அரசகேசரியைத்தம்பிஎன்று அழைத்தவர்கள் இப்பொழுது தலைவர் என அழைக்க ஆரம்பித்துவிட்டனர். சங்கத்துக்குப் புத்துயிர் கொடுக்க வேண்டுமெனச் சொல்லிக் கொண்ட அரசகேசரி பல நடவடிக்கைகளை ஒவ்வொன்றாக எடுக்கத்தொடங்கினான், ஒவ்வொரு குறிச்சியிலுமுள்ளகிளை முகாமையாளரையும் கடும் பரிசோதனைக்குள்ளாக்கினான். தன்னை முன்பு மதியாதவர்களை, அலட்சியம் செய்தவர்களையெல்லாம் பழிக்குப் பழி வாங்கவேணும் என்ற குரோத உணர்வை வளர்த்துக் கொண்டான்.

முழங்கேணித் திட்டத்துக்கு அண்மையில் சங்கத்திற்கு ஒரு கிளை அமைந்தது. திட்டத்தின் அங்கத்தவர்களுள் ஒருவரான கமலாவின் தமையன் இந்திரராசா என்பவன் கிளை முகாமையாளராய் இருந்தான். எம்பியின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். இயற்கையிலேயே இரண்டு கால்களும் முடமாகிப் பிறந்தவன் அவன். வெற்றிலை வாயும் சிரிப்புமாகச் சகலருடனும் நட்பாகப் பழகுவான். அவனது குடும்ப நிலை காரணமாகவும்ஓடியாடி வேலை செய்யமுடியாது என்ற காரணத்துககாகவுமே எம்பி தனது முழுச் சிபார்சுடன் சங்கத்தில் அவனை வேலைக்குச் சேர்ப்பித்தார்.

பெண்கள் திட்டத்தில் அரசகேசரியின் அக்கிரமங்கள் பொறுக்க முடியாமல், கமலா தன்னுடைய வீட்டில் சென்று முறையிட்டிருந்தாள். பொறுமையின் எல்லையை மீறிய இந்திரராசா ஒருநாள் பூஞ்சோலைக் கடைத்தெருவில் பலருக்கு முன்னிலையில் அரசகேசரியை வாயில் வந்தபடி பேசிவிட்டான். பேசியது மட்டுமல்லாமல் மண் அள்ளித் திட்டியும் விட்டான். அச்சம்பவம் அரசகேசரியின் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது.

சமயம் இலகுவில் வந்தடைந்தது அரசகேசரிக்கு. பரிசோதனையின் பின் இந்திரராசாவை வேலையில் இருந்தும் இடைநிறுத்தம் செய்து விட்டான். அவனின் நிலை பரிதாப[illegible] மீண்டும் வேலைகொடுக்கவேண்டும் எனறும் கோரி அரசகேச்ரியிடம் தூது சென்றார்கள். ''கடைசிவரைமுடியாது! நான் சங்கத்திலை இருக்கு மட்டும் இந்திரராசா சங்கப் படி மிதிக்க விடமாட்டன்!''என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான் அரசகேசரி.

அரசு முன்னர் திட்டமிட்டிருந்தபடி பெண்கள் திட்டத்தில் இரண்டாவது குழாய்க் கிணறுதோண்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. திட்டத்தில்உள்ள பின்புறக்காணிக்காரர்கள், இனித்தங்கள் தண்ணீர்ப் பிரச்னை தீர்ந்து விடும் என்ற நம்பிக்கையில் மனமகிழ்ந்தனர். கிணறு தோண்டும் இடம் பாறைகள் நிறைந்த இடமாக இருந்தபடியால் கிணறு தோண்டும் பணி பல நாட்கள் நீடித்தன கடைசியில் கிணறு தோண்டி முடிந்தது. மோட்டார் இணைத்து அதற்குற் சிறு கட்டிடமும் கட்ட வேண்டியிருந்தது. மழைக்காலமென்றபடியால் அதுமுடிந்ததும் கட்டுமான வேலைகளை ஆரம்பிக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டத. ஆனால் கிணற்று வேலை முடிவடைந்த இரண்டு வாரங்களுக்குப்பின் குழாய்க் கிணற்றினுள் கல்லுகளை நிறையப் போட்டுப் பழுதாக்கி விட்டனர். பூமணி தான்இதை கண்டுபிடித்தாள். உடனடியாக அரசகேசரிக்கு இதுபற்றி அறிவித்தாள். அரசகேசரியும் நீர் வழங்கல் சபை அதிகாரிகளும் உடன் விரைந்து வந்து பார்வையிட்டனர். எவ்வளவோ கஷ்டப்பட்டு முடித்த பணியை இப்படிப் பாழ்படுத்தி விட்டனரேஎன்று தனது மனவருத்தத்தைத் தெரிவித்த பொறியியலாளர் மௌனமாக அங்கிருந்து சென்று விட்டார். கடைசிவரையிலும் அந்த சமூகத்துரோகமான வேலையைச் செய்தவர் யார் என்று கண்டுபிடிக்கவே முடியவில்லை. பூமணி இதற்கும் உதவி அரசாங்க அதிபரை உடன்வந்து இதைப் பார்வையிடுமாறுஒரு முறைப்பாட்டை எழுதிப் போட்டாள்.

முறையான வாய்க்கால் வசதி அமைத்தால் முதலாம் கிணற்றிலிருந்து நீரை மற்றையகாணிகளுக்கும்கொண்டு போகலாம் என்று முன்னரே வரைபடங்களுடன் திட்டம் ஒன்று தயாராகியிருந்தது. அதையாவது செய்துதரமுடியாதா என்ற கோரிக்கையை எழுதிப்பூமணியும் வேறு சில பெண்களுமாய் அரசாங்கஅதிபரிடம் நேரில் சென்று கையளித்தனர். அரசாங்க அதிபருக்கு முழங்கேணிப் பெண்கள் திட்டம் தொடங்கிய விதமும் அது சீரழிந்தவிதமும் நன்கு தெரியும். அரசகேசரிக்குத்தற்போது உள்ள அரசியல் செல்வாக்கினால், அவனை அவரால் ஒன்றும் செய்யமுடியாமலிருந்தது ஆகவே,பெண்கள்கேட்ட கோரிக்கையையாவது செய்து கொடுக்க வேண்டும் என்ற உண்மையான அக்கறையில் அவர்செயலாற்றினார். சிமெந்திலான வாய்க்கால் அமைக்கும் பணிக்கு அவரது முயற்சியால் வெகுவிரைவில் அனுமதி கிடைத்தது.

பூஞ்சோலைப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் இந்தவேலையைக் கொந்தராத்து முறையில் செய்துமுடிக்கும் எனக் கூறி அவ்வேலையைச் சங்கம் ஏற்றுக்கொண்டது.

சங்கம் என்பது அரசகேசரியே.

''சங்கத்தின் பேரிலைஎடுத்து தாங்க தலைவர் நான் பிரமாதமாய் செய்துமுடிப்பனுங்க''—கனகலட்சுமியின் கணவன் கதிராசி விடுத்த வேண்டுகோளை அரசகேசரியால் தட்டிக் கழிக்க முடியவில்லை.

வேலை நடந்தது. கதிராசிக்குச் சங்கம் உபகொந்தராத்து முறையில் இவ்வேலையைக் கையளித்தது ஒருவருக்கும் தெரியாது. வேலைகள் முடிந்து அதற்கான கொடுப்பனவும் முடிந்துவிட்டது.

குழாய்க் கிணற்றிலிருந்து ஒரு துளி நீர் வாய்க்கால் வழி மூலம் செல்லவில்லை. மேசன்மார் தங்கள் எண்ணத்துக்குக் கட்டியிருந்தனர்.

கிணற்றிலிருந்து நூறுயார் வரை நீர் படியானமாகப் பாய்ந்தது. ஆனால் அதற்கப்

(10ம் பக்கம் பார்க்க)

கல்வி சம்பந்தமான பழமொழிகள்

அறிஞர்க்கழகு அகத்துணர்ந்து அறிதல்
அறிவீனர் தமக்கு ஆயிரம் உரைக்கினும் அவம்
அறிவில்லார் தமக்கு ஆண்மையும் இல்லை
ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி
இளமையில் கல்
இளமைல் கல்வி சிலையில் எழுத்து
இமையிற் கல்வி எப்போதும் நிற்கும்
எண்இல்லாதவர் கண்ணில்லாதவர்
எழுத்தில்லாதவர் கழுத்தில்லாதவர்
எழுத்தறியத்தீரும் இழிதகைமை
கண்டது கற்கப்பண்டிதனாவான்
கல்லாடம் கற்றவனோடு மல்லாடாதே
கல்லாதவரே கண்ணில்லாதவர்
கல்வி கரையில கற்பவர் நாள்சில
கற்கையில்கல்விகசப்பு கற்றபின் அதுவே இனிப்பு
குருவில்லாதவர்க்கு வித்தையில்லை
குருமொழி மறந்தோன் திருவழிந்துபோவான்
குலவித்தை கற்றுப்பாதி கல்லாமற்பாதி
சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
நூலறிவேயாகுமாம் நுண்ணறிவு
பாடம் ஏறினும் ஏடதுகைவிடேல்
பேசப்பேச எந்த மொழியும் வரும்
அடக்கம் உடையார் அறிஞர்
அடங்காதவர் கல்லாதவர்
அப்பியாசம் கூச வித்தை
அப்பியாசவித்தைக்கு அழிவில்லை
அல்லும்பகலும் கசடறக்கல்
அறிவு ஆரறிவார் ஆய்ந்தவர் அறிவார்
அறிவுடன் ஞானம் அன்புடன் ஒழுக்கம்
அறிவுதரும் வாயும் அன்புரைக்கும் நாவும்

குப்தர் காலக் கலைமரபின் பின்னணியும் இயல்புகளும்

செ. கிருஷ்ணராசா
விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

''ஒரு பொற்காலம்'' என இந்திய வரலாற்றில் குறிப்பிடப்படும் குப்தர் காலமானது அறிவியல் ரீதியாக எல்லாத் துறைகளையும் நோக்கிய ஒரு மலர்ச்சிக்காலமாக விளங்கியது என்றால் அது மிகையாகாது. குறிப்பாகக் கலை பண்பாட்டுத் துறைகளைப் பொறுத்த வரையிலே இக்கூற்று மிகவும் பொருத்தமாக அமையுமெனலாம். பொது நோக்கிலே இந்தியக்கலைவரலாற்றில் குப்தர் காலத்தினை ஒரு''சாஸ்திரிய மரபுக்காலம்'' எனக் கொள்ளப்படுவதற்குரிய அடிப்படையானது ஓர் உண்மையான அழகியலுணர்வின் அணுகுமுறையுடனும் ஒழுங்குபடுத்தப்பட்ட குறியீட்டு விளக்க முறையுடனும்ஒருங்கே கொண்டு உந்தியமதமொன்றினால் உருவாக்கப் பெற்றகோட்பாடுகளுக்குட்பட்ட ஒரே சீரான கலையின் தோற்றப்பாடுகளை வெளிப்படுத்திய முறையின் சிறப்பியல்புகளிலே அமைந்திருந்தது.

இப்புதிய உத்வேகமானது, அதாவது இந்தியத் தேசிய ஆன்மிக உணர்வின் எழுச்சியானது ஒரு புதிய உந்துசக்தியாக தோற்றம் பெற்று குப்தர் காலத்தினை ஒரு கலைமலர்-சிவிழுமிய காலமாகத் திகழவைத்தது. இதுவே அழகியற் கலைகள் பொறுத்தும் பல புதுமைகளை ஈட்டிக்கொடுத்த காரணியாகவும் அமைந்தது. இத்தகைய பல புதுமைகளை குப்தர்கால இந்தியர்கள் அடைந்து கொண்டமைக்குச் சான்றாகவே இந்துக்கோயிற் கட்டிடக் கலையின் ஆரம்பம் அமைந்தது எனக்கொள்ளலாம்.

இந்தியாவின் அலங்காரக் கலை வரலாற்றிலே குப்தர் காலம் ஓர் உச்சமான நிலையைக் குறித்து நின்றமைக்கு ஏதுவாக அமைந்த காரணி, அக்காலத்தின் தொடக்கத்திலிருந்து அதன் முடிவுவரையுமுள்ள காலப்பகுதியிலே பல்வேறு வகையான தோற்றப்பாடுகளுடனான கலைவேலைப்பாடுகளானவை குப்தர்காலத்திற்கு முற்பட்ட கால பழைய கலைமரபுகளுக்குச் சமாந்தரமாக அவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பல சிறப்பியல்புகளைக் கொண்டதாகவும் நிலையான தன்செல்வாக்கினால் தொடர்ந்து வந்த கலை மரபுகளைப் பாதித்த வகையிலேயும் அமைந்திருந்தது.

குப்தர்காலக் கலைவனப்பின் பின்னணி

இதுவரை காலமும் பௌத்தமும் சைவமும் அவற்றின் அறிவியல், அறிவியல் ரீதியானது ஸ்தாபன ரீதியானவுமான தன்மை காரணமாக இந்தியா வடங்கலிலுமுள்ள உயர்குடிப் பிறந்தோரது மதங்களாகவே விளங்கி வந்தன. ஆனால் பௌத்தமானது இந்திய உபகண்டத்திற்கு வெளியே தென், தென்கிழக்காசிய, தூரகிழக்காசிய நாடுகளுக்கும் பரவியபோது (அம்மதமானது) வெளிநாட்டு ஆட்சியாளரையும் கவர்ந்து கொள்ளக்கூடிய ஒரு சர்வதேச மதமாகவும் மாற்றம் பெற்றுகொண்டு, அவ்வப் பிரதேசங்களில் மக்களுடைய வாழ்க்கை முறைகளில் ஊடுருவி அவர்களை நாகரிகப்படுத்தும் ஒருகருவியாகவும்தொழிற்பட்டுக் கொண்டிருந்தது. இக்கட்டத்திலே இந்தியாவின் முன்னணியிலே திகழ்ந்த பல பிராமணீய பீடங்களின் தத்துவ ஞானிகள், விஷ்ணுவின் பக்தர்களான பாகவதர்கள், சிவனடியார்களான காபாலிகர் அல்லது லாகுலின்கள், அரசவை பிராமணீய அமைச்சர்கள், அங்கு நடாத்தப் பெற்ற பிராமணீய சடங்காசாரமுறைகள், யாகங்கள், என்பவற்றிலிருந்து ஆதரவும் ஊக்கமும் பெற்றதாகவே குப்தர் காலத்துத் 'தேசிய உணர்வு' தோற்றம் பெற்றது. இத்தகையவோர் உணர்வின் பரவலுச்கு அடிப்படையாக சமஸ்கிருத மொழியின் பரவலான உபயோகமும் ஆதாரமாக அமைந்ததெனலாம்.

இறுதியான உயர்ந்தநிலை

குப்தர்கள் மதசகிப்புத்தன்மை கொண்டோராகக் காணப்பட்ட அதே நேரத்தில் விஷ்ணுவிடம் ஆழ்ந்த பக்தர்களாக, விஷ்ணுவின் அவதாரங்களுள் ஒன்றும் இந்தியத் தேசிய காவியத்தின் கதாநாயகனும், புராதன இந்தியாவின் இலட்சிய அரசமுறையின் முன்னோடியாக விளங்கிய இராமனிடத்தில் ஆழ்ந்த பற்றுக்கோடுடையவர்களாகவும் விளங்கினர். இத்தகைய ஒரு பின்னணியே மறைமுகமாக, புதியவொரு கோணத்திலமைந்த கலைமரபின் எழுச்சிக்கும் அதேநேரத்தில் மிகவும் வலுவுடைய ஓர் அலங்காரக்கலைமரபின் தோற்றத்திற்கும் இந்துக்கோவில்களினுடைய ஆக்கத்திற்கும் அடிப்படையாக அமைந்தது.

குப்தர்களது சாத்திரியக்கலை

வட இந்தியாவிலே நகரங்களின் தோற்றமும் வளர்ச்சியும் கி. மு. ஆறும் நூற்றாண்டினைத் தொடர்ந்து ஏற்பட்டது எனப்பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றது இவ்வாறு நகரங்களின் தோற்றமும் வளர்ச்சியும் அவ்வவ்விடங்களில் வாழ்ந்த மக்களது கலாசார - சமய வாழ்வு முறைகளிலேயும் பாதிப்பினை ஏற்படுத்தியது.

குப்தர்களுடைய ஆட்சிக் காலமும் இதற்கு விதிவிலக்கான தொன்றல்ல. இக்காலத்தில் பெரிய பெரிய நகரங்களில் வாழ்ந்த வர்த்தகர்கள் மற்றும் உயர்மட்டத்தைச் சேர்ந்த மக்களுடைய வாழ்வின் ஓரம்சமாகவே அக்காலக் கலைமலர்ச்சியும் உருவாகியிருந்தது. இக்காரணத்தினால் குப்தர்காலக்கலைமரபினையும் இடைக்கால இந்தியக் கலைமரபினையும் சேர்த்து நகரபாணி என்ற பதத்தினால் குறிப்பிடப்படுவது வழக்கமாயிற்று. இன்று இப்பதமானது இடைக்கால இந்தியக் கட்டிடக்கலையின் மூன்று முக்கிய பிரிவுகளில் வடஇந்தியப் பிரிவினைக்குறிக்கும் ஒரு பதமாக உபயோகிக்கப்படுகின்றது.

நகர அமைப்பு

செயற்கையான நீர்ச்சுனைகளையும் சிறு நீர்த்தேக்கங்களையும், வண்ணமலர்த் தோட்டங்களையும் கொண்ட நகரங்கள் பொதுவாக விலாசமானதாகவும், திறந்தவெளியமைப்பினையுடையவையாயும் வளங்கின. பெரிய பெரிய குளங்களின் பின்னணியில் கோவில்கள், படிக்கட்டு வரிசைகள், களியாட்ட மண்டபங்கள்என்பனகுப்தர்காலத்து நகரங்களின் தனிப்பண்புகளாக அமைந்தன. நகரின் மையத்திலே அமைக்கப்பட்ட ஒரு பாகமே நன்கு அரண் உள்ளதாக, பாதுகாப்பான முறையில் நான்கு பக்கங்களிலும் செங்கட்டிகளாலும் மண்ணினாலும் அமைக்கப்பட்ட மதிலையுடையனவாகவும், அதனைச்சுற்றி வெளிப்புறத்திலே ஆழ்ந்து அகன்ற அகழிகள் சூழப்பெற்றனவாகவும் அதன் பாதுகாப்பு நன்கு உறுதிப் படுத்தப்பட்டிருந்தது.

இடைக்கால இந்து நாகரிக வரலாற்றில் அல்லது ஓரளவுக்குத் தற்காலம் வரையிலான ஒரு கால எல்லையில் மிகவும் சிறந்த, ஆனால் இது வரை விஞ்சப்படமுடியாத பூரணத்துவம் வாய்ந்த வாழ்க்கைமுறையினை உருவாக்கியதன்அடிப்படையிலும் அவ்வாழ்வு முறையின் பயனாகத் தோற்றம்பெற்ற கலைவேலைப்பாடுகள் மரபு மாதிரியை - அடிப்படையாகக் கொண்டமைந்தமுறையிலும், அதேநேரத்தில்' அதிகாரபூர்வமான, ஆனால் இறுதியான கலைவடிவக் கோட்பாடுகளை உருவாக்கியுள்ளதன் அடிப்படையிலும் குப்தர் காலமானது இந்திய நாகரிக வரலாற்றில் ஒரு சாஸ்திரிய- மரபுக் காலத்தினை பிரதிபலித்துநின்றது.

குப்தர்காலக்கலையின் பொதுவியல்புகள்

பழமைக்கும் புதுமைக்குமிடையே ஒரு பாலமமமைக்கும் முயற்சியாகவே குப்தர் காலக் கலை நடவடிக்கைகள் அமைந்தனவென்றால் அது மிகையாகாது. இதற்குச்சிறந்தவோர் உதாரணமாகக் குகைக் கட்டிடக்கலையின் தொடர்ச்சிக்கும் இந்துக்கோவிற்கட்டிடக்கலையின் ஆரம்பத்திற்குமிடையே இருந்திருக்கக்கூடிய தொடர்புகளைக் குறிப்பிடலாம். இந்தியாவிலே குகைக் கட்டிடக்கலையின் தொடர்ச்சியும் இந்துக்கோயிற் கட்டிடக் கலையின் தோற்றமும் குப்தர் கால அலங்காரக்கலையின் பிரதான தளமாக அதனை வளர்த்தெடுத்த களமாகஅமைந்தன.

குப்தர்களது காலம்தொடங்கும் வரைக்குமுள்ள கால வெல்லையில் இக்குகைக்கட்டிடக் கலைமரபானது பொதுவாகப் பௌத்தத்துடனும், சமணத்துடனுமே இணைக்கப்பட்டிருந்தது, ஆனால் குப்தராட்சிக் காலத்துடனேயே அம்மரபினை முதன்முதலாக இந்து மதத்துடன் இணைக்கப்படுவதற்காக எடுக்கப்பட்டமுயற்சிகளிலே காணமுடிந்தது. இக்கட்டத்திலே இந்துக்குகைக் கோவிற்கட்டிடக் கலையானது மிகவும் விசாலமான அடிப்படையில் பின்பற்றப்பட்டது! அதேநேரத்தில் அறுத்த கற்களால் இந்துக்கோவில்களை நிர்மாணிப்பதற்காக எடுத்த முயற்சிகள் மிகமிகச் சிறியளவிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டன பூபாலிலுள்ள உதயகிரிக் குகைக்கோயில். போல்ஸ் குகைக்கோயில், பைனு குகைக்கோயில். அம்றித்தாகுகைக்கோயில் என்பன மிகவும் பிரசித்திபெற்ற விசாலமான குப்தர்காலக் குடைவரைக் குகைக்கோவில்களா

(10-ம் பக்கம் பார்க்க)

வீட்டு வளவில் இரண்டு மூன்றடி வாழை

முக்கனிகளில் மிகவும் இன்றியமையாததும், இலகுவில் உண்டாக்கக் கூடியதும், பல விதமான பயன் தருவதும், மங்கலகரமானதும், எல்லாமானதும் வாழைப்பழம். குழந்தைப் பிள்ளையின் பாலுணவின் பின் பதமான பக்குவமான உணவு வாழைப்பழம். குழந்தைப் பாடலில் வளவில் முற்றத்திலும் வேலியிலும், பக்கத்திலும் வாழை குலை போட்ட செய்தி தாளத்தோடு கேட்கிறது. கூத்தும் ஆடுகிறார்கள்.

''ஆத்துவாழை குலைபோட
ஆறனும் பெண்டிலும் கூத்தாட
முத்தத்து வாழை குலை போட
முத்தனும் பெண்டிலும் கூத்தாட
வேலியில் வாழை குலை போட
வேலனும் பெண்டிலும் கூத்தாட
பக்கத்து வாழை குலைபோட
பத்தனும் பெண்டிலும் கூத்தாட''

வீட்டுத் தோட்டத்தில் வாழைக்கு முக்கிய இடம் கொடுத்தல் அவசியம். அது பரம்பரையாக நின்று பயன் தருகிறது.

'மில்க்வைற் செய்தி'

'கின்னஸ்' புத்தகத்தில் படம்!

யாழ். இளைஞரின் சாதனை!

ஐ. சண்முகலிங்கம்

யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்கள் சொந்த நாட்டிலே இருந்து தேடித்தரும் பெருமைகளை விட வெளிநாடுகளில் இருந்து நமக்குப் பெற்றுத்தரும் பெருமை மேலானது.

இந்த வகையில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவரும் தற்சமயம் பிரான்ஸில் வாழ்பவருமான அன்ரன் கிறிஸ்ரி என அழைக்கப்படும் அழகராசா ஸ்ரீஸ்கந்தராசா பிரெஞ்சு நாட்டில் இருந்து கொண்டு உலகசாதனைகளை நிகழ்த்திவருகிறார் என்பது நம்எல்லோருக்கும் மகிழ்ச்சி தரும் விஷயம்.

பிரெஞ்சு நாட்டில் இவர் நிலை நாட்டிய இரு உலக சாதனைகளை (இதுவரையாரும்) முறியடிக்கவில்லை. இச்சாதனைகள் உலக சாதனைப்புத்தகமான கின்னஸ் நூலில் இடம் பெற்றுள்ளதுடன் இவரது படத்தையும் பிரசுரித்துள்ளார்கள்.

நின்று கொண்டு காலை உயர்த்திக் கொள்ளுதல் அதாவது ஒரு காலை உயரே உதைத்தல இவர் பிரான்ஸில் நிலை நாட்டிய உலக சாதனைகளில் ஒன்று.

கடந்த ஆண்டு இச்சாதனையை கின்னஸ் மத்தியஸ்தர்கள் முன்னிலையில் நிகழத்தியுள்ளார் கிறிஸ்ரி.

ஆறுமணித்தியாலம் ஐந்து நிமிடம் ஐம்பத்தைந்து விநாடியில் 10,376) [illegible] [illegible] தாறு தடவைகள் காலை உதைந்து உலக சாதனையை நிலைநிறுத்தியுள்ளார். இதற்கு முன்பாகஇச் சாதனை எண்ணாயிரத்து நானூற்றுத் தொண்ணூற்றொரு 8491) தடவைகள் உதைத்தது ஆகும். இத்தனை தடவை உதைய எடுத்துக் கொண்ட நேரம் நான்கு மணி 13 நிமிடமாகும். இச்சாதனையை நமது கிறிஸ்ரி முறியடித்து உலக சாதனையை நிகழ்த்தியதன்மூலம் இவரின் பெயர் கின்னஸ் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

பாரிஸ் நகரில் சாதனையில் ஈடுபட்டிருக்கிறார் கிறிஸ்ரி

கிறிஸ்ரிநிகழ்த்திய மற்றொரு உலக சாதனை முழங்காலால் நீண்டதூரம் நடந்ததுஇதுவும் பிரான்ஸில் நிகழ்த்தப்பட்ட சாதனைதான். இவ்வாறு நடந்த தூரம் [42 . 32] நாற்பத்திரண்டு தசம் மூன்று இரண்டு கிலோமீட்டர் தூரமாகும். இப்படி இது வரை யாருமே நடக்கவில்லை. இச்சாதனையும் கின்னஸ் புத்தகத்தில் பதிவாகியுள்ளது.

மேலேகுறிப்பிட்ட இரு உலக சாதனைகளையும்

(10-ம் பக்கம் பார்க்க)

பனையும் பண்டைத்தமிழ் இலக்கியமும்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
மனோன்மணி சண்முகதாஸ்

மனித வாழ்க்கை இயற்கையோடு நெருக்கமாக இணைந்துள்ளது. மரமும், மலையும் மனிதனின் மனதிலே நிறைந்திருந்தன. ஆறும் கடலும்அவனது பார்வையிலே நிலைத்திருந்தன. மண்ணும் விண்ணும் எண்ணத்திலே இயைந்திருந்தன. மனிதன் வாழ்க்கை நடைமுறைகள் இயற்கையின் தோற்றங்களோடு தொடர்புற்று விளங்குகின்றன. தமிழர் வாழ்க்கையில் இப்பண்பினைச் சிறப்பாகக் காணமுடிகின்றது. அதனைப் பல தமிழ்ப் பாடல்களும் சான்று பகர்கின்றன. குறிப்பாக இங்கு தமிழர் வாழ்வியலோடு பனைமரம் இணைந்துள்ளமை விளக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் பனையின் வளம்பெற்ற பூமியாகும். வறண்ட நிலமெனினும் வளமார் பனைமரங்கள் வளர்ந்த நிலமாகும். அதனால் மக்களது வாழ்வியலோடு பனைமரம் நெருங்கி இணைந்துள்ளது. மக்களது பண்பாட்டிலே பனை நிலைத்துள்ளது பனை தந்த வளங்கள் வாழ்வோடு அது இணைய உதவின. உணவுநிலையில் மட்டுமன்றி உணர்வுநிலையிலும்கூட நம்முன்னோர் பனை மரத்துடன் இணைந்துள்ளனர். இந்த இணைப்பு நிலை இலக்கியங்களிலே பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் போற்றப் பெற்றுள்ளது. உருவிலும் உணர்விலுமாகப் பனை தமிழர் வாழ்வில் எவ்வாறு இணைந்திருந்தது என்பதை இன்று எம்மவர் அறிய வேண்டியதும் அவசியமே. கால மாற்றத்தினால் வாழ்வு நிலை மாறித் திசைகெட்டு நாம் செல்லும் வழிஇருட்டாகி நிற்கின்றோம். இருட்டிலே தோன்றும் நெடும்பனைகளே எமக்கு விளக்காக, வாழ்வு நடக்க வேண்டியுள்ளது. பனையின் துணையோடு வாழ்ந்த முன்னோர் செய்திகளைத் தேடி அறிந்து துணைக்கொள்ளவேண்டும். அதற்கென ஆய்வுகள் பல செய்யவேண்டும்.

சங்க இலக்கியங்களிலேபனை பற்றிய செய்திகளை நாம் நிறையக் காணலாம். அகவாழ்விலும் புறவாழ்விலும் அது நெருங்கியுள்ளதைஅறியலாம். இயற்கையிலே இருண்ட நிறம் கொண்ட பனை, மக்கள் மனதிலே நிறைந்திருக்கின்றது. வறண்ட வாழ்க்கைப் பாதையைவளமாக்கியுள்ளது. காதலும் வீரமும் காணஉதவியுள்ளது. புலவர்களின் மொழிவளத்திலே சிறப்புப்பெற்றுள்ளது. பனையின் தோற்றமும் பண்பாடும் பரவலாகவே தமிழ்ப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அகவாழ்வு நிலையில்

மனிதனின் உள்ளம் சம்பந்தமான வாழ்க்கை நிலையைப் புலவர்கள் அகவாழ்வு என்று கண்டனர். ஆணும் பெண்ணுமாக இணைந்த கூட்டு வாழ்க்கையிலே அவர்களது உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பினாலே அறிதல் கூடும். குறிப்பு நிலையினை விளக்கப்பனைதான் பயன்பட்டுள்ளது நற்றிணையிலேஒருபாடல்; புலவர் வெள்ளிவீதியார் பாடியது. தான் விரும்பும் காதலனைப் பிரிந்த பெண்ணின் அகநிலைக் கூற்றாக அமைந்த பாடல் அது. காதலன் பிரிவினால் தான் அடையும் துன்பம் கூறும் பெண்ணின் குரல். கடற்கரையிலே வாழ்பவள் சூழலில் இருக்கும் மரங்களைப் பார்க்கிறாள். மண்ணுக்கும் விண்ணுக்குமாக அவள் பார்வை தாவுகிறது. திங்கள் வானிலே தோன்றிவிட்டது. கடல் அலைகள் ஒலமிடுகின்றன. தாழை மலர்ந்து நிற்கிறது. கண்ணிலேபடும் காட்சிகள் யாவும் மனத்துயரை மாற்றுவனவாக இல்லை பார்வையினை மீண்டும் மேலே செலுத்துகின்றாள். அருகே உயர்ந்து நிற்கும் கரிய பெரியபனை மரத்தில் ஒரு சோககீதம். உளளத்தை நெருடும் குரல். துணையிழந்த அன்றிற் பறவை துணைதேடிக்குரல் கொடுக்கிறது கண்டவள் மனதிலே சற்று மாறுபாடு. ஒரு கணம் தன்துயர் மறந்து அந்தப் பனையிலே இருக்கும் அன்றிலையே பார்க்கிறாள், துன்பம் எனக்கு மட்டுமில்லை. இந்தப் பறவைக்கும் கூட இருக்கிறதே என்று எண்ணியவள் தன்துயரை மறந்து விட்டாள். நெடும்பனையில் நின்று வாடும் அன்றிலின் குரலுக்கே காது கொடுத்துவிட்டாள். பிரிவின் ஒற்றுமைநிலை. பேச்சுக்கிடமில்லை. தோற்றம்தான் உணர வைக்கின்றது. 'மையிரும்பனையே' மனதில் நிறைந்துவிட்டது. புலவர் நாவிலே பாடலாகியது. சொற்களால் அணிசூழப் பனை மரம் நிற்கிறது.

திங்களும் திகழ்வான்
ஏர்தரும் இளநீர்ப்
பொங்குதிரைப் புணரியும்
பாடோ வாதே
ஒலிசிறந்து ஓதமும் பெயரும்
மலிபுனல்
பல்பூங் கானல் முள்ளிலைத்
தாழை
சோறுசொரி குடவையின்
கூம்புமுகை அவிழ
வளிபரந்து ஊட்டும்
விளிவில் நாற்றமொடு
மையிரும் பனைமிசைப்
பைதல உயவும்
அன்றிலும் என்புற நரலும்.
[நற்றிணை: 335]

பழந்தமிழ்ப்பாடலிலே பனை மனவுணர்வைக் காட்டி நிற்கிறது. பனைநிறைந்த கடற்கரை நிலம் காதல் வாழ்வைப் படம் பிடித்துள்ளது. ஒருவனுக்கு ஒருத்தியாகி அவன் வரவுக்கென்றே வாழும் பண்பாடு. பனைமரம் போல வளர்ந்த பண்பாடு. தமிழர் வாழ்விலே நிலைத்துவிட்ட பண்பாடு.

ஆணும் பெண்ணும். ஒருவரையொருவர் கண்டு விருப்பம் கொண்டாலும் கற்புநிலையிலே இணைந்து வாழ்ந்தனர். இருவர் விருப்பினையும் தோழி பெற்றோரிடம் கூறி இணையத் துணையாய் நிற்பாள். பனைமரம் படர்ந்த நிலத்தோர் பண்பாடு அதுவாக இருந்துள்ளது. குறுந்தொகையிலேவரும் பாடலொன்று அதனை விரிவாகவே விளக்குகிறது. உலோச்சனார் என்ற புலவர் புலமையின் துணையால் பண்பாடுபேசுகிறார். பனைமரங்கள் நிறைந்த மணற்பாங்கான நிலத்திலே வாழ்பவள்.

ஒருவனை விரும்பி விட்டாள். மணஞ்செய்ய அவன் வருவான் என எண்ணிக் காத்திருக்கின்றாள். காலம் கடக்கிறது. சூழற்கோலமும்மாறிவிட்டது. அவன் இன்னமும் வரவில்லை. அவளது துயர்கண்ட அருமைத் தோழி தேறுதல் கூறுகிறாள். உண்மைநிலையை அறியாது தோற்றத்தைக் கண்டு துயரப்படும் தலைவியை நோக்கி அவள் கூறும் வார்த்தைகள்; இயற்கையின் நிலையைக்காட்டி இன்னல் தீர்க்கும் அவள் மதிநுட்பம்; பனையின் தோற்றம் அவள் துயரம் களையத் துணையாகின்றன. ''கடற்கரையிலே காற்றுக் காலத்திலே பனைமரங்கள் மணலால் அடிபுதைய மறைந்து நிற்கின்றன. அடம்பன் கொடி படர்ந்த மணல் குவிவதாலே நெடிய பனைகளெல்லாம் குறிய பனைகளாகத் தோற்றுகின்றன. உண்மையிலேயே அப்பனைகள் குறியன அல்லவே. காலம்மாற மீண்டும் மணல் கரையை நீண்டு தோன்றும். அதுபோல உன் காதலனும் உரிய காலத்திலே வந்துவிடுவான். வருந்தாதே.'' தோழியின் சொற்களின் உண்மை காதலியின் உணர்விலே சேருகிறது. மனத்துயரும் தீருகிறது. பனையின் தோற்றம் காதலன் நிலையைக் காட்டுகிறது. புலவர்;

தோழி கானல்
ஆடரை புதைய
கோடையிட்ட
அடும்பிவர் மணற்கொ டூர
நெடும்பனைக்
குறிய வாகுந் துறைவன்...
[குறுந்தொகை: 247]

என்ற அடிகளால் விளக்கும் வாழ்வியல் எவ்வளவு உண்மையானது. இயற்கையோடு நாம் இணைந்து வாழ்வதை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. வாழுகின்ற சூழலோடு மன உணர்வுகளைச் சிறப்பாக அக உணர்வுகளைச் சேர்த்து நோக்கும் தன்மை போற்றுதற்குரியது. மணலால் புதைய நிற்கும் நெடும்பனைகள் மனம் துயரிலே புதையாமல் வாழவைக்கின்றன. நேரில் காணும் தோற்றங்கள் நெஞ்சிலே படியும் துயர அலைகளை மடியச் செய்கின்றன. பனை என்றுமே நெடும்பனைதான். காற்றினாலே மணல்சேர்ந்து அதன் தோற்றம் குறியதாதல் வெறும் தோற்றமே. சங்கப் பாடலில் காணும் இப்பனையின் கோலம் யாழ்ப்பாணத்திலும் நாம் காணும்கோலமே.

மக்கள் இளமை நிலையில் களவின்பம் நாடுவர். அது இயற்கை நிலை. ஆனால் பண்பாடு பெற்ற உள்ளங்கள் விரசவாழ்வை விரும்புவதில்லை. பறவைகள் சில ஒழுக்க நிலையிலே பகலிலே சேராமல் வாழுகின்றன. மனிதனும் அவற்றிடம் கற்கவேண்டிய பண்பாடு இது. காமத்தால் மயங்கி ஒழுக்கம் தவறாமல் வாழப் பனையும் பயன்பட்டுள்ளது. இளைஞன் ஒருவன் எந்நாளும் பகற்போதினிலே வந்து அழகிய பெண்ணொருத்தியுடனே நீண்டபோது அளவளாவுகின்றான் அவன் செயலால் ஊரிலே அலர் பரவிவிட்டது. முறையாகத்திருமணம் செய்து விட்டால் அலருக்கிடமில்லை. பண்பு கெடாது. மணம் செய்ய எண்ணாமல் தினமும் பகலில் வருபவன் தவறை உணர வேண்டும். அந்தத் தலைவனைத் தோழி வழிப்படுத்த எண்ணுகின்றாள் அவன் வாழுமிடத்துப் பனைகளின் தோற்றத்தையே துணைக்கொண்டு செயற்படுகிறாள். தலைவனை அழைத்துக் கூறுகின்றாள். ''கடற்கரை நிலத்திலே வாழ்பவனே! இயற்கையின் தோற்றத்தை ஒருமுறை பார். எமது முற்றத்திலே நிற்கும் பனைமரத்திலே இரவிலேதான் நாரைகளும் அன்றிலும் வந்து தங்குகின்றன அதுவே பண்பாடாயமையும் நீயும் இரவிலே வருவதே இயற்கை நிலையாகும்.''

தோழியின் சொற்களில் வாழ்வுநிலையை அவன் உணருகின்றான். பறவைகள் இரவிலே கூடி வாழ்கின்றன. அதற்காகவே பனைமரத்திலே வந்து தங்குகின்றன. பகலிலே உணவுதேடிப் பறந்து திரிகின்றன. இரவிலே துணையோடு இன்பம் காணப் பனையிலே வந்து தங்குகின்றன. முற்றத்திலே நிற்கும் பனையிலே நடக்கும் இனிய குடும்பவாழ்வு என்காதலியின் உள்ளத்திலும் எண்ணமாயிருக்கும். பறவைகளைக் கண்டு அவள்மனம் என்னையும் ஒருசேர எண்ணி ஏங்கும். இனிமேல் திருமணம் செய்ய வேண்டும் என்று உறுதி கொள்கிறான் பனையில் இரவில் வாழும் அன்றில்கள் போல நாமும் இல்லத்திலே கூடிவாழ வேண்டும் என நினைத்து செயற்படுகின்றான். அன்று அகநானூறு 360-ம் பாடலில் இப்பனைக்குடும்ப வாழ்வு விளக்கப்பட்டுள்ளது. பனை நிற்கும் சூழல் வாழ்வு நிலைகள் அதனுடன் இயற்கையாகவே இணைந்து நோக்கப்பட்டுள்ளன. ஒரு தலைக்காதல் நிலையிலும் கூடப்பனை தமிழர் வாழ்விலே தொடர்புற்றிருந்துள்ளது. தான் விரும்பிய பெண்ணை மணம் முடிப்பதற்காகப் பனையின் துணையை நாடும் ஆடவர் பலரும் அன்று வாழ்ந்துள்ளனர். அவர்நிலைகள் பாடலிலே குறிப்பிடப்பட்டுள்ளன. தன் எண்ணத்திலே நிறைந்தவள் உருவத்தை எழுதி, பனங்கருக்கிலே செய்யப்பட்ட குதிரையிலே ஏறி வீதிவலம் வரும் ஆண்கள் பலர். அவர்கள் செயல் 'மடலேறல்' என அழைக்கப்பட்டது. குறுந்தொகையில் வரும் பாடலொன்று இதனை விளக்குகின்றது.

பொன்னேர் ஆவிரைப்
புதுமலர் மிடைந்த
பன்னூல் மாலைப் பனைபடு
கலிமாப்
பூண்மணி கறங்க வேறி
நாணட்
டழிபடர் உண்ணோய் வழி
வழி சிறப்ப
இன்னள் செய்த திதுவென
முன்னின்
றவள்பழி நுவலு மிவ்வூர்
ஆங்குணர்ந் தனமயினீங்
கேகுமாறுளெனே.
[குறுந்தொகை 163]

தான் விரும்பிய பெண்ணைப் பெறுவதற்கு உதவும்படி அப்பெண்ணின் தோழியை வேண்டுகின்றான் ஓர் ஆடவன். தோழியோ அதற்கு உடன்படவில்லை. எனவே அவன் மடலேறி தனது எண்ணத்தை எல்லோருக்கும் வெளிப்படுத்த முடிவு செய்கின்றான். பனைமடலிலே செய்த குதிரையைப்பொன்னையொத்த நிறமுடைய ஆவிரையினுடைய புதிய பூக்களால் அலங்கரித்து, மணிகளைக் குதிரையின் கழுத்திலேகட்டி, அவைஒலி செய்ய ஏறிவரும் அவன் செயல் ஊரவர்க்கு உண்மையை உணர்த்தும். குதிரையிலே எழுதித் தொங்கவிடப்பட்ட பெண்ணின் உருவம் யாருக்காக அவன் மடலேறினான் என்பதை விளக்கும். மடலேறி வருதலுக்காக அவன் நாணப்படவில்லை. பெண்ணின் மேல் ஊர்பழி கூறவே வழிசெய்கின்றான். இங்கு காமத்தின் நாணமற்ற தன்மையை வெளிப்படுத்தப் பனைமரம் பயன்படுத்கப்படுகிறது கலித்தொகையிலும்

மணிப்பீலி சூட்டிய
நூலொடு மற்றை
அணிப்பூளை ஆவிரை எருக்
கொடு பிணித்துயாத்து
மல்லலூர் மறுகின்கண்
இவட்பாடும் இஃதொத்தன்
எல்லீருங் கேட்டீமின் என்று
படரும் பனையீன்ற மாவுஞ்
சுடரிழை
நல்கியாள்] நல்குபவை
[கலி 138]

எனவருகின்ற அடிகளும் மடலேறுதல் பற்றிக் குறிப்பிடுகின்றன.

[இன்னும் வரும்]

கோட்டம் ஒன்று போதாது..!

கம்பன் தமிழ்க் கோட்டம் கால்கொள்ளும் வேளையிலே
தம்பி இவன் வந்து தமிழ் வாழ்த்துப் பாடுதலும்
சாலும் என்றார்; பின்னைச் சரி என்று வந்துவிட்டேன்.
நாலும் இல்லை; மூன்றுமில்லை. இரண்டு மணித்துளிகள்.
கம்பனுக்கு மட்டும் தமிழ்க்கோட்டம் கட்டுவதா?
கம்பன் என்ன கொம்பா...? கவிஞர் பிறர் இருக்க
கம்பனுக்கு மட்டும் தமிழ்க்கோட்டம் கட்டுவதா..?
சங்கப் புலவோர்க்கு......?
சற்றுப் பொறு தம்பி.
சங்கப் புலவோர் சரிதம் வரைந்தவர்தான்!
சங்கம் இருக்கோ...இல்லை வெறுங்கதையோ...
தங்கம் இருக்கு தமிழில்! எனினும் ஓ
கம்பன் அங்கே இல்லை.
அடுத்துள்ள காலத்தில்,
தெள்ளுதமிழில் திருக்குறளைப் பாடிவைத்த
வள்ளுவனார் வாக்கு வயிரம் பதித்ததொரு
தூணந்தான்! ஆனாலும் காணவில்லைக் கோட்டத்தை.
ஏன் இல்லை என்றே இளங்கோவன் வந்தாலும்
தான் இல்லைக் கம்பன் என்றேதான் கூறுகிறான்.
தேனில் மொழியெடுத்த கானல்வாரிகூட
மானில் விழி எடுத்த சீதைக்கு மாற்றில்லை.
கண்ணகி என்னுமொரு பாத்திரத்தைத் தான்வார்த்து
பெண்ணிற் பெருந்தக்க பேறுடையாள் ஆக்கிடினும்
எண்ணில்...இளங்கோவைக் கம்பன் மறைக்கின்றான்.
காலத்தை வென்ற கவிதை அவன் பாத்திரங்கள்
வாலிகளும்கூட வடிவான பாத்திரந்தான்.
பாத்திரங்கள் அத்தனையும் காத்திரங்கள்!
அப்படியா?
ஏலாதா கம்பா உனைவெல்ல என்கிறதார்...?
தந்தம் எடுத்துத் தமிழ் கடைந்த கைவினைஞன்
சந்த விருத்தத் தமிழ் தந்த ஓர் முனைவன்
சிந்தா மணியாம் சிகரம் அமைப்பான் என
வந்தான்—திருத்தக்கதேவன்! எங்கள் கம்பனுக்கோ
சீராமன் என்ற பெருமாள் கிடைத்ததினால்...
[சீராமன் என்னும் பெரும் ஆள்கிடைத்ததினால்]
சேராத செல்வமெல்லாம் சேர்த்துவிட்டான் காப்பியத்தில்
காராடும் கூந்தல்—கதித்தாடும் பெண்இளமை
நீராடும் கண்கள், நினைக்கமுடியாது
சீதை அழகை! எனவே திருத்தக்க
தேவர் அழுகை தவிர்க்க முடியாதே!
''அன்னம் நடையாட்டம்! அவள், விழிக்கோர்
கொண்டாட்டம்',
என்னத் தமிழை எழுதிவைத்த கம்பனுக்குக்
'கோட்டம் ஒன்று போதாது! கொடிமாடக்கூடல்களைப்
போட்டவனை மேல் மேலும் 'பொப்புலறைஸ்' பண்ணுங்கள்
கோட்டம் ஒன்று போதாது. கொடிமாடக் கூடல்களைப்
போட்ட, அவனை மேன்மேலும் புகழ்விளக்கம் செய்யும் எனக்
கேட்டு, அகல்வேன் பாட்டாளி
கோட்டம் உயர்க!

— பா. சத்தியசீலன்

★ 10-02-86 இல் இடம்பெற்ற கம்பன் தமிழ்க் கோட்டம் கால்கோள் விழாவில் கலந்துகொண்ட கவிஞரின் கவிச் சொல் வாழ்த்து.

பிரதி உபயம்: ஜெயராஜ்-கம்பன் கழகம்.

கின்னஸ்

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

கிறிஸ்ரி நிகழ்த்துவதற்கு பிரெஞ்சு அரசாங்கமே சகல செலவுகளையும் ஏற்றுக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

காலைமேலே உதைக்கும் சாதனையை படம் பிடித்து அதனை பிரான்ஸில் உள்ள கின்னஸ் சபையினரும் பிரிட்டனிலுள்ள புத்தகத்தில் வெளியிட்டுள்ளமை மேலும் பெருமை தரும் செய்தியாகும்.

முழங்காலில் நடக்கும்தனது முன்னைய உலக சாதனையை கிறிஸ்ரி மற்றொருமுறைதானே முறியடித்துவிட்டதும் மற்றொரு சிறப்பம்சமாகும்.

இவரது சாதனையைப் பாராட்டி பிரெஞ்சு அரசாங்கம் தங்கப் பதக்கத்தையும்பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்துள்ளது.

பிரான்ஸில் இருந்து நம்மண்ணுக்குப் புகழ்தேடித்தந்து கொண்டிருக்கும் கிறிஸ்டி நமது நாட்டில் இருந்தபோதும்உலக சாதனைகள் இரண்டினை நிகழ்த்தியவர் என்பதனை நாம் மறந்து விட்டோமா?

யாழ்ப்பாணம், வைத்தீஸ்வரக்கல்லூரியில் 1979ம்ஆண்டு கல்வி கற்றுக்கொண்டிருக்கும் போது தனது 14வது வயதில் அவர் முதல் உலகசாதனையை நிகழ்த்தினார்.

கின்னஸ் புத்தகத்தில் இச் சாதனை பதிவாகியுள்ளது.

ஒற்றைக் காலில் நீண்ட நேரம் நிற்கும் சாதனையேஅதுவாகும். குலதெய்வமாகத்தான் போற்றுகின்ற 'கொலைவிலக்கி ஆரோக்கியமாதா' ஆலயமுன்றலில் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் இச்சாதனையை அவர் நிலைநாட்டியுள்ளார்.

முப்பத்தொரு மணித்தியாலம் 48 நிமிடம் 5 செக்கன்ட் வரை ஒற்றைக்காலில் நின்று இச் சாதனையை நிகழ்த்தினார்.

பின்பு 1981-ம் ஆண்டு மற்றொரு சாதனையை நிகழ்த்தினார். இதுவும் உலக சாதனையாகும். 120செக்கன்டில் அதாவது 2 நிமிடங்களில் இருநூற்றைம்பத்திமூன்று (253) தடவைகள் இருந்து எழும்பியதே அச் சாதனையாகும் ஒருசெக்கன்டில் இரண்டுக்கு மேற்பட்ட தடவைகள் இருந்து எழும்பி விடுவது எவ்வளவு அதிசயமான காரியம்தான்!

எந்த நேரமும் சுறுசுறுப்புடன் இயங்குகின்ற இந்த இளைஞன் மேலும் பல சாதனைகள் நிகழ்த்த திட்டமிட்டுள்ளார். தனது 21 வயதினுள் நான்கு உலக சாதனைகளை நிகழ்த்திவிட்ட இவர், நிச்சயம்மேலும் பல சாதனைகளை நிகழ்த்துவார் என்பதில் சந்தேகமே இல்லை

கல்லூரியில் கௌரவம்

இதனிடையே உலக சாதனைகள் நிகழ்த்திக் 'கின்னஸ்' புத்தகத்திற் தனது பெயரை இடப்பெறச் செய்த யாழ் வைத்தீஸ்வரா பழைய மாணவன் திரு அழகராசா ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் புகைப்படம் கடந்தவாரம் மேற்படி கலாசாலையில் அதிபர் திரு. சிவசரவணபவான் அவர்களால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. மாணவனுக்கு மேலும் கௌரவத்தை அளித்துள்ளது.

குறுநாவல்

[7-ம் பக்கத்தொடர்ச்சி]

பால், மேடான இடத்தில் சமநிலை பாராது வாய்க்காலை அமைத்துவிட்டனர். இதைப் பார்த்த திட்ட அங்கத்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர்.

''யாரை நோவது?'' கமலா கேட்டாள்.

''எங்கடை தலைவிதியைத்தான் நோகவேணும்.'' வார்த்தையை முடிக்கு முன் பூமணி அழுதுவிட்டாள்.

(அடுத்த வாரம் முற்றும்

தலைக்கனம்

ஒரு இளவரசன் [illegible] நாட்டின் மீது படையெடுத்து அதை முற்றுகையிட்டு தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரத் தீர்மானித்தான். இதை கேள்விப்பட்ட அவனது நண்பன் உடனடியாக இளவரசனைப் பார்க்கச் சென்றான்.

''நான் வரும் வழியில் வடக்குத் திசையை நோக்கி குதிரையில் சென்றுகொண்டிருக்கும் ஒரு மனிதனைச் சந்தித்தேன். தெற்குத் திசையிலுள்ள ஒரு நாட்டிற்கு தான் சென்றுகொண்டிருக்கிறேன் என்று அவன் எனக்குக் கூறினான்''

''அப்படியென்றால் நீ ஏன் வடக்குத் திசையைநோக்கி சென்றுகொண்டிருக்கிறாய்'' என்று நான் அவனைக் கேட் கேட்டேன்.

''நான்தவறுசெய்யவில்லை; சரியைத்தான் செய்கின்றேன். சரியான மார்க்கத்தில்தான் செல்கின்றேன். ஏனென்றால் என்னிடம் சிறந்த குதிரைகள் இருக்கின்றன'' என்று அவன் உறுதியுடன் பதிலளித்தான்.

'' 'நீ சிறந்த குதிரைகளை வைத்திருக்கக்கூடும். ஆனால் நீ தவறானதிசையில் சென்றுகொண்டிருக்கிறாய்!'

'நன்று என்னிடம் ஏராளம் பணம் இருக்கின்றது' அவன் செருக்குடன் கூறினான்.

'' 'நீ போதிய பணத்தை வைத்திருக்கக்கூடும். ஆனால் நீ செல்வது பிழையான வழி.'

'' 'மிகநன்று. என்னிடம் மிகச் சிறந்த, கைதேர்ந்த தேரோட்டி இருக்கின்றான்' அவன் அழுங்குப் பிடியாக கூறினான்.

'' 'உன்னிடம் சிறந்த குதிரைகள் இருக்கலாம். உன்னிடம் ஏராளம் பணம் இருக்கக்கூடும். உனது தேரோட்டி கைதேர்ந்தவனாக இருக்கலாம். ஆனால் நீமுன்னேறிச் செல்லச் செல்ல, நீ செல்ல வேண்டிய நாட்டிலிருந்து மேலும் மேலும் தூரத்திற்குத்தான் சென்றுகொண்டிருக்கின்றாய். ஏனென்றால் நீ செல்லவேண்டிய சரியான திசை தெற்கு. அதற்குப் பதிலாக நீ தவறாக எதிர்த் திசையில், அதாவது வடக்கு நோக்கிச் செல்கின்றாயே!'''

''நான் அவனுக்குவிளக்கிக் கூறினேன். நான் கூறியதை அவன் கேட்டால்தானே. அவன் தனது வழியிலேயே சென்று கொண்டேயிருக்கின்றான் ''

''முடிவு''

''அனுபவம்சிறந்தஆசான்'

நாடோடிக் கதைகள்

✶ தமிழில்: நீர்வை பொன்னையன்

தார்மீகம்

இரக்க உள்ளம் படைத்த ஒரு பாம்பு ஒரு சிட்டுக்குருவியைப் பிடித்தது. ஒரேயடியாக அதை விழுங்கிவிடப் பாம்பு எண்ணியது. ஆனால் அதைக் கொடூரமாகக் கொலைசெய்ய பாம்புவிரும்பவில்லை. ஆகவே அந்தக் சிட்டுக் குருவியைத் தனது உடலால் இறுக்கிச் சுற்றியது.

தனது தலைவிதியைத் தானே விரும்பி ஏற்றுக் கொண்டு தன்னை அர்ப்பணிப்பதற்கு சிட்டுக் குருவியை இணங்கச் செய்வதற்கு திரும்பத் திரும்ப பாம்பு முயற்சி செய்தது.

சிட்டுக்குருவி பாம்பின் விருப்பத்திற்கு இணங்க மறுத்துப் போராடியது. அதன் முயற்சி பலிக்கவில்லை.

பாம்பின் முயற்சியும் பலிக்கவில்லை. இறுதியில் பாம்பு சிறுகச் சிறுக சிட்டுக் குருவியைக் கொன்று விழுங்கியது.

''பாருங்கள்! நான் ஏனைய பாம்புகளைப் போல முரட்டுத் தனமுடையவனல்ல. அவற்றிலிருந்து நான் முற்றிலும் மாறுபட்டவன்.''

தன்னடக்கத்துடன் பாம்பு கூறியது.

குப்தர்காலக் கலைமரபின்

[8ம்- பக்கத் தொடர்ச்சி]

கும். மறுவளமாகப் பார்க்கும் போது, காஞ்சியிலுள்ள 17ம் இலக்க சிவன்கோவில், திகாவாவிலுள்ள விஷ்ணு கோவில்- நாச்சனாவிலுள்ள பார்வதி கோவில், தியோகார்ஹ்குலுள்ள விஷ்ணு கோவில், பூமாராவிலுள்ள சிவன்கோயில்கள் என்பன குப்தர் காலத்திலே கற்களால் கட்டப்பட்ட சிறப்பினைக் கொண்டமைந்தன எனலாம்

இந்துக்கோயிற் கட்டடக்கலை

குப்தர் காலத்திற்குமுன்; வடஇந்தியாவிலே பெஸ் நகரில் அமைந்திருந்த கருடன் கோவிலைத்தவிர, வேறு எவ்விதத்திலேனும் இந்துக் கோயிற் கட்டடக்கலை மரபு இருந்திருந்ததற்கான தொல்லியல் ஆதாரங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை ஆனால் இலக்கிய ஆதாரங்களுள்ளடங்கக்கூடிய சதபதப்பிராமணத்திலே மரத்தினாலமையக்கூடிய இந்துக் கோயில்கள் பற்றிய விபரணங்கள் பொறிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். ஒருவேளைஇத்தகையவிபரணங்கள் வேதகால இந்தியாவிலே இருந்திருக்கக்கூடிய இந்துக் கோவில்களின் மாதிரியமைப்பினை பிரதிபலிப்பதாக அமையலாம்.

குப்தர்கால இந்துக்கோயிற் கட்டிடக்கலை மரபிலே இருபிரதான தூண் அமைப்பு முறைகள் ஒன்றிலொன்று தொடர்பான வகையில் கையாளப்பட்டன. இத் தூண் அமைப்பு முறையில் குப்தர் ஆட்சிக் காலத் தொடக்கத்திலிருந்து அதன்இறுதிவரையுள்ள காலப் பகுதியிலே பொதுவானஆனல் மாறாத அம்சமாக விளங்கியது. பூரண கும்பகலச போதிகையே ஆகும். குப்தர்காலத்து தூண் போதிகைகள் ஒருவகையில் கூறப்போனால் இரண்டு வகையான மரபுகளை ஒருங்கே கொண்டமைந்தவையெனலாம். டோரியக் கலை மரபிற்குரிய பானையுடன் சேர்ந்த இலை-தழையுடனான போதிகை அதாவது இந்தியாவில் 'பூரண கலசம்' எனக் குறிக்கப்படும் பாகம் ஆரம்பத்திலும் குஷன் போதிகையுடன் இணைந்த Acanthus போதிகை பிற்பட்ட காலத்திலும் அமைக்கப்பட்டன.

அலங்காரக் கலையில்

இலட்சியத் தன்மைகள்

இரண்டாம் சந்திர குப்தனதும், 1-ம் குமார குப்தனதும் ஆட்சியின் கீழ்உருவங்களை வெளிப்படுத்தும் கலையானது உண்மையான அதன் வடிவத்தினையும் தன்மையையும் பெற்றுக் கொண்டது எனலாம். முற்றிலும் எதிர்மாறான ஒரு புதிய நோக்கு அதாவது மத்திய தரை செமிற்றிக் - ஈரானிய உலகிலிருந்து வேறுபட்ட கலை நோக்குக்கள், இவ்வெப்பவலய நாட்டுக்குரிய ஒரு தன்மையுடன் அதாவது விசேடமாகக் குறிப்பிடுவதாயின் இடைவிடாத ஆனந்தத்துடனும், அன்புடனும் இயற்கையைக் விளங்கிக் கொள்கின்ற ஆற்றலுடனும், நளினத்தன்மை, தட்ப-வெப்பம், காலநிலை, உடலியல் - உணர்வியல் - காமவியல் தொடர்பான அறிவுடனும், மாதிரியின் பிரமாணம் என்பவற்றுடனான கலைநோக்குடனும் இங்கே சிற்பக்கலை வளர்ச்சியடைந்தது எனலாம். உடலின் தசை, தாவரங்கள், மிருகங்கள், மனிதர்கள், தெய்வங்கள் யாவும் உயிர்த்துடிப்புடையனவாக தோன்றுமாறு படைக்கப்பட்டன. காம உணர்வுக் கலையில் முக்கியமான சிலஅழுத்தமான பரிமாணங்களாக மென்மையான காதுகள், பூரணமான / முழுமையான கழுத்து, உருண்டு திரண்ட மார்பகங்கள் மெல்லியதான இடை, அகன்ற இடுப்பு, இவ்வாறு உருவங்கள் குப்தர் காலத்திலே வெளிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கனவாகும்.

முடிவுரை

குப்தர்காலத்திலே தோற்றமடைந்ததிலிருந்து இந்தியக் கலையின் தத்துவமானது அதன் அழகியல் அனுபவங்களையோ அல்லது ஆன்மிக அனுபவங்களையோ அவ்வாறே வெளிப்படுத்துகின்ற சக்திமூலம் மனிதனுடைய உணர்வுகளையும் தெய்வீகக்களையுடன் இணைந்த ஓர் ஒற்றுமைப்பாட்டிற்குஇட்டுச்செல்லப்பட்டது. எல்லாக்கலைகளினுடைய தோற்றப்பாட்டிற்குமுரிய அடிப்படை ஆத்மிக ரீதியான அல்லது தெய்வவியல் தொடர்பான தோற்றப்பாட்டின் பழைய ஒரு வடிவமாகும். அவை ஒன்று திரட்டப்பட்ட ஊடகங்களினூடாக இத்தகைய அனுபவங்களைக் குறிப்பாலுணர்த்தின. அதாவது ஒவ்வொரு வடிவமும் ஒவ்வொருவர்ணமும் ஒவ்வொரு பொருளும் நேரடியாகஉணர்த்த வந்த பொருளினை உணர்த்தாது ஊகங்களினூடாக இத்தகைய அனுபவங்களைக் குறிப்பாலுணர்த்தும் தன்மையைப் பெற்றிருந்தன. அது மாத்திரமல்லாமல் அவையே குறியீடுகளாகவும் மாறி, அவை ஒவ்வொன்றிற்குமிடையேயுள்ள தொடர்புகள் கருத்துக்களுக்கும் அவற்றைச் சார்ந்து நிற்கும் சார்புத்தன்மைக்குமிடையிலான தொடர்பின் ஒட்டு மொத்தமான வெளிப்பாடாகவும் அ[illegible]ந்தன. அலங்காரக்கலையின் பொது அம்சங்களாக விளங்கிய நடன, சிற்பம், ஓவியங்கள் என்பனவே அதனை நிர்ணயித்த அடிப்படைகளாகவும் விளங்கியதனைக் குப்த மரபிலே காணமுடிந்தது.

● தவக்கால முதல் ஞாயிறு

ஆண்டவனுக்கும் சோதனையா?

பாலைவனம் வேதாகமத்தில் அடிக்கடிவரும் ஒரு சொல். இஸ்ரயேல் மக்களின் சிந்தனையிலே வளர்ந்த ஒரு செயல். இந்தப் பாலைவனத்தில்தான் இறைவன் தன் மக்களை முதலில் சந்தித்து அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டார். பாலைவனம் கசப்புள்ள வாழ்க்கையாக அவர்களுக்கு இருந்தாலும் அங்குதான் அவர்கள் மனத்தையரியத்துடனும் வலிமையுடனும் வளர்ந்தார்கள். கிறிஸ்துவும் இந்த மரபிலே வளர்ந்து வந்தபடியால் அவரும் பாலைவனத்திற்கு செல்லுகின்றார் ஏன் அவர் அங்கு செல்கிறார், அதிலும் குறிப்பாக இந்த நேரத்தில்?

தன்னுடைய தந்தையோடு தனிமையிலே உரையாட, உறவாட தந்தைமேல் கொண்ட பாசத்தை வலுப்படுத்த, ஆழப்படுத்த, மேலும், தன்னுடைய வாழ்க்கையிலே முக்கிய முடிவுகளை எடுப்பதற்காக பாலைவனம் செல்கின்றார். போர்தான் நதியிலே திருமுழுக்குப் பெற்றபோது அவரின் பணி என்ன என்பதை உறுதிப் படுத்திக்கொண்டார். தந்தையினால் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பெற்று நற்செய்தியை யாவருக்கும் அறிவிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். நாசரேத்தின் வாழ்க்கை முடிவு பெறுகின்றது. அவர்பணிசெய்ய வேண்டியபாதை கடினமானபாதை, ஆபத்துக்கள் நிறைந்த பாதை, உண்மையைச் சொன்னால் உலகம் பகைக்கும், உண்மை உறைத்தாலும் எடுத்துச் சொல்லத்தானே வேண்டும். எனவே இந்த கடின பணிக்கு தன்னைத் தயார்படுத்தித் தனிமையிலே தன்தந்தையின் உதவியைக் கேட்க செபத்தின் வழியாக தன்னை முழுவதும் இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டி பாலைவனம் சென்றார்.

தனிமையை விரும்பி தந்தையோடு உறவாட பாலைவனம் சென்றார். ஆனால் அந்தத் தனிமைக் குழப்ப பணியைக் கெடுக்க அலகையானவன் அங்கு சென்று கிறிஸ்துவை சோதிக்கின்றான். நாற்பது நாட்களாக தவமிருந்த கிறிஸ்துவுக்கு கற்களைக்காட்டி இதை அப்பமாக்கி சாப்பிடலாமே என்று சோதித்தான். கிறிஸ்து அப்பத்தால் மட்டும் அல்ல உயிர்வாழ்வது என்று விடைபகன்றார். மீண்டும் உலக அரசுகள் அனைத்தையும் அவருக்குக்காட்டி சோதித்தான். யேசு விட்டுக் கொடுக்வில்லை இறுதியாக ஜெருசலேம் கோயில் முகட்டில் நிறுத்தி, நீர்கடவுளின் மகனானல் கீழே குதியும் என்று அலகைசோதித்தான். அதற்கு கிறிஸ்து உன்கடவுளாகிய ஆண்டவரை சோதியாதிருப்பாயாக என்று சொல்லி எல்லா சோதனைகளையும் முறியடித்து வெற்றி பெற்றார்.

கிறிஸ்து காட்டிய பாதையிலே நாமும் செல்ல வேண்டுமாயின் நாமும் போதனைகள் பலவற்றை எதிர் கொள்ள வேண்டிய நேரங்கள் பல. நம்மையும் அலகை பலவிதத்தில் சோதிக்கலாம். அதற்கு

(12ம் பக்கம் பார்க்க)

✶ வண. எஸ். டேமியன் அ. ம தி.

எமது சிறுகதை

மணலெடுத்து வீடு கட்டி...

டர்ஷிக்கா கதிர்காமநாதன்

பிள்ளையார் கோவில் மணி கணீரென ஒலித்தது. அந்த ஓசை மனதுக்கு இதமாக இருந்தது. ''பிள்ளையாரே. .'' என்று மனதுக்குள்ளேயே முணு முணுத்துக் கொண்ட சரோஜா கால்முகம் கழுவக் கிணற்றடிக்கு வந்தாள். இருள் மெதுவாகப் பரவ ஆரம்பித்திருந்தது. வாளியில் தண்ணீரை மொண்டு முகத்தை நன்றாக நனைத்துக் கொண்டாள். தேய்ந்துபோன சோப்பைக் குழைத்து முகத்தில் குதப்பி ... அதன் வாசனையை அனுபவித்துக் கொண்டு, முகத்தை நன்றாக அலம்பி, கிணற்றடியை விட்டு வெளியே வந்தாள்.

கோழிக்குஞ்சுகளுக்குத் தீவனம் குழைத்து வைத்துக் கொண்டிருந்த வசந்தி அவளைக் கண்டதும், ''அடுத்த வீட்டு ராசாத்தி மாமி வந்திருக்கிறா அக்கா... அம்மாவோட என்னவோ குசுகுசுக்கிறா'' என்று சொன்னாள். கொடியில் கிடந்த துவாயால் முகத்தை அழுந்தத்துடைத்த சரோஜா ''அவவுக்கு என்ன வேலை? ... ஆரையும் பற்றிக் கதைக்கா விட்டால் நித்திரை வராது '' என்று சலிப்புடன் பதிலளித்தாள் 'கீச் கீச்...'' என்று கத்திக் கொண்டு தீவனத்தை ஆசையுடன் கொத்திக் கொண்டிருந்த குஞ்சுகளைச் சுவாரஸ்யமாகக் கவனித்துக் கொண்டிருந்தாள் வசந்தி. மஞ்சள் நிறக்குஞ்சொன்று அவசரமாகத் தீவனத்தைத் தின்று கொண்டும் தாயின் கால்களினிடையே புகுந்து கொண்டுமிருந்தது, அவள் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தது.

வசந்தி சிறுபிள்ளை போல் சத்தம் போட்டுச் சிரித்து ''அக்கா மஞ்சள் குஞ்சு சரியான துடுதுடுப்பு ... '' என்று தமக்கையிடம் கூறினாள். அந்தக்குழந்தைத் தனமான குமரியைப் பாசத்துடன் பார்த்துக் கொண்டு ''உன்னைப் போல சரியான குழப்படி தான்'' என்றாள், சரோஜா

''என்னைப் போலயா ? நான் இப்படிக் கெதியா ஓடுவனே?'' —சிரித்துக் கொண்டு தான் வசந்தி பதில் தந்தாள். ஆனால் அவள் குரலில் இழையோடிய ஏக்கத்தைச் சரோஜாவினால் உணர்ந்து கொள்ள முடிந்தது. பேச்சை மாற்றும் விதமாக ''இருட்டிப் போச்சுது வசந்தி ... மினக்கெட்டுக் கொண்டு நிக்காமல் போய் சுவாமிப்பட விளக்கைக் கொளுத்து...'' என்று கூறிவிட்டு நடந்தாள்.

விறாந்தையில் அம்மாவும் ராசாத்திமாமியும் அமர்ந்திருந்தார்கள். இவளைக்கண்டதும் ''உதார் பிள்ளை சரோவே ... இருண்டு போச்சுது எனக்குக் கண்ணும் தெரியேல்லை '' என்று முணுமுணுத்துக் கொண்டாள் ராசாத்தி. ''ஓம் மாமி இருங்கோ கோப்பி கொண்டு வாறன் '' என்று கூறிக் கொண்டே சரோஜா உள்ளே சென்றாள். ''இப்பதான் தேத்தண்ணி குடிச்சுட்டு வாறன்... எனக்கொண்டும் வேண்டாம் '' ராசாத்தி சொல்வது காதில் விழவே ''மெத்த நல்லம் '' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்ட சரோஜா கைவிளக்கின் உதவியுடன் அடுப்படி வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள். கொஞ்ச நேரம் கழித்து ராசாத்திமாமியை அனுப்பி விட்டு அம்மா குசினியை நோக்கி வந்தாள். அவள் நடையில் வேகம் தெரிந்தது. ''ராசாத்தி மாமி போட்டாவே ... '' — சரோஜா கேட்டாள். ''ஓமோம் ... '' என்ற பாக்கியம் அவள் அருகில் பலகை ஒன்றை எடுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள். ''உனக்கு விஷயம் தெரியுமே சரோ'' தாயின் குரலில் தொனித்த பரபரப்பை உணர்ந்து கொண்ட அவள் கேள்விக் குறியுடன் தாயின் முகத்தைப் பார்த்தாள்.

''உவன் சந்திரன் நாளைக்கு வெளிநாட்டில் இருந்து வாறானாம்.''

சரோவின் இதயம் ஒரு முறை துள்ளி ஓய்ந்தது. நாடி நரம்பெல்லாம் மகிழ்ச்சி வெள்ளம் அலைபாய, சந்தோஷத்தால் பூரித்த முகத்தைத்தாய் அடையாளம் கண்டு கொண்டு விடக்கூடாதே என்று நினைத்தவளாய் முகத்தைத் திருப்பி அடுப்பைச்சரி செய்தாள். வாயிலிருந்து 'உம்' மென்ற வார்த்தைமட்டும் வெளிப்பட்டது.

''இஞ்ச வந்து கலியாணம் செய்து கொண்டு பொம்பிளையையும் கூட்டிக் கொண்டு போகப்போறானாம். தாய்க்காறி ஊருப்பட்ட சீதனம் கேக்கிறாவாம் கன இடங்களில் இருந்து சம்பந்தம் பேசி வருகுதாம் . '' — பெருமூச்சுடன் கூறினாள் பாக்கியம். கூடத்தில் லாந்தர் ஒளியில் புத்தகம் படித்துக் கொண்டிருந்த வசந்திக்கு இது கேட்டிருக்க வேண்டும். அவள் உரத்த குரலில், ''உதில இருக்குற மாமிக்கு அத்தான் வாற விஷயத்தை எங்களுக்குச் சொல்ல ஏலாமப் போட்டுதே... ? '' என்று கேட்டாள். ''அவ ஏன் எங்களுக்குச் சொல்லுறா ... ? நாங்கள் பரதேசிகள் உன்ர மாமி சொந்தம் கொண்டாடுற அளவுக்கு எங்களிட்டைக்காசு பணம் இருக்கே?'' என்று பொரிந்து தள்ளினாள் பாக்கியம். சரோ இதைப்பற்றி எல்லாம் சிந்திக்கும், நிலையில் இல்லை. அவள் நினைவெல்லாம் சந்திரனைச் சுற்றியே வந்து கொண்டிருந்தது.

மூன்று வருடங்கள் எவ்வளவு வேகமாகஓடி விட்டன. மூன்று வருடங்களின் முன் .. சந்திரன் ஜேர்மனிக்குச் செல்வதற்காக இவளிடம் விடை பெறவந்தபோது, இவளுடைய கலங்கிய விழிகளைத் துடைத்து ''மூன்று வருஷம்... மூன்று நாட்களாகப் பறந்து போடும் சரோ ... அதுக்குப் பிறகு என்ர சரோவை நான் கலியாணம் செய்து ஜேர்மனிக்குக் கூட்டிக் கொண்டு போடுவன், அம்மா எதிர்த்தாலென்ன ஆட்டுக் குட்டி எதிர்த்தாலென்ன எனக்கு ஒருதருக்கும் பயமில்லை'' என்று மனம் நிறையச் சொன்னவன் இதோ வரப்போகிறான்.

''அவர் தான் சொன்னபடி கட்டாயம் செய்வார். மாமி தன்ர ஆசைக்குக் கலியாணம் பேசிக்கொண்டு இருக்கட்டுமன் ... அவவுக்கு எங்கே எங்கட காதல் விஷயம் தெரியப் போகுது? ... என்ன எண்டாலும் அத்தான் கெட்டிக்காரர் தான். மூன்றாம் பேருக்கும் தெரியாமல் எங்கட காதல் விஷயத்தைக் கொண்டு போட்டார். அவற்ற சிநேகிதர்கள் இரண்டொரு பேருக்கும் என்ர சிநேகிதி சுமதி ஒருத்திக்கு மட்டும் தான் நாங்கள் காதலிக்கிறவிஷயம் தெரியும். வேற ஆருக்கும் தெரிஞ்சால் வீண் பிரச்னை வருமெண்டு அத்தான் எவ்வளவு கவனமாக இருந்தவர். ஜேர்மனியில் இருந்து வாற கடிதம் கூட அவற்ற சிநேகிதன் யோகனுக்குத்தானே வாறது ... யோகன்ர தங்கச்சி சுமதி தண்ணி எடுக்க வரேக்க அதை என்னிட்டதர நான் அதை வாசிச்சுப்போட்டு ஆருக்கும் தெரியாமல் கிளிச்சுப் போடுவனே ... இதால் வீட்டில் அம்மாவுக்குக்கூட நான் அத்தானைக் காதலிக்கிற விஷயம் தெரியாது அவவுக்குத்தெரிஞ்சால் தோலை உரிச்சுப் போடுவா . . ? என்று பெருமையாக நினைத்துக் கொண்டாள் சரோஜா. மனதிலிருந்து சந்தோஷக் குமிழிகள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன.

வெளியில் சென்றிருந்த அப்பு திரும்பி வந்து கிணற்றடியில் முகம்கழுவிக் கொண்டிருப்பதை; வாளிகளின் ஓசையிலிருந்து அறிய முடிந்தது. கூடத்தில் அம்மாவும் வசந்தியும் உரத்த குரலில் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். இவள் அடுப்பை அணைத்து விட்டுப் படுக்கை அறையினுள் சென்றாள். லாந்தரைப் பிரகாசமாகத் தூண்டி விட்டு பாயை விரித்து அதில் சாய்ந்து கொண்டாள் கையில் ஏதோ ஒரு புத்தகம் அதன் பக்கங்களை வெறுமனே புரட்டிக் கொண்டிருந்தவளின் நினைவுகள் மீண்டும் மீண்டும் சந்திரனைச் சுற்றியே சுழன்று கொண்டிருந்தன.

''அவர் வந்ததும் என்னைச் சந்திக்கத் துடிப்பார் ... நிறையக் கதைப்பார் ... வெளிநாட்டைப்பற்றி, தன்ர வேலையைப்பற்றி, என்ர பிரிவால் அவர்பட்ட வேதனைகளைப் பற்றி ... கடிதத்திலேயே பக்கம் பக்கமாக எழுதுவாரே . . என்னைக் கண்டதும் எவ்வளவு சந்தோஷப் படுவார் ... வெளிநாட்டுச் சாமான்கள் ஏதாவது அன்பளிப்பா தந்தால் அதை எங்கமறைச்சு வைக்கிறது ... ? அம்மாட்டத் தப்பினாலும் உந்த வசந்தீட்டத் தப்பேலாது போனமுறை அவர் அனுப்பின பிறந்த நாள் காட்டைக் கிழிக்க மனமில்லாமல் ஒளிச்சு வைக்க எவ்வளவு பாடுபட்டனான் . . அவர் அன்பளிப்புத் தந்தாச் சுமதீட்டைக் குடுத்து வைப்பம். அவள் கவனமாக வச்சிருந்து பிறகு தருவாள்தானே. அத்தானுக்குப் பதில் கடிதம் எழுதவும்உதவி செய்கிறவள்... அது சரி அத்தான்தான் வாறதெண்டு ஏன் எனக்கு அறிவிக்கேல்லை. . அவற்ற கடிதத்தையும் ஒருமாசமாக் காணேல்லை. ஒருவேளை திடீரென்று வந்து என்னை ஆச்சரியப்படுத்துவம் எண்டு நினைக்கிறாரோ... அதோட இந்த மெயிலும் ஒழுங்கில்லை. கடிதம் போட்டிருந்தாலும் ஒழுங்கா வந்து சேராது...''

ஏராளமான கற்பனைகள் நினைவுச் சுமைகள்... கேள்விகள் மனதை அழுத்த, கண்கள் மட்டும் புத்தகத்தின் பக்கங்களை மேய்ந்து கொண்டிருந்தன.

சரோஜாவின் தகப்பனின் சொந்தச் சகோதரியின் மகன் தான் சந்திரன். சந்திரன் பெற்றோருக்கு ஒரே பிள்ளை. தந்தை கொழும்பில் கடை வைத்திருந்தார். தாயும் வீட்டில் இரகசியமாக அடைவு பிடித்துக் கொண்டிருந்தாள். இதனால் ஏராளமான பணம் புரண்டது.

சந்திரனின் தாய் இலட்சுமிக்குப் பணத்திமிர் அதிகம். ஏழ்மையில் உழன்று கொண்டிருந்த தமையனின் குடும்பத்துடன் எப்போதும் சண்டைதான். பாக்கியத்திடம் பணமில்லாவிட்டாலும்தன்மானத்துக்குக் குறைவிருக்கவில்லை. இதுபோதாதென்று இருவரும் எதிரெதிரான வீடுகளில் குடியிருந்ததால் சண்டை சச்சரவு நித்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆனாலும் சின்ன வயதிலிருந்தே சந்திரனுக்கு மாமியின் குடும்பத்தில் நேசம் அதிகம். அதிலும் தன்னிலும் மூன்றே வயது இளையவளான சரோஜா மீது அவன் உயிரையே வைத்திருந்தான். இருவரும் ஒன்றாகப்பாடசாலைக்குச் செல்வார்கள். கடற்கரையில் மணலால் வீடுகட்டி விளையாடுவார்கள். மண்ணால் சோறு கறி சமைத்துப் பரிமாறி அம்மா அப்பா விளையாடுவார்கள்.இப்படியே அவர்களின் பால்ய நட்பு வளர்ந்து பருவத்தில் காதலாக உருமாறத் தொடங்கியது. அவனுக்குப் படிப்புக் கசந்தது.அதற்கு முற்றுப்புள்ளி.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. எல்லோரையும் போல் தன் மகனும் வெளிநாட்டுக்குச் சென்று உழைத்துப் பணத்தைப் பெருக்க வேண்டும் என்ற ஆசையில் அவனை வற்புறுத்தி, கொஞ்சப்பணம் செலவழித்து வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தாள் லட்சுமி. மூன்று வருடங்களில் திரும்புகிறேன்என்று சொல்லிச் சென்றவன் இதோ திரும்பப் போகிறான்.

''சரோ, என்ன வேளைக்கே படுத்திட்டாய்? சாப்பிடயில்லையா? எழும்பு, எழும்பி சாப்பிட்டுட்டுப்படு'' பாக்கியம் உரத்த குரலில் கூறியபோது தான், பாதி கனவும் பாதி நினைவுமாகத் தவித்துக்கொண்டிருந்த சரோஜா எழுந்தாள். அவளுக்குச் சாப்பிடப் பிடிக்கவில்லை. என்றாலும் தாய்க்குப் பயந்து சாப்பிட்டதாகப் பேர் பண்ணி,பாத்திரங்களைக்கழுவி வைத்துவிட்டு மீண்டும்பாயில் விழுந்தாள். வெளியே பூரண நிலவு அழகை அள்ளி நிறைத்திருந்தது. அதன் ஒளிக்கீற்றுக்கள் யன்னலினூடாக அறையினுள் நுழைந்து அறையை வெளிச்சமாக்கிக் கொண்டிருந்தன. மனதில் இன்ப நினைவுகள் அழுத்தவே, தூங்கப்பிடிக்காமல் புரண்டு கொண்டிருந்த சரோஜாவை 'அக்கா. .'என்ற அழைப்புத் திடுக்குற வைத்தது. அவள் மெதுவாகத் திரும்பிப் பார்த்தாள். சற்றுத்தள்ளி இன்னொரு பாயில் படுத்திருந்த வசந்தி இவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். ''படுத்தவுடன் நித்திரையாய்ப் போய்விடும் வசந்தி இன்றைக்கென்று முழிப்பா இருக்கிறாளே...'' என்று எண்ணிக் கொண்ட சரோஜா, தங்கையை ஊன்றிக் கவனித்தாள். நிலவு வெளிச்சத்தில் வசந்தியின் வெள்ளை முகம் சுருள்கேசத்துடன் அழகாக ... ஒருகுழந்தையின் முகம்போலக் காட்சி அளித்தது. தங்கையைப்பாசத்துடன் கவனித்த சரோவின் நெஞ்சில் ஆழத்தில் ஒருவித வேதனை பரவியது. இந்த அழகான குழந்தைத்தனமான பெண்ணின் வலதுபாதம்பிறப்பிலேயே சற்று வளைந்து நடக்கும்போது செந்திக் கெந்தி நடக்க வைத்து, நொண்டி என்ற பட்டத்தைக் கொடுத்து. . பீறிட்ட வேதனையை அடக்கிக்கொண்ட சரோஜா ''என்ன வசந்தி, இன்னும் நித்திரை கொள்ளேல்லையே?.. '' என்று பரிவுடன் விசாரித்தாள். ''இல்லையக்கா, நித்திரை வருகுதில்லை...'' என்று மெல்லிய குரலில் பதிலளித்தாள் வசந்தி. அவள் குரலில் வழக்கத்துக்கு மாறாகத் தென்பட்ட அமைதியை சரோவினால் உணர்ந்துகொள்ள முடிந்தது. ஏன் என்ன கள்ளம் செய்தனி!...நித்திரை வராமல் இருக்க...?'' என்று செல்லமாகத் தங்கையைச் சேட் கேட்டாள் சரோ. வசந்தி சில நிமிடங்கள் மௌனமாக இருந்தாள். பிறகு ''அக்கா உன்னோடை ஒருமுக்கிய விஷயம் கதைக்க வேணும். அதைக் கேட்டு, நீ என்னைப் பிழையா நினைக்கக் கூடாது'' என்று பீடிகை போட்டாள். சரோ ஆச்சரியத்துடன் கேட்டாள்: அப்படி என்னடி முக்கியமான விஷயம்?''வசந்தி தயங்கியகுரலில் ''அக்கா... சந்திரன் அத்தான்... அவரை நான் விரும்புறன்...'' என்றாள். சரோவுக்குத் திக்கென்றது. ஒரு சில கணங்கள் அவளால் சிந்திக்க முடியவில்லை. என்னக்கா பேசாமல் இருக்கிறாய்? என்னடா இந்த நொண்டிப் பொண்ணுக்கு இவ்வளவு ஆசையா? எண்டு நினைக்கிறாயா?''என்றுஅவள் மௌனத்தைக் கலைத்தாள் வசந்தி. ''இல்லை... இல்லை...'' என்று அவசரமாக மறுத்தாள் சரோ. ''அக்கா முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுகிறது போல... நானும் என்ர நிலைக்கு மேலானஒருஆசையை வளர்த்திட்டன். ஆனால் அந்த ஆசை என்ர சம்மதமில்லாமலேயே எனக்குள்ள தோன்றி வளரஆரம்பிச்சுட்டுது...அதை என்னால நிறுத்த முடியாமப் போட்டுது அக்கா...'' என்று சொல்லும்போதே வசந்தியின் குரல் கம்மியது. சரோஜா பதில்பேசாமல்கேட்டுக்கொண்டிருந்தாள். ''அக்கா நான் அடிக்கடி வெளியில் போனதில்லை வெளிமனுஷர்களை அவ்வளவு சந்தித்ததில்லை, நான் அடிக்கடி சந்திக்கிற ஒருவர் அத்தான்தான். அவர் என்னோடை அதிகமாப் பேசினதில்லை ... பழகினதில்லை ... ஆனாலும் அவர் மேல் என்னையறியாமலே ஒரு பிடிப்பு உண்டாகிட்டுது. இப்ப அவர் மட்டும்தான் என்ர நினைவில் இருக்கிறார். அவரை என்னால் மறக்க முடியாமல் இருக்கு. நான் அவர் மேல் வச்சிருக்கிற பாசம் அவருக்கு தெரிஞ்சிருக்க நியாயமில்லை. மூன்று வருஷம் அவர் இல்லாதபோது அவர் நினைவுகளில்தான் எனக்குத் துணை. உனக்குக்கூட இதைக் கேட்க

(12ம் பக்கம் பார்க்க)

இலக்கியச்சந்தி

✶ யாழ்வாணன்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ்.கிளையினரால் அண்மையில் ‘சமகாலமும் இலக்கியமும்’ என்ற இலக்கியக் கருத்தரங்கு நடத்தப்பெற்றது.

ஈழத்துச் சோமு தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கினைத் தொடக்கி வைத்து திரு. டொமினிக் ஜீவா உரையாற்றுகையில் 1954-ம் ஆண்டிலிருந்து இன்றுவரையிலான காலகட்டத்தை சமகாலமென வரையறை செய்தார்.

உணர்ச்சிகள் இலக்கியத்தைப் படைக்கமாட்டா. உண்மைகளே இலக்கியத்தை உருவாக்குகின்றன. உணர்ச்சி எழுத்துக்கள் வாசிப்பதற்கு கேட்பதற்கு ஏற்றனவேயொழிய, இலக்கிய இரசனையை ஏற்படுத்த மாட்டாது. எனக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் மூத்த எழுத்தாளர்களான சம்பந்தன், வைத்திலிங்கம், இலங்கையர்கோன், போன்றவர்கள் கலைமகள் எழுத்தாளர்கள் எனமுதலில் கூறிய அவர் பின்னர் அக்கூற்றினை மறுதலித்தார்.

அவர்கள் எழுதத்தொடங்கிய காலகட்டத்திலிருந்து தொடர்ந்து மறுமலர்ச்சிக் காலம் முதல் பல்வேறு தலைமுறையினர் படிப்படியாக வளர்ச்சிபெற்று இன்று அவர்களில் பலர் முற்போக்கு இயக்கத்தினராகச் செயல் படுகிறார்கள். மல்லிகையில் அண்மைக் காலத்தில் வெளிவந்த புதுவை இரத்தினதுரை, முருகையன் ஆகியோரின் கவிதைகள் சமகாலத்தைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. மல்லிகையில் எழுதியுள்ள தனது இருபத்தொன்பது கட்டுரைகள் இன்றைய பிரச்னையை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளதெனவும் அவை விரைவில் நூலுருப்பெறப்போவதாகவும் கூறினார்.

செம்பியன் செல்வன் தனதுரையில், இன்றைய சமூக-அரசியல்- பொருளாதார - கலாச்சார பண்பாடினையொட்டிய விடயங்கள் இக்கருத்தரங்கில் பேசப்படவில்லை. சமகாலம் என்றால் சமீபகாலம் எனவரையறை செய்து பேசவேண்டும். சமகாலச் செயல்கள் யாவும் சமகாலத் தொடர்பு கொண்டவையென்ற உண்மையை உணரவேண்டும்.

இன்றைய சமூக நாவல்கள் நாளைய வரலாற்று நாவல்களாகின்றன. எனவே சமகால எழுத்துக்கள்வரலாறாகமாறும் தன்மையன. இன்றைய பிரச்னைகளை வரலாற்று வடிவங்களாக வடிப்பதற்கு இலக்கியப் படைப்பாளிகளுக்கு துணிவு ஏற்படவில்லை. இந்நிலைநம்மவரிடையே மாறவேண்டும் என்றார். சமகால இலக்கிய வளர்ச்சியை ஜீவா, எழுத்தின் வரலாறாகக் கூறாது குறிப்பிட்ட கட்சியின் வளர்ச்சியின் ஓரம்சமாக - அத்தகைய பின்னணியில் பேசியது செம்பியன் செல்வன் முதல் அங்கிருந்த முற்போக்கு எழுத்தாளர்களினாலும் சுட்டிக்காட்டப்பட்டது.

செம்பியன் செல்வன் தொடர்ந்து உரையாற்றுகையில் கட்டுரைகள் இலக்கிய வடிவமாகுமா என்ற கேள்வி முற்போக்கு, அணியைச் சேர்ந்த ஒருவரால் அண்மையில் எழுப்பப்பட்டது. அப்படியானால் ஜீவாவின் கட்டுரைகள் இலக்கிய வடிவங்களாகுமா என்பது இப்போது அவர்களைப் பொறுத்தவரை சர்ச்சைக்குரிய விஷயம்.

முற்போக்கு அணியைச் சாராதவர்கள் முன்பு உருவகம் உள்ளடக்கம் இலக்கிய ஆக்கங்களுக்குத் தேவையெனக் கூறியபோது அக்கூற்றினை எதிர்த்தவர்கள் இன்று அதனை ஏற்றுக்கொள்ள முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது எனக்குறிப்பிட்டார்.

‘ஈழமுரசு’ ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் பேசும்போது முற்போக்கு எழுத்தாளர்கள் இலக்கிய ஆக்கங்கள் யதார்த்தமானவையாக இருக்கவேண்டும் என்கிறார்கள். ஆனால் தற்போது கற்பனையும் கலந்திருந்தால்தான் அப்படைப்புச் சிறந்ததாகும் என்கிறார்கள் என்றார்.

இக்கூற்று அவர்களின் பரிணாமவளர்ச்சியின் அறிகுறியா? அல்லது...? என்ற விதமான கேள்விகளையும் அவர் முன்வைத்தார்.

0 0 0

வாழ்த்துகிறோம்

‘நான்’ உளவியல் மாத சஞ்சிகையின் துணை ஆசிரியர் திரு. ஜோசப்பாலா அவர்களுக்கும் செல்வி மரிய ரோஸா அவர்களுக்கும் கடந்த வாரம் திருமணம் நடைபெற்றது.

மணமக்களை எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் உட்படப் பல பிரமுகர்கள் நேரில் வந்து வாழ்த்தினார்கள். அவர்களின் நல்வாழ்வு சிறப்புற நாமும் வாழ்த்துகின்றோம்.

மருதாணி

காலண்டு சஞ்சிகை

தென்னிலங்கையிலே சிங்கள மக்களிடையே வாழுகின்ற முஸ்லிம் இளைஞர்கள் யுவதிகளிடையே ஏற்பட்டுள்ள இலக்கிய ஆர்வம், யாழ்ப்பாண முஸ்லிம் இளைஞர் யுவதிகளிடையே ஏற்படவில்லையே என்ற குறை நீக்கப்பட்டுள்ளதாக நம்புவதற்கு இங்கு இடம் பெற்ற ஓர் இலக்கிய நிகழ்வு இடமளித்துள்ளது, இளங்கீரனுக்குப்பின் யாழ்ப்பாணத்தில் ஆற்றல் இலக்கியத்துறையில் இளந்தலைமுறையினர் முஸ்லிம் இளைஞர் - யுவதிகள் ஈடுபடவில்லையென்ற குறைபாடு அண்மைக் காலமாக இருந்து வந்தது.

இக்குறைபாட்டினை ஓரளவு நிவர்த்தி செய்வது போன்று யாழ்ப்பாண முஸ்லிம் இளைஞர்களிடையேயிருந்து ‘மருதாணி’ காலாண்டு இதழ் வெளியிடப்பட்டுள்ளது.

இச் சஞ்சிகையின் ஆசிரியையாக ஜராஸ்மின், அன்சார், இணை ஆசிரியர்களாக றசீரா அன்சார், பெசியா கே, மொகமட் ஆகியோர் பணியாற்றுகின்றனர்.

இளைய தலைமுறையினரின் இம் முயற்சி தொடர்ந்தும் செயற்பட ஈழத்து இலக்கிய உலகம் ஆதரவு நல்கவேண்டும்.

விருச்சிகம்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சத்திரங்களையும் நாம் இலகுவாக இனங்காண முடியும்.

இரண்டாவதாக, விருச்சிக இராசியைநன்கு கண்டு கொள்ள முடிந்தால் ஏப்பிறில் மாதம் 3-ம், 4-ம் திகதிகளில் ஹேலியின் வால்வெள்ளி இவ்வுடுத் தொகுதிக் கருகாகச் செல்லும் போது அவ்வால் வெள்ளியை நாம் பார்க்கக்கூடியதாகவிருக்கும்.

ஆண்டவனுக்கும்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்மைக் கிருஸ்துவைப் போல நாம் தயார் செய்ய வேண்டும். அவர் செபித்த தந்தையோடு நாமும் செபித்து நமது பணிக்கு, நமது இலட்சியத்துக்கு நம்மை ஆயத்தப்படுத்தவேண்டும். வாழ்க்கை பயணத்திலே தடைகள் வரலாம். மேடு பள்ளங்கள் வரலாம். பிரச்னைகள் நம்மோடு முட்டிமோதி எட்டி உதைக்கலாம். ஆனால் இறைவனும் நாமும் இந்த இலட்சியப் பயணத்திலே ஒன்றுசேர்ந்து பயணம் செய்தால் வெற்றி நமதே.

பிரிட்டிஷ் பிரெஞ்சு

5ம் பக்கத் தொடர்ச்சி]

இங்கிலாந்து கார்பாதையொன்றும் அமைக்கப்பட வேண்டுமெனக்கோரியது.

ஆயினும் பல தொழினுட்பப்பிரச்னைகள் காரணமாக பிரான்ஸ் இதனை பின்னர் எதிர்த்தது 2000 ஆண்டளவில் ஒரு கார்பாதை அமைக்கப்படும் என்ற உத்தரவாதத்துடன் இங்கிலாந்து ரயில் பாதைக்கு ஒப்புக் கொண்டது-

இர்தப் பாதைத்திட்டத்துக்குப் பல அரசியல் காரணிகளும் பின்னனியாக உள்ளன.

இத்திட்டம் இருநாடுகளையும் சேர்ந்த சுமார் 40 000 பேருக்கு ஏழு வருடங்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கக் கூடியதாயிருக்கும். தற்போது இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் வேலையில்லாப் பிரச்னை விஸ்வரூபமெடுத்துள்ளது. இத்திட்டம் இப்பிரச்னையை ஓரளவு தீர்ப்பதனால் விரைவில் அடுத்த தேர்தல்களை சந்திக்கப் போகும் இரு நாட்டுத் தலைவர்களும் இதனை வைத்தே வெற்றி பெறும் வாய்ப்பும் உள்ளது. அதனால் தான் முதலில் கார்பாதையும் வேண்டுமென்று அடம்பிடித்த இங்கிலாந்து பின்னர் தனது நிலையினின்றும் இறங்கி வந்தது.

எது எவ்வாறு இருப்பினும் இத்திட்டம் பூர்த்தியடையின் இதன் மூலம் நவீன உலகின் தொழில் நுட்பவியலின் சிகரமாக அமையும் ஒருசாதனையை இருநாடுகள் கூட்டாகச் செய்துள்ளன என பெருமைப் படலாம் அத்துடன் இங்கிலாந்து பிரான்ஸ் நட்புறவுக்கும் நம்பிக்கை தரும் பாலமாக இது மிளிரும் எனலாம்.

சிறுகதை

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ஆச்சரியமா இருக்கும். என்ர காதலைநான் இ வரை வெளிக் காட்டினதேயில்லை. நேரம் வரட்டும் என்று பொறுத்திருந்தன். இப்ப நேரம் வந்திட்டுது. அவர் என்ன சொல்லுவாரோ எனக்குத் தெரியாது. நொண்டி எண்டு அலட்சியப் படுத்துவாரோ என்னவோ ... எண்டாலும் நீ எனக்காக அவரிடம் கேட்டுப்பார் ... தயவு செய்து கேள் அக்கா ... கேள்...’’

சரோவுக்கு எல்லாம் அதிசயமாக இருந்தது. அந்த பேதைப்பெண்மீது பரிதாப உணர்வும் தோன்றியது. வசந்தி தனக்குள் இப்படி ஒரு காதலை மறைத்து வைத்திருக்கிறாள் என்று தனக்கே தெரியாமல் போய்விட்டதே என்று எண்ணிக் கொண்ட சரோஜா மெதுவாக எழுந்து வசந்தியின் அருகே வந்து அமர்ந்து கொண்டாள். தங்கையைப் பாசத்துடன் தடவிக் கொடுத்தபோது, வெளிக்கு வெகுளியாக தோன்றினாலும் உள்ளே தூய அன்பைத் தேக்கி வைத்திருக்கும் பக்குவம் இவளுக்கு எப்படி ஏற்பட்டது என்று ஆச்சரியத்துடன் எண்ணிக்கொண்டாள். மனதினுள் அழகான காதல் ஒன்றை வளர்த்து அதற்கு விடைகாண எவ்வளவு உரிமையுடனும் நம்பிக்கையுடனும் தன்னை நாடுகிறாள் என்று நினைக்கும் போது சரோஜாவுக்கு வசந்தி மீது பரிதாப உணர்வு மேலிட்டது. பாவம் வசந்தி வாழ்க்கையில் அவள் என்ன சுகத்தைத் தான் கண்டாள் ... சந்திரனை அடைந்தால் ... அவள் வாழ்க்கை சந்தோஷமாகத்தான் இருக்கும். ஆனால் ... அதுநடக்கக் கூடிய காரியமா? என்னால் சந்திரனை இழக்க முடியுமா? அவற்ற நினைவுகளில் இருந்தே என்னால் விடுபடமுடியாமல் இருக்குது. அவரிடமிருந்து எப்படி விடுபடுவது? அதற்கு அவர்தான்சம்மதிப்பாரா? ...- மனதில் போராட்டத்துடன் மௌனமாக இருந்த சரோவை வசந்தியின் குரல் இழுத்தது. ‘‘என்னக்கா, பேசாமல் இருக்கிறாய்? நான் சொன்னதில் ஏதாவது பிழையா... ?’’

இல்லையென்று தலைஅசைத்த சரோ ஒரு முடிவுக்கு வந்தவளாக ‘‘நீ கவலைப்படாதை வசந்தி .. அத்தானிட்டச் சொல்லி உனக்கு அவரைக் கலியாணம் செய்து தாறது என்ர பொறுப்பு. நான் சொன்னால் அவர் எதையும் மறுக்க மாட்டார்’’ என்றாள். அவள் குரலில் நிதானமும் உறுதியும் வெளிப்பட்டன. தன்கையில் முகம் புதைத்துவிம்மிய வசந்தியை மெதுவாகப்படுக்க வைத்துவிட்டு தன்படுக்கைக்கு வந்த சரோ, இழப்பின் கனத்துடன் இரவு முழுவதும் விழித்திருந்தாள்.

காலையில் எழுந்ததில் இருந்து பரபரப்புடன் காணப்பட்டாள் சரோ. இரவு முழுவதும் விழித்திருந்தது உடலில் அசதியைத் தோற்றுவித்தது. அவளையறியாமல் சந்தோஷமும் எதிர்பார்ப்பும் அவள் மனதில் குடிகொண்டன. மிகவும் சிரமப்பட்டுத்தன்னை அடக்கிக் கொண்டவள் வேலைகளில் கவனம் செலுத்தினாள். வசந்தி கூட இருப்புக் கொள்ளாமல் அங்கு மிங்கும் அலைந்து கொண்டிருந்தாள்.

றெயில் தாமதமாகியதால் கடைசியில் மாலை 5 மணிக்கு டாக்சியில் வந்து இறங்கினான் சந்திரன். கூடத்து யன்னலினூடாகப் பரபரக்கும் உள்ளத்துடன் சரோஜா அவனை நோக்கினாள், ஆள் சற்றுச் சதைபோட்டு, சிவப்பாக, அழகாக மாறியிருந்தான். அவன் பார்வை தன் வீட்டுப் பக்கம் திரும்பும் என ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவனே சூட்கேசுகளை இறக்கி வைப்பதில் தான் கவனமாக இருந்தான். சரோஜா ஏமாற்றத்தின் விளிம்பில் நின்றிருந்தாள். ‘‘இவ்வளவு நாள் கழிச்சு வந்தவர் ஆசையோட என்னைப் பார்க்கத் தவிப்பார் எண்டு நினைச்சால் இந்தப் பக்கம் திரும்புறாரே இல்லையே ...’’ என்று நினைத்தவள் பின்னர் தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டாள். ‘‘மாமியும் மாமாவும் படலேக்க, நிக்கினம் ... வந்ததும் வராததும் எங்கட வீட்டு பக்கம் திரும்பிப்பார்த்தால் ஏதாவது நினைப்பினம் எண்டு தான் இஞ்சாலப் பக்கம் திரும்பேல்லப்போலே’ என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

அவன் உள்ளே சென்றுவிட்டான்.

தன்னைச் சந்திக்க அவன் எந்த நேரமும் வரலாம் என்ற எதிர்பார்ப்புடன் சரோ நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தான். அவனைச் சந்தித்தவுடன் வசந்தியைப் பற்றி சொல்லிவிடுவது என்றும் தீர்மானித்துக் கொண்டான்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. சந்திரனின் வீட்டிலிருந்து ஆங்கிலப் பாடல்கள் பெரிய சப்தத்தில் ஒலித்தன. ஸ்கூட்டர்களும் கார்களும் தவம் கிடந்து திடீரென சீறிப் பாய்ந்தன. நண்பர்கள் கூட்டம் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தது. சில சமயங்களில் வெளிநாட்டுச்‘சரக்கின்’ காரணத்தினாலோ என்னவோ அவர்களின் குரல்கள் ஓங்கிக் கேட்கத் தொடங்கின. ஆனால் சந்திரன் மட்டும் அவளைச் சந்திக்க வரவில்லை. பாக்கியம் கூட ‘‘என்னதான் கோவம் எண்டாலும் மூண்டு வரியம் கழிச்சு வந்தவன், இந்தப் பக்கம் தலைகாட்டினால் என்ன குறைஞ்சு போடுவானே?’’ என்று புறுபுறுத்தாள். வசந்தியின் கண்களில் தெரிஞ்ச ஏக்கத்தைச்சரோவினால் கவனிக்க முடிந்தது. ஆனால்எல்லாவற்றிற்கும் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள் அவள்.

‘‘வீட்டில் ஒரே ஆக்களா இருக்கும் வர நேரம் கிடைச்சிருக்காது... என்ன அவசரம்? ஆறுதலா வரட்டுமன்’’ என்று தன்னைத்தானே ஆறுதல் படுத்தினாள் சரோ. சந்திரன் மீது அவள் வைத்திருந்த நம்பிக்கை அவன்மீது சந்தேகப்பட வைக்கவில்லை. ஆனால் திடீரென்று ராசாத்தி மாமி வெளியிட்ட செய்தி அவளைக் கொஞ்சம் நிலைகுலைய வைத்தது. ‘‘சந்திரனுக்கு கலியாணம் முற்றாக்கியாச்சாம் .. பணக்கார இடமாம் சந்திரன் பொம்பிளை பார்த்து ஓமெண்டுட்டானாம். மாசக் கடைசியில கலியாணமாம்...’’ ராசாத்தி சொல்லும்போது முதலில் துடித்துப் போய்விட்ட சரோஜா பிறகு அதையும் ராசாத்தியின் கட்டுக்கதை என்று அலட்சியப்படுத்தினாள்.

அன்று வெள்ளிக்கிழமை. குளித்துவிட்டுக் கோவிலுக்குப் போயிருந்தாள்சரோ. கண்களை மூடித் தேவாரம் ஒன்றை முணுமுணுத்துக் கொண்டிருந்தவள், ஏதோ உணர்வில் கண்களைத் திறந்தாள். எதிரே இவளையே பார்த்துக்கொண்டு சந்திரன் நின்றிருந்தான். மகிழ்ச்சியில் துடிக்கும் இதயத்துடன் அவனை நோக்கிப் புன்னகைத்தாள் அவள். அவனும் பதிலுக்குப் புன்னகைத்தான். ஆனால் அதில் ஏதோ ஒன்று நெருடுவதை அவள் உணர்ந்தாள். கோவிலில் அதிக கூட்டமில்லை. அவன் சுற்று முற்றும் பார்த்தவாறே அவள் அருகில் வந்து ‘‘சரோ, உம்மோட ஒரு முக்கியமான விஷயம் கதைக்க வேணும்’’ என்றான். சரோ சந்தோஷத்துடன் அவன் முகத்தை நோக்கினாள். அவனே அவளுடைய பார்வையை தவிர்க்க முயல்வதுபோல் பார்வையைத் திருப்பிக் கொண்டான். அது அவளுக்கு என்னவோ போலிருந்தது. அவள் எவ்வளவு எதிர்பார்த்தாள். நிறையப் பேசுவான்... சிரிப்பான் என்று நினைத்தாளே,அவனே பேசவே பிடிக்காதது போல் நிற்கிறானே... ‘‘சரோ...’’ ஏதோ சொல்ல வந்தவன் சட்டென நிறுத்தினான்.‘‘சொல்லுங்கோ அத்தான்... என்னட்டதானே சொல்லுறியள்’’ என்றாள் உரிமையுடன். ‘‘சரோ நான் சொல்லப்போறதை நீர் தவறா நினைக்கக் கூடாது.. நான்... அம்மா பேசின கலியாணத்தை தான் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறன். அம்மா நிறைய சீதனம் எதிர்பார்க்கிறா. அவவிட சொல்லை கேக்காட்டி சொத்தில் ஒரு சதம் கிடைக்காது எண்டு மிரட்டுறா... அழுது புலம்புறா... அவவிட சொல்லைக் கேக்கிறதைத் தவிர எனக்குவேறவழியொண்டும் தெரியேல்லை’’ என்றான் அவன்.

சரோவுக்கு இதயமே நொறுங்கி விட்டது! ஒரு வேதனை உடலெங்கும் பரவி நிஜ உலகில் அவள் சஞ்சரித்தபோது ஒரு பணப்பசாசிடமிருந்து தன்னையும், வசந்தியையும் கடவுள் காப்பாற்றினார் என்று ஆறுதல்பட்டு அந்தக் கடவுளுக்குத் தோத்திரம் சொன்னாள்.

(யாவும் கற்பனை)

சகோதர பத்திரிகையின் ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

'ஈழமுரசு' தினசரிப் பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா யாழ்ப்பாணப் 'பாம்கோட்' விடுதியில் இன்று காலை 9-30மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் 'ஈழமுரசு' இரண்டாவது ஆண்டுமலர் வெளியிடப்படும் மலர்வெளியீட்டுரையை யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் கா. சிவத்தம்பி நிகழ்த்துவார்

யாழ், அரசாங்க அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ கே. சிவஞானம், ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

சிறுகதைப் போட்டிக்குரிய பரிசுகளை யாழ். அரசாங்க அதிபர் வழங்கிக்கௌரவிப்பார். சிறப்புரையை திரு சிவசரவணபவன் (சிற்பி) நிகழ்த்துவார்.

வரவேற்புரையை சாயிபாபா அட்வடைசிங் அசோஷியேற்ஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளர் திரு. கே எஸ்.அருமைரத்தினம்நிகழ்த்த அதிபர் உரையை திரு. மயில் அமிர்தலிங்கம் வழங்குவார். (ஐ)

படையினர். .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யப்பட்டிருந்தவராம்.

அந்த வீட்டில் மேலும் சோதனை நடாத்திய பொழுது விறகு கட்டுக்குள்ளிருந்து நல்ல பாம்பொன்று வெளிவந்ததாகவும் அப்பாம்பை அடித்துவிட்டு குற்றுயிருடன் தூக்கி, தாக்கப்பட்ட இளம் பெண்களின் மேல் மாலையாகப் போட்டதாகவும் கூறப்படுகிறது. (ய-மா)

கடைசிநேர வரிவிளம்பரம்

வாடகைக்கு

கடையுடன் வீடு வாடகைக்கு உண்டு. சின்னக்கடைக்கு அருகாமையில் தொடர்புகொள்ளவேண்டிய விலாசம் 69, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். C 807

யாழ்/பல்கலைக்கழக வளாகத்துக்கு அண்மையில் நவீன வசதியுடைய வீட்டில் உணவு வசதியுடன் மாணவிகளும் பெண் உத்தியோகத்தர்களும் தங்குவதற்கு அறைகள் உண்டு விபரங்களுக்கு நேரில் வரவும். 337 பலாலி வீதி, கம்பஸ்சந்தி, திருநெல்வேலி. C 808

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30, 9-15
T. ராஜேந்தர்— ஸ்ரீவித்யா
மைதிலி
என்னை காதலி

லிடோ சினிமா
10-30, 2-30, 4-45 6-30
James Bond 007
in
Octo Pussy
(Cinemascope Colour)
[Sexy Action and Thrills]

வெலிங்டன்
10-30, 2-30 4-30, 6-30
Sean Connery Real
James Bond 007 in
THE BRIDGE TWO FAR
[Action Film]

பென்ஷன் பெறப்போன...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

துடிதுடித்த நிலையில்

காயமடைந்த மூவரும் துடிதுடித்துக்கொண்டு கிடந்ததாகவும், எவ்வளவோ முயற்சி எடுத்தும் காப்பாற்றமுடியாமல் போய்விட்டதாகவும், ஆஸ்பத்திரிக்குஅவர்களைக் கொண்டு வந்தவர்கள் தெரிவித்தனர்.

அவ்விடத்தில் ஓய்வூதியம் பெறவந்த மற்றும் நால்வர் ஓடிவிட்டதாகவும், அவர்களில் இருவருக்கு காயம் ஏற்பட்டிருந்ததாகவும் கூறினர்கள்

இச்சம்பவத்தின் பின்னரும் ஓய்வூதியம் பெறவந்தவர்கள் அங்கு காத்து நின்றனர்.

யாழ்.ஆஸ்பத்திரி சவச்சாலையில் பலியானவரின் சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன. செல்லத்துரை வெள்ளைவேட்டி அணிந்திருந்தார். கோடு போட்ட வெள்ளை சேட் இரத்தத்தினால் ஊறி செஞ்சட்டையாக மாறியிருந்தது கால்ப் பெருவிரலிலும், வயிற்றிலும் காயங்கள் காணப்பட்டன.

அருளப்பா வெள்ளை வேட்டி அணிந்திருந்தார். சேட்டுடன் மௌளர் ஒன்றும் கழுத்தில் காணப்பட்டது. இடதுபக்க விலாவில் பெரிய காயமும், மற்றும் முன்பக்கத்தில் காயங்களும்காணப்பட்டன. வேட்டி சேட் எங்கும் இரத்தம் ஊறியிருந்தது.

இளையதம்பி 'சாக்லட்' நிற காற்சட்டையும், மஞ்சள்சேட்டுப் போட்டு பெல்ட் கட்டியிருந்தார். இவரது முழங்காலில் பலத்தகாயம் காணப்பட்டது.

பலியான செல்லத்துரை உப்பு கூட்டுத்தாபனத்தில் பிரதம லிகிதராகக் கடமையாற்றியவர். இவருக்கு நான்கு பெண் பிள்ளைகளும், நான்கு ஆண் பிள்ளைகளும் உண்டு.

கோவிலுக்குச் சென்றுவிட்டு

. வழக்கம்போல் காலை 4 மணிக்கு எழுந்து கோவிலுக்குச் சென்றுவிட்டு சைக்கிளில் யாழ் நகரிலுள்ள தமது 'பார்மஸி'க்கு செல்லும் வழியில், ஓய்வூதியம் பெறுவதற்காக கோட்டைப்பக்கம் சென்றிருந்ததாக உறவினர் ஒருவர் தெரிவித்தார். ஒவ்வொரு மாதம் இதே நேரத்திற்குத்தான் அவர் பென்சன் எடுக்கச் செல்வது வழக்கம் என்றும் அவர் கூறினர்.

6 பெண் பிள்ளைகள்

வி. எஸ்.அருளப்பக, காட்டு இலாகாவில் வேலை பார்த்தவர். இவருக்கு ஆறு பெண் பிள்ளைகள். வழகக்கம்போல் முதல்நாள் மாலை, யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியிலுள்ள உறவினரான வி அருளப்புவின் வீட்டில் சென்று தங்கியிருந்துவிட்டு, காலை 5 மணிக்கு ஓய்வூதியம் பெறப் புறப்பட்டாராம்.

இளையதம்பி காட்டு இலாகாவில் வேலை பார்த்தவர். இவருக்கு 6 பிள்ளைகள் உண்டு. நேரகாலத்துடன் ஓய்வூதியம் எடுப்பதற்காக காலை ஐந்து மணிசகு புறப்பட்டு சென்றிருந்தார்.

மரணவிசாரணை நடத்திய யாழ் மேலதிக நீதவான் கே. வி. எஸ். வரதராஜா நேற்றுக்காலை ஆஸ்பத்திரி பிரேத அறையில், சடலங்களை பார்வையிட்டு, பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு, சில சாட்சியங்களை பதிவு செய்தபின் விசாரணையை ஒத்திவைத்தார், (க

இந்தியக் கடற்படை கப்பலின் வெள்ளி விழா

[புதுடில்லி]

இந்தியக் கடற்படையின் விமானம் தாங்கிக் கப்பலான 'ஐ. என். எஸ் விக்ரம்' இன்று தனது வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது.

இதேவேளை இந்திய இராணுவத்தின் 'சிக்னல்ஸ்' அணியின் வைரவிழா நேற்று கொண்டாடப்பட்டது.

ஒப்பந்தம் செயற்படும்

(சண்டிகார்)

பஞ்சாப்பில் இப்போது நடைபெறும் வன்முறைகள், பஞ்சாப் ஒப்பந்தத்தோடு எந்த விதமான தொடர்பும் கொண்டதில்லை என்று இந்திரா காங்கிரஸின் துணைத் தலைவர் திரு. அர்ஜுன்சிங் தெரிவித்துள்ளார்.

சண்டிகார் மாற்றத்தில் சிறிது காலதாமதம் காணப்பட்டாலும் பஞ்சாப் ஒப்பந்தம் முற்றிலும் செயற்படுத்தப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். இம்மாநிலத்தில் அகாலிதள் அரசு வன்முறையைக் கட்டுப்படுத்தும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். [து]

அந்தியேட்டி அழைப்பிதழ்

திருமதி பவானி விசாகப்பெருமான்

19-01-86-ல் காலமான எமது குடும்பத்தலைவி திருமதி பவானி விசாகப் பெருமான் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 17-02-86 திங்கட்கிழமை நயினாதீவில் அவர்களின் இல்லத்தில் நடைபெறும். உறவினர்களையும் நண்பர்களையும் மேற்படி கிரியைகளில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

துணைவர், மகன்,
மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

C 810

இந்து-முஸ்லிம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களிடையே ஒற்றுமையை எவ்வாறுமேம்படுத்தலாமென்பது பற்றியும் ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் திருமலை இந்து இளைஞர் மன்றத்தினர் சார்பில் செயலாளர் செ சிவபாதசுந்தரம், புனவாழ்வுக்குப் பொறுப்பாகவுள்ள அ. சிறிதரன் மற்றும் வி. வசந்தகுமார், அ. தேவராஜா ஆகியோரும், முஸ்லிம் இளைஞர் மன்றம் சார்பில் அதன் தலைவர் ஜனாப் எம். ஐ. நஸீம். செயலாளர் ஜனாப் பாத்திரி காஸிம் ஆகியோரும் சந்தித்தனர்.

இதனிடையே, திருமலை இந்து இளைஞர் மன்றத்தினர் இம்மாதம் 21ம் திகதி அமைச்சர் எஸ். தொண்டமானையும் சந்திக்கவுள்ளனர். இச்சந்திப்பும் கொழும்பிலேயே நடைபெறவுள்ளது. (ய-மா)

இப்படியும் நடக்கிறது

கல்லூரியில்

(கல்லூரி என்றால் அது தனியார் கல்லூரியாகவும் இருக்கலாம். அரசாங்க கல்லூரியாகவும் இருக்கலாம்) பயிலும் மாணவன் ஒருவன் தவறுவிட்டால், என்ன செய்யவேண்டும்?

தவறின் தன்மையைப் பொறுத்து தண்டனை வழங்கப்படவேண்டும்

அதுவும் முதல்தடவையா அல்லது மூன்றாவது தடவையா என்று பார்த்து 'தீர்ப்பு' வழங்கவேண்டும்! சரி, கதைக்கு வருவோம்.

அது ஒரு கல்வி நிறுவனம். கலை. வர்த்தக மாணவர்களுக்கான வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் சில மாணவர்கள். வகுப்புக்கு இடையூறாகக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஆசிரியர் என்ன செய்தார்? வகுப்பைவிட்டே வெளியேறிச் சென்றுவிட்டார்!

கதை இத்துடன் முடியவில்லை.

மேற்படி சம்பவம், மாணவர்களை இழிவுபடுத்தும் வகையில் அங்குள்ள தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்பிலும் இடம்பெற்றுவிட்டது.

(இடம்: அதுவும் ஒரு 'நகரி'ல்தான் முடியும்.)

தனியார் 'ரி. வி' சேவையில் இச்சம்பவம் ஒளிபரப்பப்படத்தான் வேண்டுமா?

சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு (மட்டும் சமர்ப்பணம்

-ஊடுருவி

ஆகாயத்திலிருந்து மீண்டும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி) வட்டத்தில் உள்ள வீடுகளும் மதில்களும் கூட குண்டுகளின் வெடிப்பினால் சேதமடைந்திருந்தன.

நேற்று நண்பகல் 1-30 மணியளவில் இப்பயங்கரத் தாக்குதல் சம்பவம் நிகழ்ந்தது. இதனைத் தொடர்ந்து கட்டுவன் குரும்பசிட்டி, வறுத்தலைவிளான், ஏழாலை ஆகிய கிராமங்களில் வசிக்கும் (பலாலி முகாம் சுற்றுவட்டம்) மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்

செ. பொன்னம்மா [68 வயது], எஸ் செல்லமுத்து [34 வயது] ஆகிய இருபெண்களே படுகாயமடைந்தவர்களாவர். இவர்களிருந்த அந்த வீட்டின் முற்றத்தில் குண்டுத்தாக்குதல்களினால் பல குண்டு குழிகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை மேற்குறிப்பிட்ட பகுதியில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் சேதமடைந்த 7 வீடுகளில் இளையதம்பி ஜெகராஜா என்பவருக்குச் சொந்தமான சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான புதுவீடு ஒன்றும் சேதமடைந்துள்ளது.

மேலும் பலாலி விமான நிலையத்துக்கு தெற்குப் பக்கமாகவுள்ள பகுதிகளில் பெரும் பதற்றநிலை தொடர்ந்த வண்ணமேயிருக்கிறது.

---

6 பேர் துடிதுடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

6 பேர் துடிதுடித்து விழுந்தார்கள். மற்றவர்கள் ஓடிவிட்டனர்''

ஓய்வூதியம் பெறவந்திருந்த எஸ் ஆர்.அருமைநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது: ''சம்பவத்தின் பின் அவ்விடத்திற்கு வந்த சிலரிடம் 'அம்புலன்ஸ்' கொண்டுவரும்படி சொன்னேன். பின் அவ்விடத்திற்கு வந்த ஒரு. கடற்றொழிலாளர் சங்க வாகனத்தில் காயமடைந்தவர்களை ஏற்றிச்சென்றனர். இவர்களில் மூவர் பலியாகிவிட்டனர் கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த முன்னாள் ஆஸ்பத்திரி ஊழியரும், மற்றும் இருவரும் காயமடைந்திருந்தனர்,

''நான்மற்றும் சில ஓய்வூதியகாரருடன் அரசாங்க அதிபரைச் சந்திக்கச் சென்றேன். அவர் கொழும்பிற்குச் சென்றிருந்தார். பின் பொதுசன தொடர்பு அதிகாரியைச் சந்திக்கச் சென்றேன். அவரும் கொழும்பிற்குச் சென்றிருந்தார் பின் உதவி அரசாங்க அதிபர் திரு பாலசிங்கத்துடன் தொடர்புகொள்ள முயற்சித்தேன். அதுவும் முடியாமல் போய்விட்டது பின் வங்கி பொதுமுகாமையாளரைச் சந்தித்தோம்.

''ஓய்வூதியம்இன்றுவழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார் அதன்பின் அங்குசென்று ஓய்வூதியம் பெற்றோம்.'' [க]

பொலிஸார்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அறிக்கையை ஆதாரம் காட்டி சென்னை 'இந்து' நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது

வண. பிதா பஸ்தியனின் சடலம் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதும், அவரைப் பாதுகாப்புப் படையினரே சுட்டுக்கொன்றனர் என்பதை இலங்கை அரசின் விசாரணையில் ருஜூப்படுத்தத் தவறியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உருக்கமான வேண்டுகோள்

14-02-1986 வெள்ளி இரவு 10. 00 மணியளவில் உத்தரவு பெற்ற எனது அடைவு கடைக்கு இனந்தெரியாத ஒரு கோஷ்டியினர் வந்து அடைவு வைக்கப்பட்டு இருந்த ஏழை மக்களின் நகைகளையும் மற்றும் வீட்டில் இருந்த பெறுமதி வாய்ந்த சகல பொருட்களையும், உடைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளார்கள் இதனைச் செய்தவர்கள் யாராகிலும் அவர்கள் கொண்டு சென்ற ஏழை மக்களின் நகைகளையாவது திரும்பவும் எம்மிடம் கொண்டு வந்து ஒப்படைக்கும்படி மிகவும் தயவாகக் கேட்டுக் கொள்கிறேன் இதனை புனிதமான இயக்கங்கள் மீட்டுத் தருமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

க. சச்சிதானந்தன்
அடைவு கடை,
கப்பன்,
ஊர்காவற்றுறை.

[C-817]

உருக்கமான வேண்டுகோள்

எனக்குச் சொந்தமான ஹொண்டா மோட்டார் சைக்கிள் 10 ஸ்ரீ 7629 நீல நிறம் 12-2-86 இரவு சுமார் இரண்டு மணியளவில் இனந்தெரியாத நபர்களால் ஆயுதமுனையில் எனது வீட்டில் வைத்து கடத்தப்பட்டது.

தயவுசெய்து புனித இயக்கங்கள் இதில் தலையிட்டு மீட்டுத் தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

வ. இராசையா
அச்செழு.

C 797

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு

தொழிலொன்றுடன் வெளிநாடு செல்லுங்கள். 30 நாடுகளில் 70க்கு மேற்பட்ட பல்வேறு தொழில்கள், (JOB CATEGORIES) உயர்தொழில்முதல் கூலிவேலை வரை, 17முதல் 50வயது வரை ஆண்களும்பெண்களும், இலவச விமானச்சீட்டு, தங்குமிடவசதி. கட்டணம் எதுவுமில்லை. விண்ணப்பப்பத்திரம் மற்றும் விபரங்கள் அடங்கிய கைநூல் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முதலில் சுயவிலாசமிட்ட ரூபா 4-25 முத்திரை ஒட்டிய நீண்டதபாலுறை அனுப்புக. நேரில் வரவேண்டாம்.

FOREIGN ASSIGNMENTS,
CHUNNAKAM. C-746

உருக்கமான வேண்டுகோள்

அச்செழுவைச் சேர்ந்த அம்பலவாணர் அருள்நேசவாசன் என்பவரின் Honda CD 200T-84 ஸ்ரீ 5335 என்னும்நீலநிற மோட்டார்சைக்கிளை 13-2-86புதன்கிழமை முன்னிரவு 1-30 மணியளவில் இனம்தெரியாத இருவர்கள் ஆயுதமுனையில் ஓர் நீலநிற ELF வாகனத்தில் கடத்திச் சென்றுள்ளார்கள். எனவே புனிதமான இயக்கங்கள் இவற்றைக் கண்டுபிடித்து திருப்பி ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றேன்.

இப்படிக்கு
அ. அருள்நேசவாசன்.

'பூதர் வளவு'
அச்செழு, நீர்வேலி.
C-782

கருங்கேசத்துடன் இளமைத் தோற்றத்திற்கு
பீகொக்
ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான தயாரிப்பு
PEACOCK HAIR COLOR
Shampoo Formula
PEACOCK
HAIR COLOR
TRADE MARK
REG'D
PEACOCK
(POWDER)
BLACK HAIR DYE
MADE IN JAPAN

விலை ரூபா 40/- க்கு மேல

- கேசச் சாயத்துறையில் ஒரு நூற்றாண்டு அநுபவம் வாய்ந்தவர்களால் தயாரிக்கப்படுகிறது.
- இன்று உலகம் முழுவதிலும், இலங்கையிலும் பெரும்பான்மையானோர் உபயோகிக்கும் ஒரே கேசச் சாயம்.
- சாயம் பூசியபின் எண்ணெய், சவர்க்காரம் ஷம்பு எதனையும் பயமின்றி உபயோகிக்கலாம்.
- உங்கள் கேசத்திற்குப் பொருத்தமான மூன்று வர்ணங்கள், ஷாம்பு வடிவமுட்பட.

உங்கள் கேசத்தினைப் பராமரிப்போர்

ஏக இறக்குமதியாளர்கள்:

TC ராதா டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்
25, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13. தொலைபேசி: 36860

முறியடிப்பு

(மாவிட்டபுரம்)

இரவு நேரம் கடையொன்றை உடைத்து பொருட்களைத் திருடமுயன்ற திருட்டுப் பேர்வழிகளின் முயற்சி அயலவரின் சாதுரியத்தினால் முறியடிக்கப்பட்டது

காங்கேசன்துறை சந்தியில் உள்ள கடை ஒன்றுக்கு பெருந்தொகை பொருட்கள் கொண்டு வரப்பட்டதை அவதானித்த திருட்டு பேர்வழிகள் அப்பொருட்களை அன்றிரவே அபேஸ் பண்ணிவிடும் நோக்கத்துடன் நள்ளிரவு 12 மணியளவில் அங்கு வந்து தமது கைவரிசையை ஆரம்பித்தனராம்.

காங்கேசன்துறை சந்தியில் ஒருவர் நோட்டம் விட்டபடி நிற்க ஏனையோர் கடையின் கூரையை உடைத்து உள்ளே புகுவதற்கு முயன்றனராம். அச்சமயம் பார்த்து வீதியில் ஆளரவம் கேட்டு அயலவர் ஒருவர் விழித்துக் கொண்டாராம். அவர் திருட்டுப்பேர்வழிகளின் நடமாட்டத்தை அவதானித்துவிட்டு ''கள்ளன், கள்ளன்'' என கூக்குரல் இட்டாராம். கூக்குரல் கேட்டதும் திருட்டுப் பேர்வழிகள் தமது முயற்சியை கைவிட்டு ஓட்டம் பிடித்தனராம். பின்னர் அயலவர்கள் கடையை அவதானித்த சமயம் அதன் கூரை சீற்றுக்களை கழற்ற முயற்சி எடுக்கப்பட்டது தெரிந்தது. திருடர்கள் அங்கு குறடு ஒன்றையும் விட்டுச்சென்றிருந்தனராம். இத்திருட்டுப் பேர்வழிகளை இனம்காண இளைஞர் கோஷ்டியினர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

[இல 84 அ-பிரிவுகள் 524,532]

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற கரவெட்டி வடக்கைச் சேர்ந்த வல்லிபுரம் சிவலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

சிவலிங்கம் இராசலிங்கம், 48/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனுதார்.

மரணசாதன நியாதிக்கம் } இல ரி/3940

1. வல்லிபுரம் சிவலிங்கம் மகள் மலரேஸ்வரி
2. வல்லிபுரம் சிவலிங்கம் மகள் விமலகுலேஸ்வரி
3. சிவலிங்கம் சிவனேசலிங்கம்
4. வல்லிபுரம் சிவலிங்கம் மகள் சிவஞானேஸ்வரி.

அனைவரும் 48, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்.

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1986ம் ஆண்டு மாசி மாதம் 28ம் நாளன்று முற்பகல் 9.00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் [illegible]காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு.குலசிங்கம்,
பதிவாளர்.

1985ம் ஆண்டு 12ம் மாதம் 4ம் [illegible] இன்று [illegible] [illegible] [C764]

உதவிகள் செய்து உயிர் காத்தவர்

கடந்த மாதம் 27ம் திகதி அமரரான திரு. கணபதிப்பிள்ளை, இராஜதுரை. யாழ்ப்பாணத்தில் தொடக்க காலத்தில் இருந்து யானை மார்க் குளிர்பானத்தை விநியோகித்தது மட்டுமல்லாது அதைமேலும் விஸ்தரித்து 'பிள்ளையார் ஸ்ரோஸ்' என்னும் பெயரில் அவருடைய ஸ்தாபனத்தை நன்கு விருத்தியடையச் செய்து எந்தக்கஷ்டமான சூழ்நிலையிலும், அயராது துணிந்து யாழ்-கொழும்பு சேவையை நடத்தி குளிர்பானத்தை தருவித்து விநியோகித்து வந்ததோடு, யானைமார்க் குளிர்பானம் என்றால் யாழ்ப்பாணத்திலே 'பிள்ளையார் ஸ்ரோஸை' நினைக்கும் வண்ணம் சேவை செய்துள்ளார். யாழ் - கொழும்பு பஸ் சேவையையும் யாழ்ப்பாணத்திலே பிள்ளையார் ரூர்ஸ் என்னும் பெயர் சொல்லும் வண்ணம் நல்ல முறையில் செய்துவந்தார்.

கடந்த இரண்டு வருடகாலமாக யாழ்.அரசினர் வைத்தியசாலை அவசரப்பிரிவுக்காக இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் தன்னால் இயன்ற பல உதவிகளைக் குறிப்பாக பிராணவாயு மற்றும் அவசரவைத்திய சம்பந்தமான மூலப்பொருட்களை கொழும்பிலிருந்து இலவசமாகத் தருவித்தும் மற்றும் தன்னால் இயன்ற பலவழிகளில் உதவியும், பலவிலைமதிப்பற்ற உயிர்களின் நல்ஆசிகளையும் பெற்றுள்ளார். இதோடு தனது ஸ்தாபனத்தின் மூலம்

[15-ம் பக்கம் பார்க்க]

உலகப் பிரசித்திபெற்றதும்
ஸ்ரீலங்காவின் விற்பனையில்
முதன்மை பெற்றதும்

நெஷனல்

இதோ!
புத்தம் புதிய மொடல்
14" கறுப்பு வெள்ளை

பூஸ்ரர் உள்அமைந்த விசேட அமைப்பு
வெளிப்புறம் மரத்தினால் செய்யப்பட்டது
தன்னியக்க வோல்ரேச் சீராக்கி
80V — 290V அல்லது
12V கார் பற்றி

V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23447 A-215

வெளிநாட்டு பிரயாணவசதி

★ கனடா ★ அமெரிக்கா
★ இத்தாலி ★ பிரான்ஸ்
★ ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாணம் மேற்கொள்ளுவதற்கான சகலவித ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

மற்றும்

சகல நாடுகளுக்கும் விமான டிக்கட்டுகள் சலுகைக் கட்டணத்தில் பெற்றுத்தரப்படும்.

விபரங்களுக்கு:

FLY WELL TRAVELS
S-40, Bristol Street
Colombo - 1.
தொலைபேசி: 35233
A 254

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ

1-ம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி சரஸ்வதி நவரத்தினம்

(சரஸ் அன்ரி)

மலர்வு: 1912-08-10

உதிர்வு: 1985-02-16

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மகன்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

C 795

இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

செல்வி கலைவாணி அழகராஜா

தோற்றம்: 10-10-1959
மறைவு: 16-02-1984

கலா - எம்மை எல்லாம் விட்டு இறைவனடி சேர்ந்து ஆண்டுகள் இரண்டு முடிவடைந்தாலும் எம்மை விட்டு நீங்காமல் நிறைந்து இருப்பதாகவே உணர்கிறோம்.

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்,
உறவினர்கள்,
நண்பர்கள்.

கலைவாணி வில்லா,
வெளிச்சவீட்டுமுகப்பு,
கீரிமலை வீதி,
காங்கேசன்துறை.

C 644

கடையடைப்புப்பற்றி இன்று முடிவு தெரியும்!

[யாழ்ப்பாணம்]

1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ்பெறக் கோரி அ. தி. மு. க அனுசரணையுடன் 15 அமைப்புக்கள் யாழ். நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தும் 27ம் தேதியன்று, கடையடைப்பு செய்வதுபற்றி இன்று முடிவு செய்யப்படும்.

யாழ். சிவன் கோவிலடியில் இன்று பிற்பகல் பொன்.மதிமுகராசா தலைமையில் நடக்கும் கூட்டத்தில் 27-ம் திகதி பாடசாலை பகிஷ்கரிப்பு செய்யுமாறு மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுவதா என்பது பற்றியும், பஸ்,மினிபஸ் சேவைகளை அன்றைய தினம் நிறுத்துப்படி வேண்டுகோள் விடுவதா? என்பது பற்றியும், இன்று முடிவுசெய்யப்படும்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில், சுருட்டுத் தொழிலாளர் சங்கம், பஸ் ஊழியர் கழகம், தெங்கு பனம்பொருள் கூட்டுறவு ஊழியர் சமாசம், குருநகர் சனசமூக சமாஜம். செட்டிமார் மகாஜன சங்கம் தேவா நலன்புரிச் சங்கம், விவசாயிகள் சங்கம், வகுப்பு தொழிலாளர் சங்கம், கடைச் சிப்பந்திகள் சங்கம், நகைக் கடைத் தொழிலாளர் சங்கம், மினிபஸ் உரிமையாளர் சங்கம், மினிபஸ் ஊழியர் சங்கம், சுகாதார தொழிலாளர் சங்கம், யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் முஸ்லிம் அமைப்புகள் கலந்து கொள்ளுமென்று திரு. பொன் மதிமுகராசா தெரிவித்தார்.

[க]

முதலாவது பிறந்த நாள்

செல்வி சசிகலா (டயானு)

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த சித்திரவேலு [பதில் நிர்மாண வேலைகள் அத்தியட்சர் முல்லைத்தீவு] மங்கயர் தேவி தம்பதிகளின் செல்வ மகள் சசிகலா [டயானு]வின் முதலாவது பிறந்த நாளை [இன்று] 16-2-86 ல் விமரிசையாகத் தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா அண்ணன்மார். அக்காமார், தங்கைமார், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார். மாமன்மார், அத்தைமார், மைத்துனர், மைத்துணிமார், ஆகியோர் கற்பக விநாயகர் அருளால் இனிதே வளர்ந்து சிறப்புற வாழ வாழ்த்துகிறார்கள்.

[C 811]

அந்தியேட்டிக் கிரியையும் நன்றி நவிலலும்

அமரர்

சின்னையா திருச்செல்வம்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று காலை 8-00 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இதில் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டதும் ஓடோடி வந்து உதவி செய்த அனைவர்க்கும், இறுதி மரணஊர்வலத்தில் கலந்துகொண்டவர்க்கும் தாழ்மையுடன் நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

வியாபாரிமூலை,
பருத்தித்துறை.
16-02-86.

C 798

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

[இல 84 அ-பிரிவுகள் 524,532]
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற கரவெட்டி வடக்கைச்சேர்ந்த வல்லிபுரம் சிவலிங்கம் பெண் நேசம்மா என்பவரின் மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்.
சிவலிங்கம் இராசலிங்கம்.
48/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல.ரி/3939

1. வல்லிபுரம் சிவலிங்கம் மகள் மலரேஸ்வரி
2. வல்லிபுரம் சிவலிங்கம் மகள் விமலகுமலஸ்வரி
3. சிவலிங்கம் சிவனேசலிங்கம்
4. வல்லிபுரம் சிவலிங்கம் மகள் சிவஞானேஸ்வரி

அனைவரும் 4ப, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்.

மேலே உள்ள இலக்கங்கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் செத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1986ம் ஆண்டு மாசி மாதம் 28ம் நாளன்று முற்கல் 9.00மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றூனதாக்கப்படலாகாதென் பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு.குலசிங்கம்,
பதிவாளர்

1985ம் ஆண்டு மார்கழிமாதம் 4ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

[C765]

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

விடுதலை செய்யுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணத்தில் கூட்டிச் செல்லப்பட்ட இரு வர்த்தகர்களான சிவகடாச்சம், சிறிஸ்காந்தன் ஆகியோர் சுகவீனமாக இருப்பதால் திங்கட்கிழமைக்கு முன் விடுதலைசெய்யுமாறு யாழ் வர்த்தக செயலாளர் திரு எஸ். நமசிவாயம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்த வேண்டுகோளில் கூறப்பட்டிருப்பதாவது: ''இம் மாதம் 7ம் திகதி வானில் கூட்டிச்செல்லப்பட்ட இரு வர்த்தகர்களான சிவகடாச்சம், சிறீஸ்காந்தன் ஆகிய இருவரும் சுகமில்லாமலும் மனவேதனையுடனும் இருப்பதாக அறிகிறோம். அவர்கள் இருவரையும் மனிதாபிமானத்துடன், கூட்டிசென்றவர்கள் திங்கட்கிழமைக்கள் (17 ம் திகதி) விடுதலை செய்து விடுமாறு மீண்டும் மிகவும் தாழ்மையுடன் யாழ். வர்த்தக சங்க செயற்குழு சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.''

அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை றோமன் சத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவரும் பாடசாலை அதிபருமான திரு. ஏ. எஸ். லோறன்ஸ் தலைமையில் எதிர்வரும் 22-ம் திகதி நடைபெறவுள்ளது.

உதவிகள் செய்து

(14-ம் பக்கத்தொடர்ச்சி)

பலரிற்கு வேலைவாய்ப்பளித்து அதன் மூலம் பல குடும்ங்கள் வாழவும் வழிசெய்துள்ளார். அவரின் சொந்த ஊராகிய வேலணையில் பிள்ளையார் கோவில்ராஜகோபுரதிருப்பணியையும் நன்கு செய்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது இன்று அவரது இல்லத்தில் சபிண்டீகரணம் நடைபெறுகிறது.

-ஊழியர்கள்.

தேவை

நல்ல நிலையிலுள்ள வொக்ஸ்வகன் அல்லது மொறிஸ் மைனர் அல்லது போட் பிறிபக்ட் கார் விற்பனைக்கு இருப்பின் (டக்ஸிகள் தவிர) தொடர்புகொள்ளவும்.

வே. ஸ்ரீஸ்காந்தா,
சிவன் மாளிகை லிமிட்டெட்,
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23837.

C-805

தேவை

அச்சு உபகரணங்கள்

பாவித்த ரைப்கேஸ்கள், ஸ்ரான்ட், வேறு அச்சு யந்திரசாலைக்கு ஏற்ற உபகரணங்கள் விற்பனைக்கு நல்லநிலையில் இருப்பின் நேரடியாக தொடர்புகொள்ளவும்.

வே. ஸ்ரீஸ்காந்தா,
சிவன் மாளிகை லிமிட்டெட்,
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23837.

C-806

மாணவ மாணவியருக்கோர் அறிவித்தல்

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன
உடன் பதிவு செய்துகொள்ள

டிப்புளோமா பரீட்சை பாமஸி வகுப்புகள்
Saturday — Sunday — 15-2-86
டிப்புளோமா பரீட்சை தாதிப் பயிற்சி நெறி
Saturday — Sunday 15-2-86
ரேடியோ TV — 15-2-86
I. D. P. M. Part I and II - 14-2-1986
(Computer)
I.C.M.A. - Foundation A, B, P. I, P II — 15-2-86
Charted Licenciate 15-2-1986
A. A. T. Prelim — 17-2-1986 ஆரம்பம்
A. A. T. Inter — 15-2-1986
மோட்டார் மெக்கானிசம் —17-2-1986 ஆரம்பம்
வெல்டிங் வகுப்புகள் — 17-2-1986 ஆரம்பம்
English, Spoken Grammer ஆங்கில வகுப்புக்கள்
காலை 8-30 — 11-00 Batch No. I } 17-2 86
4-00 — 5-30 Batch No II } ஆரம்பம்
Saturday — Sunday 1-00—2-30 Batch III } 15-2-86
2-30—4-30 Batch IV } ஆரம்பம்

மத்திய இலங்கையில் பெயர்பெற்ற ஆங்கில ஆசிரியரால் N C. E. English பரீட்சைக்கு விரிவுரைகள் நடத்தப்படும். மாதக் கட்டணம் ரூபாய் 40/- மட்டுமே. உடன் ஆரம்பம்.

நோத் சிலோன் ரெக்னிக்கல் இன்சிரியூட்,
14, சென் பீற்றஸ் லேன்,
O. L R. தேவாலயத்திற்கு முன்பாக
ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 24355

A 255

மின்தறி நெசவாளர் தேவை

பண்டத்தரிப்பில் அமைந்துள்ள நெசவுத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு அனுபவமுடைய நெசவாளர் தேவை.
மேற்படி பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்காக எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் காலை 9-00 மணிக்கு பண்டத்தரிப்பு நெசவாலைக் காரியாலயத்தில் சமுகம் அளிக்கவும்.

Solid Engineers,
PANDATHERUPPU.

[A-2341]

ஈழநாடு வார மலர்

THE EELANADU VARAMALAR

‘கைலாஸ்: நவீன இலக்கியத்தின் கதாநாயகன்’

[யாழ்ப்பாணம்]

“நவீன இலக்கியத்தின் கதாநாயகன் கைலாசபதி. சிறந்த விமர்சகராக விளங்கிய கைலாஸ் மார்க்ஸீய விளக்கங்கொடுத்து விமர்சனம் செய்த பெருமைக்குரியவர். 1956 முதல் தேசிய பண்புகளை வளர்த்தவர்’-

இவ்வாறு பேராசிரியர் கைலாசபதி அவர்களின் நினைவுப் பேருரை நிகழ்த்தும் போது பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிட்டார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் கலைக் கழகத்தினரும் இணைந்து யாழ் பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் நடத்திய இந்த நினைவுப்பேருரைக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வித்தியானந்தன் தலைமை வகித்தார்.

நினைவுப்பேருரை நிகழ்த்திய பேராசிரியர் சிவத்தம்பி மேலும் கூறியதாவது:

“இலங்கையில் இன்று வடக்கு-கிழக்கு வாழ் மக்களும் அண்மைக்காலத்திலிருந்து மலையக மக்களும் இதுவரை காணப்படாத போராட்ட உணர்வு பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர் வெளி மட்டப்பார்வைக்கு அரசியல் பேசிய அரசியல்கட்சிகள் இன்று செயலிழந்து காணப்படுகின்றன. இளைஞர்களின் பிரவேசம் அரசியலில் புதிய கோண அணுகுமுறைகளை ஏற்படுத்தியுள்ளது. திடீரென இன்று ஏற்படுத்தப்பட்டுவரும் சமூகத்தின் மாற்றங்களைவிரும்பாத தமிழ் மக்களும் இருக்கவே செய்கின்றனர்.”

நினைவுப் பேருரைக்குத் தலைமை வகித்துப் பேசும் போது துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூறியதாவது:

நவீன தமிழிலக்கியத் திறனாய்வாளன் என்ற வகையில் பேராசிரியர் கைலாசபதி நவீன இலக்கியகாரர் பலருக்கும் திசையறி கருவியாகப் பயன்பட்ட பெருமைக்கு உரியவர். சமகால இலக்கியப் போக்கின் நாடித் துடிப்பை இனங்கண்டு செயற்பட்டவர். தமிழாராய்ச்சித் துறையிலும் நவீன தமிழ் இலக்கியத் திறனாய்வுத் துறையிலும் காத்திரமான பங்களிப்புக்களைச் செய்த கைலாசபதி தமக்கெனத் தனியான கோட்பாடுகளைக் கொண்டிருந்த போதிலும் தமது கருத்தோடு உடன்படாதோரையும் இலக்கியக்காரர், ஆய்வாளர் என்ற வகையில் நேசித்தார். எல்லோரையும் அரவணைத்துவழி நடாத்தும் பண்பினராகத் திகழ்ந்தார்.”

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க சார்பில் ‘ஈழத்துச் சோமு’ வைபவத்தை ஆரம்பித்து வைத்துப் பேசினார். [ஜ]

“இளந் தலைமுறையை நேசித்தவர்”

[யாழ்ப்பாணம்]

“அரசியல் வாழ்க்கையில் அமரர் கணேசலிங்கம் நேர்மையுள்ள சிறந்த போராளியாகத் திகழ்ந்தவர். தனது இனத்தின் இளந் தலைமுறையினரின் மீது அவர் கொண்ட அளப்பரிய அன்பின் காரணமாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பரிபூரணமாக எதிர்த்தார்.”

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறுவதாவது:

“பட்டிருப்புத் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் கணேசலிங்கத்தின் மறைவு குறித்துத் தமிழ்க் காங்கிரஸ் தமிழ்த் தேசியஇனத்துடன் சேர்ந்து தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது.

‘தனிப்பட்ட வாழ்க்கையில் அமரர் கணேசலிங்கம் ஒரு உண்மையான விசுவாசமுள்ள நண்பராக விளங்கினர்.

1982 ஆவணி மாதத்தில் அவர் சார்ந்திருந்த அரசியல் கட்சி ஜனதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசிய இனம் பங்குபற்றக் கூடாது எனவும், அத்தேர்தலில் போட்டியிட்ட ஒரே தமிழ் அபேட்சகருக்கு வாக்களிக்கக் கூடாது எனவும் எடுத்த உத்தியோக முடிவை அமரர் கணேசலிங்கம் வெளிப்படையகா எதிர்த்தார்.

“மிக நெருக்கடியான இக்கால கட்டத்தில் அமரர் கணேசலிங்கத்தின் மறைவு அவருடைய இளமையான குடும்பத்துக்கும் தமிழ்த் தேசிய இனமான பெரிய குடும்பத்திற்கும் ஈடு செய்யமுடியாத இழப்பாகும்.”

ஆறு லட்சம் கொள்ளை!

(வேலணை)

ஆயுத பாணிகளாக வந்த சில இனந் தெரியாத இளைஞர்கள் 6 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் உபகரணங்கள் உட்பட ரொக்கப் பணத்தையும்கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

மேற்படி சம்பவம் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கனரட்ணம் என்பவரின் வீட்டிலேயே நிகழ்ந்துள்ளது. இவர் இப்பகுதி மக்களுக்கு வட்டிக்குப் பணம் கொடுப்பவராம்.

நேற்று முன்தினம் இரவு பத்தரை மணியளவில் சீருடையில் வந்த 15 க்கும் மேற்பட்டவர்கள் கனகரட்ணத்தின் வீட்டுக்குள் வந்து அவரைத் துப்பாக்கி முனையில் மிரட்டி அறைக்குள் தள்ளிப் பூட்டியுள்ளனர். பின்னர் மகன் சச்சிதானந்தத்தைத் துன்புறுத்திக் குப்புறப் படுக்கச் சொல்லிவிட்டு வீட்டிலிருந்த டி.வி. டெக், வானொலி மற்றும் பல்வேறு மின்சார உபகரணங்கள் நகைகள் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இவர்கள் சிங்களத்திலேயே பேசினராம்.

இக் கொள்ளையைக் கண்டித்து ஊர்காவற்றுறை மக்கள் ஊர்காவற்றுறை - சுருவில்வீதியில் வீதித் தடைகளைப்போட்டு தமது எதிர்ப்பைக் காட்டியதாகத்தெரிவிக்கப்பட்டது.

நேற்றும் பெண்கள் கைது!

(மூதூர்)

மூதூரில் நேற்றும் இரு இளம்பெண்களும், மூன்று இளைஞர்களும் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ய-மா)

ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் பருத்தித்துறைக் கிளை அலுவலகங்களை பாதுகாப்புக்கருதி அங்கிருந்து வேறிடங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கு பருத்தித்துறை பகுதியிலுள்ள பொது ஸ்தாபனங்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

இவ்வலுவலகங்களில் உள்ள தளபாடங்களை நேற்று எடுத்துச் செல்வதற்கு அலுவலக உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட முயற்சி, பல பொதுமக்களின் தலையீட்டினல் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

மோசடிகள் மத்தியில் மார்க்கோஸ் முன்னணியில்

[மணிலா]

பிலிப்பைன்ஸ் ஜனதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனதிபதி மார்க்கோஸ் 15லட்சம் வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளதாக நாடாளு மன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளபொழுதிலும், தேர்தல் முடிவுகள் குறித்து உத்தியோகபூர்வ ரீதியில் திட்டவட்டமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதனிடையே நேற்றுக் கூடிய பிலிப்பைன்ஸ் மேற்றிராணிமார் இத்தேர்தலில் கொலை, ஆள்மாருட்டம் மற்றும் பல்வேறுமோசடிகள் நடந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

தீவுப்பகுதிப் போக்குவரத்து ஸ்தம்பிதம்

[மண்டைதீவு]

பண்ணைத் தாம்போதிக் கேடர்கள் சரிந்துள்ளதால் தீவுப்பகுதி வாசனப்போக்குவரத்து முற்ருகத் தடைப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை தீவுப்பகுதியின் சகல பாதைகளிலிருந்தும் யாழ்ப்பாணம் நோக்கிவந்த வாகனங்கள் இப்பாலத்தைக் கடக்கமுடியாது பிரயாணிகளை இறக்கிவிட்டுத் திரும்பின.

ஆபத்தான நிலையில் இந்தச் சங்கிலிப்பாலம் இருப்பதாலும் கேடர்கள் குறுக்கே விழுந்துள்ளதாலும் எந்தவித வாகனங்களும் இப்பாலத் கடக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இதுவிடயமாக தீவுப்பகுதி பொது ஸ்தாபனங்கள் பலவற்றினல் பெருந்தெருக்கள் பொறியியலாளருக்கு தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை “ஈழநாடு” லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1[illegible]-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 003/81 Eelanadu P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone 22389, 23128

இராணுவ முகாமைச் சுற்றி..

[யாழ்ப்பாணம்]

பலாலி இராணுவ முகாம், ஆகாயப்படை முகாம் சுற்றுவட்டத்திலுள்ள ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக அச்சுற்று வட்டாரத்திலுள்ள கிராமங்களின் பிரஜைகள் குழுக்கள் அதனல் தமக்கேற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து நேற்றுக்கூடி ஆலோசனை நடாத்தினர்.

இப்பாதுகாப்பு வலயத்தினுள் குரும்பசிட்டி, கட்டுவன் ஆகிய கிராமங்களின் பெரும்பாலான பகுதி அடங்குகிறது. இவ்வலயத்துக்கான நில அளவைப் பங்கீடு இன்று அல்லது நாளை நிலஅளவை அதிகாரிகளினல் மேற்கொள்ளப் படலாம் எனத் தெரியவருகிறது. [மா]

மரண அறிவித்தல்

இராமநாதர் சரவணமுத்து

நயினதீவு 2-ம் வட்டாரத்தைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் வ இ. சரவணமுத்து 15-02-86 சனிக்கிழமை காலமானர். இவர் ருக்குமணியின் அன்புக் கணவரும், சுகுண, சுவர்ண, சுசீலா ஆகியோரின் அன்புத் தந்தையும், மெய்யழகன், பிரேம் குமார் ஆகியோரின் அன்பு மாமனரும், பாபுஜீ, சுரஞ்ஜி ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னரின் ஈமக் கிரியைகள் 16-02-86 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் நயினதீவில் நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

(C 816)

சரவணையூர் திருமதி சற்குணவதி சாம்பசிவம்

சரவணையூரைச் சேர்ந்த திருமதி சற்குணவதி சாம்பசிவம் காலமாகிவிட்டார். இவர் சாம்பசிவத்தின் அருமை மனைவியும், கவிதா, சசிகரன் ஆகியோரது அருமைத்தாயாரும், காலஞ்சென்ற ஆறுமுகம், சின்னச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லப்பா, கமலம் ஆகியோரது மருமகளும், வவுனியா வர்த்தகர் பஞ்சாட்சரத்தின் அன்புச் சகோதரியும், இராசமலரின் மைத்துனியும், பகிரங்கன், தனரங்கன், கிருபரங்கன், அருள்ரங்கன் ஆகியோரின் மாமியுமாவார். ஈமக்கிரியைகள் 16-02-86 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது சரவணை இல்லத்தில் நடைபெறும்,

(C 794)

தகவல்: ஆ. பஞ்சாட்சரம்.

அருளையா நாகேஸ்வரிதேவி

புங்குடுதீவைச் சேர்ந்த மலாய் வர்த்தகர் காலஞ்சென்ற திரு. M. K. அருளையாவின் அன்பு மனைவி நாகேஸ்வரிதேவி காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திருச்செல்வம், திருமதி அருட்செல்வம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கோணேஸ்வரன் (கூட்டுறவு பரிசோதகர்) அவர்களின் அன்பு மாமியாரும், சிவாஜினி, சிறீதரன், சுபாஜினி, சுபாதரன், சுதன் ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார். அன்னரின் பூதவுடல் 28ம் இலக்கம் அரசடி வீதி, தட்டாதெரு யாழ். இல்லத்திலிருந்து 16-02-86 ஞாயிற்றுக்கிழமை (இன்று) காலை 10-00 மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். சி. கோணேஸ்வரன்.

(C 813)

முத்துக்குமாரு செல்வத்துரை

கொய்யாத்தோட்டம் இலக்கம் 1, புதிய வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய அரசஉப்பள திணைக்கள பிரதம லிகிதரும், சுண்டிக்குளி ‘செறில்ஸ் பார்மசி’ காசாளருமான முத்துக்குமாரு செல்லத்துரை அகால மரணமானர். இவர் பாக்கியத்தின் அன்புக்கணவரும், இமானுவல். செல்வமலர், கபிரியல் மேசி, றஞ்சி, ரஞ்சன், வின்சன்ட், வசந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சோதி, செல்லத்தம்பு குஷா, மரியநாயகம், பாலாம்பிகை, யசிந்தா, ஜெயசீலன் ஆகியோரின் மாமனரும், அல்பேட், சங்கைக்குரியசகோதரி இளசன்சியா, இராசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நேசம், மாக்கிரட், காலஞ்சென்றவர்களான பற்றிக், யோசெப், அலோசியஸ் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னரின் இறுதி ஆராதனை இன்று (16-02-1986) மாலை 4 மணியளவில் கிறீஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்று நல்லடக்கம் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இடம்பெறும்.

C 818

தகவல்: கபிரியல்.

மயில்வாகனம் கனகரத்தினம்

சுன்னகம் புகையிரதநிலைய ஊழியர் மயில்வாகனம் கனகரத்தினம் அகால மரணமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற மயில்வாகனம், திருமதி நாகம்மா ஆகியோரின் அன்புப் புதல்வனும், கொழும்பு வில்லியம் ஏஜன்சீஸ் இலிங்கம்(ராஜன்), சிவபாக்கியம், சரோஜாதேவி, சாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சேதுராசா, ஜெயவேல்சிங்கம் (புகையிரதப் பகுதி, காங்கேசன்துறை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கந்தசாமியின் (வர்த்தகர்-யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி அருகாமை) பெருமகனும் ஐயம்பிள்ளை பாக்கியத்தின் மருமகனுமாவார். இறுதிக் கிரியைகள் சுன்னகம் புகையிரத குவாட்டர்சில் நடைபெற்று இன்று 16 2-86 பி.ப 3.30 மணிக்குச் சுன்னகம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

(C 819)

தகவல்: க. ஜெயவேல்சிங்கம்